உ

ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநுமத் ஸமேத

ஸ்ரீ ராமசந்திராய

பரப்ரம்மணே நம:

ஸ்ரீமத்

வான்மீகி முனிவர் அருளிச் செய்த

அற்புதராமாயணம்.

S. ராஜாசாஸ்திரியாரால்

ஸமஸ்கிருதத்திலிருந்து

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

சென்னை, திருவல்லிக்கேணி

“வாணீபூஷணம்” பிரஸ்ஸில்

பிரசுரிக்கப்பட்டது.

1911

விலை அணா 10.

உ

முகவுரை

இராமாயணமென்னும் இதிகாசத்தை வான்மீகி முனிவர் அருளிச் செய்தனரென்பது நாம் எல்லோரும் அறிந்தவிஷயம். அது நூறுகோடி கிரந்தங்களென்பதும் அந்த கிரந்தங்கள் பிரமலோகத்திலிருக்கின்றனவென்பதும் ஆநந்த ராமாயணம் முதலிய நூல்களால் வெளியாகின்றன. நூறு கோடி கிரந்தங்களின் ஸாராம்சமானது, இருபத்தையாயிரங் கிருந்தங்களாகத் தொகுக்கப்பட்டு இருபத்து நாலாயிரங் கிரந்தங்கள் இப்பொழுது இப்புவியில் வழங்கிவரும் வான்மீகி ராமாயணமென்னும் இதிகாசத்திற் பெறப்படுகின்றனவென்றும் அந்த ராமாயணம் ஏழு காண்டங்களுள் கடைசிக் காண்டமாகிய உத்தர காண்டத்தின் மிகுதியே இந்த அற்புதராமாயணமென்றும் இதில், பாக்கியுள்ள ஆயிரம் கிரந்தங்களுள்ளனவென்றும் இந்த இதிகாசம் பேசுகின்றது.

இந் நூலில் இதன் பெயருக் கேற்றபடி விஷயங்களும் பெறப்படுகின்றன. இதில் முக்கியமாய் விவரித்துள்ளவைகள் சீதா பிராட்டியின் ஜனனமும் இருபத்து நாலாயிரங் கிரந்தங்களுட் சொல்லப்படாத சீதா தேவியின் மகிமையுமே யாம். இதிற் காணப்படும் ஸஹஸ்ரமுக ராவணனுடைய சரிதம் படிப்பவர் மனதிற்குப் பயமும் வியப்பும் உண்டாக்கக் கூடியதாக விருக்கும்.

இவைகளன்றி இதில் நாம் முக்கியமாய்க் கவனிக்கத்தக்கது பிரமமே ஸ்ரீ ராமனென்றும் மூலப்ரகிருதியே சீதை யென்றும்

விளக்கியிருக்கும் விஷய மாகும். சதகோடி கிரந்தங்களின் விவரம் ஆநந்தராமாயணத்தில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அற்புத ராமாயணத்தில் ஆயிரத்து முந்நூற்றைம்பத்து மூன்று கிரந்தங்களடங்கியிருக்கின்றன. அந்த கிரந்தங்கள் இருபத்தேழு சருக்கங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

நமது தமிழ் நாட்டு ஸ்திரீ புருஷர்கள் யாவரும் படிக்குமாறு கிரந்த சுலோகங்களை யொட்டியே இப்புத்தகம் எளிய தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள இத்தகைய அரிய பல நூலையும் அவ்வப்போது வெளியிட்டு நம்தமிழ் நாட்டுக்குதவவேண்டு மென்கிற எண்ணங் கொண்டு, இந்நூல் முதன் முதலில் பிரசுரிக்கப்பட்டது. எனக்குத் தமிழில் விசேஷமான பழக்கமில்லை யாதலால், எமது நண்பர் வரகவி-திரு-அ-சுப்பிரமணிய பாரதியார் உதவியைக் கொண்டு எழுதி வெளியிடலானேன்.

இந்த இதிகாசத்தைச் சரியான தமிழில் எழுதியும் பரிசோதித்தும் உதவிபுரிந்த பாரதியாரவர்களுக்கும் அவ்வப்போது எமக்குச் சந்தேகந் தோன்றியவிடத்து அச்சந்தேக நிவர்த்தி செய்துதவிய மகா-ஈ-ஈ ஸ்ரீ ராமாயணம் நடேச சாஸ்திரியார் அவர்களுக்கும் நன்றி மறவாமைக்குக் கடமைப்பட்டவனாகவிருக்கிறேன்.

இதிற் குற்றங்களிருப்பினும் பெரியோரவைகளைப் பொருட்படுத்தாது இராம பிரானது மகிமையை விளக்கும் நூலென்பதைக் கருதி ஆதரித்துவர வேண்டுகிறேன்.

S. ராஜாசாஸ்திரியார்.

உ

அட்டவணை.

உ

ஸ்ரீமத் வான்மீகி முனிவ ரருளிச்செய்த
இராமாயணம் பலவற்றுள்
ஒன்றாகிய

அற்புதராமாயணம்.

காப்பு.

வடவரை யேடாக் கொண்மேருப்பெழுத் தாணி தொட்டுத்
தொகேட லுலகு சொல்லத் தூயபா ரதநூ றந்த
திடமுடை யானை யானைத் திருமுகம் படைத்த வாதிக்
கடவுளைத் தொழுவா மென்றுங் கருத்திருந் தருளு மாறே

நாராயணன்—நரன்—நாமகள்—வியாசர்

வணக்கம்.

நாரணன் நரனின் மேலோ னான்முக னுவின் மேவு
காரணிசகல வேத கலையுணர் வியாச ரின்னோர்
சீரணி கமல பாதஞ்சிரமிசை யணியாக் கொண்டு
பேரணி வெற்றி நூலைப் பேசுவாம் ப்ரபஞ்ச மீதே

வான்மீகிமுனிவர்

வணக்கம்.

முனிவர்க் கிறைவனை மோகமில் லானைமா
புனிதனைப்பொறை யாளனைத் தேசொளி
கனியு மேனிக் கவிஞன்வான் மீகியை
மனதின்மாசக லத்தொழு வாமரோ

ஸ்ரீ இராமபிரான்

வணக்கம்.

ஸ்ரீலநான் மறைக டந்த தேவனுந் தேவர் கோனும்
ஞாலமுர் வானும் வாழ ஞானியர் புகழ்ந்து போற்ற
வேலைசூ ழிலங்கை வேந்தர் வீரழித் தழியா வெற்றி
மாலைசூ டியவி ராமன் மலரடி முடிமேற் கோள்வாம்

மங்களவாழ்த்து.

ஒருதனித் திகிரி யோச்சி யுலகினைப் புரந்த மன்னன்
றருமொரு மதலை யாகித் தசரத ராம னென்னும்
ஒரு பெயர் பெற்றந் நாம முவந்துமே யோது வார்க்குப்
பெருமித வாழ்வு நல்கும் பிரானருள் பெருக மாதோ

நூல்

நீர்வளமலிந் திடையறா தொழுகும் தமஸாநதிதீர வாசியும் தவத்திற் கிருப்பிடமாக விளங்குகிறவரும் கிரந்தங்களுக்கு ஆதிகர்த்தரும் முனிபுங்கவரும் தமது ஆசிரியருமாகிய வான்மீகிமுனிவரை அவரது மாணாக்கராகிய பாரத்வாஜ முனிவர் கைகுவித்து வணங்கி விநயத்துடன் வினவுகிறார்.

"மகரிஷியே! தங்களாலியற்றப்பட்ட சதகோடி கிரந்த விஸ்தாரமுள்ள இராமாயண மென்னும் இதிகாசம் பிரமலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறதல்லவா? அதன் ஓர் பாகமாகிய இருபத்தையாயிரம் கிரந்தங்கள் இந்தப் புவனங்களிலுள்ள அந்தணர்கள், ரிஷிகள், பிதிர்க்கள், தேவர்கள் முதலியவர்களால் நாடோறும் விசேஷத்துடன் பாராயணஞ் செய்யப்படுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தச் சதகோடி கிரந்த விஸ்தாரமுள்ள இராமாயணத்தில் எதைப் பாராயணம் செய்தால் பாவங்களைக் கடந்து சுகமுறலாம்? தயைகூர்ந்து அதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றார்.

இதைச் செவியுற்ற வான்மீகிமுனிவர் சதகோடி விஸ்தார முள்ள இராமாயணம் முழுவதையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தமது திருவுள்ளத்திற்குக் கொணர்ந்து "ஓம்" என்று கூறி தமது மாணுக்கனுகிய பாரத்வாஜ முனிவரைப்பார்த்து "ஏ பார த்வாஜ! நீ நீடூழி வாழ்வாயாக" நீ வினவிய விஷயம் தெரிந்து கொண்டேன். சதகோடி கிரந்த விஸ்தாரமுள்ள இராமாயணத் தின் ஓர் பகுதியாகிய இருபத்தையாயிரம் கிரந்தம் இப்பூவுலகில் பிரசாரமாகி வருகிறதல்லவா? அதில் மானிட சுபாவத்திற்கு இணங்க இரகுபுங்கவனது சரித்திரம் ஆச்சரியகரமாக விளக்கப் பட்டிருக்கிறது. ஆனுல் சீதாதேவியின் மகிமையானது ஓர் சிறி தும் விளக்கப்படவில்லை. அதை உனக்குக் கூறுகிறேன். நீ சாவ தானமான மனதுடனிருந்து கேள்:—

மூலப்பிரகிருதியாகிய சீதாதேவியின் திவ்யசரித்திரம் பிர மனது கிருகத்தில் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆச் சரியம்! ஆச்சரியம்!! எனக்கு அனுகூலனும் பிரிய மாணுக்கனு மாகிய உனக்கு அதைக் கூறுகிறேன்:—

ஜானகி பிரகிருதிரூபி, படைப்புக்கு முதற்காரணமாயிருப்ப வள், குணரூபீ, தவத்திற்குப் பலனுயிருப்பவள், சொர்க்கத்தை யளிப்பவள், ஐசுவரியசொரூபி, அறிவுருவமானவள், வித்தையும் மகாவித்தையுமா யிருப்பவள், இந்த பிர்மாண்டத்தை யுண்டாக் கினவள், இந்த வுத்தமியே பிருகிருதியும் விகிருதியுமாய் விள ங்குபவள், தேவீ, சித்சொரூபீ, சித்விலாஸினீ; மகாகுண்டலினீ பிர்ம சொரூபிணீ, எங்கும் வியாபித்திருப்பவள் என உலக மாதா வாகிய சீதாதேவியை வேதாந்தங்களை யுணர்ந்த ஞானிகள் புகழ் கிறூர்கள்.

இந்த மகா தேவியி னிடத்திலேயே ஸ்தாவரஜங்க மாத்மக மான இந்த உலக முழுவதும் அடங்கியிருக்கின்றது. மெய் ஞானி களாகிய யோகிகள் பிருகிருதி ரூபமாய் விளங்காநின்ற சீதா தேவியை இருதயத்தில் தியானஞ் செய்து பந்தங்களிலிருந்து விடு பட்டுச் சுகமடைகின்றூர்கள். எப்பொழுது தர்மத்திற்குக் குறை வும் அதர்மத்திற்கு விருத்தியும் ஏற்படுகிறதோ அப்பொழுது

பிரகிருதி சொரூபியாகிய தேவி ஆவிர்ப்பாவ மடைவாள். இராம பிரானேவெனில் அவர் பரஞ்சோதி, பரந்தாமன், பரம புருஷன் ஆகையால், சீதாராமர்களுக்குள் பேதங் கிடையாது. இந்த உண்மையை யுணர்ந்த சாதுக்கள் மெய் ஞானமடைந்து, யமனது முகம் போன்ற ஸம்ஸார சாகரத்தைக் கடக்கிறார்கள். இந்த இராமச்சந்திர பிரபு அநித்தியன், அழிவற்றவன், சித்சொரூபி, சர்வசாக்ஷி, சர்வாந்தர்யாமி, இவனே உலகங்களை ஆக்குபவன், இவனே காப்பவனும் அழிப்பவனுமாகிறான். இவன் ஆநந்த சொரூபி மாட்சிமை பொருந்திய மகானுபாவன், இந்தஇரகு புங்கவர்க்கு இவ்வள வநந்தம் மகிமையும் சீதா தேவியின் சேர்க்கையாலேயே எற்படுகிறதென யோகிகள் கருதுகின்றார்கள். இந்த இராமன் காலையற்றவன். ஆனால் நிரம்பவேகமாக நடப்பவன். கைநீட்டிப் பெற்றுக் கொள்பவன். இவனுக்குக் கண்களில்லை. ஆனால் நன்றாகப் பார்ப்பவன். இவனுக்குச் செவியில்லை. ஆனால் நன்றாகக் கேட்பவன். பிரபஞ்ச முழுவதையும் அறிந்தவன். ஆனால் இப்பிரபஞ்சத்தில் ஒருவராலும் அறியப்படாதவன். ஞானிகள் இந்த இரகுவீரனைப் புராண புருஷனென்றும் ஆதி முதல்வனென்றும் கூறுகிறார்கள். காரணார்த்தமாகச் சரீரத்தை யடைந்த இந்த சீதாராமர்களுடைய உற்பத்தியைக் கூறுகிறேன். ஆன்மகோடிகளின் க்ஷேமத்தின் பொருட்டே அரூபிகளாகிய இவர்கள் ரூபந்தரிக்கிறார்கள்.

இந்த இராமாயணத்தைப் பிராமணன் படித்தானாகில் ,நன்றாகப்பேசும் வல்லமையை அடைவான். க்ஷத்திரியன் படிப்பானாகில் சக்ரவர்த்தித் தன்மையைப் பெறுவான். வைசியன் படிப்பானாகில் வியாபாரத்தில் லாபமுறுவான். சூத்திரன் படித்தால் தன் குலத்தாருள் மேன்மையடைவான்.

வான்மீகிமகரிஷி யருளிச்செய்த

ஆதிகாவியமான ஸ்ரீமத் ராமாயணத்தின்

அற்புதோத்திரகாண்டத்தின்

முதற் சருக்கம்

முற்றிற்று.

இரண்டாவது

சருக்கம்.

ஏ பாரத்வாஜ! மகா சமுத்திரத்திற் கொப்பாகிய இக்ஷுவாகு வம்சத்தில் இராமபிரான் பிறந்ததற்குக் காரணத்தையும் சீதா தேவி இந்தப் புவியில் பிறந்ததற்குக் காரணத்தையும் கூறுகிறேன். முதலில் இராமச்சந்திருடைய உற்பத்தியின் காரணத்தைத் தெரிவிக்க, அம்பரீஷ மகாராஜனுடைய சரித்திரத்தைக் கூறுகிறேன்.

திரிசங்கு மகாராஜாவுக்கு சர்வ இலட்சணங்களும் பொருந்திய பத்மாவதி யென்னும் பெயர்கொண்ட ஒரு மனைவியிருந்தாள். பத்மாவதி, சேஷபரியங்கத்தில் யோக நித்திரை செய்பவரும் புருஷோத்தமரும் நாராயணனென்னும் நாமமுடையவரும் பிர்ம்மாண்டமாகிய தாமரைமலரை யுண்டாக்கினவரும் தமோ குணத்தை வகித்திருக்கும் போது கால ருத்திரனாகவும் ரஜோ குணத்தை வகித்திருக்கும் போது சொர்ணமயமான பிர்மாண்டத்தைச் சிருஷ்டிப்பவராகவும் சத்துவ குணத்தை வகித்திருக்கும் போது விஷ்ணுவாகவுமிருந்து எல்லாராலும் வணங்கப்படுகிற பரம புருஷனைச் சதாகாலமும் மனம், வாக்கு, காயம் முதலியவைகளால் பூசித்து வந்தாள். இவ்வுத்தமி ஈசுவர ஆராதனைக்குரிய வைகளான, பூத்தொடுத்தல், சந்தனமரைத்தல், நிவேதனம் தயாரித்தல் முதலியவைகளைத் தானே அன்புடனும் அகமகிழ்வுடனும் செய்து வந்தாள். இந்தப் புண்ணியவதி சதாகாலமும் நாராயணா! அநந்தா! என்று பகவானது திவ்யதிருநாமங்களை உச்சரித்துக் கொண்டு பதினாயிர வருஷகாலம் நாராயண மூர்த்தியை ஆராதித்து வந்தாள். சகல பாபங்களிலிருந்தும் விடுபட்ட விஷ்ணு பக்தர்களுக்குக் கந்தம் புஷ்பம் முதலியவைகளளித்துப் பூசித்து, அவர்கள் விரும்பும் பொருள்களையும் அவர்கள் உள்ளம் மகிழ்வுறவளித்துச் சதாகாலமும் உபசரித்து வந்தாள்.

இவ்விதம் சிலகாலம் சென்றன. பிறகு ஒருநாள் பத்மாவதி தன் நாயகனுடன் ஏகாதசி யன்று உபவாசமிருந்து மறுநாள் துவாதசி தினம் பக்தகோடிகளுக்கு அன்போடு அன்னமளித்துப் பின் தானும் புசித்துப் பகவானது ஸந்நிதானத்திற் படுத்து நித்திரை செய்தாள். இப்பொழுது பக்த பராதீனனுகிய பகவான் நாராயணமூர்த்தி பத்மாவதியின் கனவிற்றோன்றி "மாதரசே! நீ வேண்டும் வரம் யாது? தெரிவிப்பாயாகில் அதை இச்சமயம் கொடுக்கிறேன்" என்றூர். இதையறிந்த பத்மாவதி பரந்தாமனை வணங்கி "ஈசா! நின்பால் அன்புடையவனும் சக்ரவர்த்தித் தன்மைக்குரியோனும், மகா தேஜஸ்வியும், தன் ஒழுக்கத்தினின்றும் தவறுத குணமுடையவனும், சதாசாரசீலனுமாகிய ஓர் புத்திரனை யடையக் கிருபைசெய்யவேண்டும்" என்னும் வரத்தைக் கோரினுள். உடனே பகவான் "நின்கோரிக்கை நிறைவேறுக" என்று கூறி ஒருகனியைப் பத்மாவதியின் கரத்திலளித்து அக்கணமே மறைந்தார்.

உடனே பத்மாவதி நித்திரையினின்று விழித்துக் கொண்டு தன் கையிலிருக்கும் கனியைக்கண்டு மகிழ்ந்து தன் நாயகனை எழுப்பி அவருக்கு ஜகதீசனது திருவருளைக் கூறி, அவர் அளித்த தீங்கனியையுங் காண்பித்துப் பரமாநந்தமடைந்தாள். அக்கனியை அக்கணமே பரந்தாமனது திருவடியைத் தியானித்துக் கடித்துப் புசித்தனள். பிறகு பத்மாவதி கருப்பந்தரித்துக் காலக் கிரமத்தில் குலத்தை விருத்திக்குக் கொண்டுவரத் தக்க ஓர் சத்புத்திரனை யீன்றுள். உத்தம இலட்சணம் அமையப் பெற்று சக்கிராங்கிதனுக விளங்கும் குழந்தையைக்கண்ட தந்தை மகிழ்ந்து அந்தணர்களுக்குத் தான மளித்து, ஜாதகர்மாதிகளைச் செய்து அம்பரீஷன் என்னும் திருநாமமும் சூட்டினுன். அம்பரீஷன் தக்க வயதையடைந்ததும் அவன் தந்தை திரிசங்கு, வைகுண்டபதவியடைந்தான். உடனே மந்திரிமார்களும் முனிபுங்கவர்களும் அம்பரீஷனுக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்வித்தார்கள்.

அம்பரீஷன் சிலகாலம் இராஜ்ய பரிபாலனஞ் செய்து பிறகு தன்னுடைய மந்திரிகளிடம் இராஜ்யத்தை ஒப்புவித்து விட்டு

ஜகத்ரக்ஷகராகிய ஸ்ரீமன்நாராயண மூர்த்தியைக் குறித்துத் தவம் புரியச் சென்றான். அம்பரீஷன், சங்க சக்ர கதா பத்மதாரியும், சதுர்புஜங்களுடன் பசும்பொன்னை யொத்து விளங்கும் திருமேனியையுடையவரும் பிர்ம்ம விஷ்ணு சிவசொரூபியும் சர்வாபரணாலங்கிருதரும் பீதாம்பரதாரியும் ஸ்ரீவத்ஸாங்கிதரும் புராண புருஷரும் புருஷோத்தமருமாகிய நாராயணனைத் தன்னுடைய இதயாரவிந்தத்திலும் சூரியமண்டலத்தின் மத்தியிலும் வைத்துத் தியானித்து மகா மந்திரமாகிய அஷ்டாக்ஷர மந்திரத்தை ஆயிரம் வருஷம் ஜபித்துத் தவம் புரிந்து வந்தான். சகல லோக சரண்யராகிய நாராயணமூர்த்தி அவனது தவத்துக்கிரங்கி தேவர்கள் புடைசூழ்ந்து தோத்தரித்துவரக் கருடவாகனத்தின் மீதெழுந்தருளி அம்பரீஷனை நாடிவந்தார். அவன் அருகே வந்ததும் தமது கருடவாகனத்தை ஐராவதமாக மாற்றிக் கொண்டு தாம் தேவேந்திரன் போலுருவெடுத்து அவன் முன்பு தோன்றி "ஏ அம்பரீஷ! நினக்கு மங்கள முண்டாகுக; யான் சர்வலோகநாதனுகிய இந்திரன்; உன்னைக் காப்பாற்றுவதன் பொருட்டு இங்கு வந்திருக்கின்றேன். நீ விரும்புவதை யளிக்கச் சித்தமாயிருக்கின்றேன் கேள்" என்றனர். அறிவிற் சிறந்தவனும் அரிபக்த சிரோமணியுமாகிய அம்பரீஷன் ஐராவதத்தின் மீது வீற்றிருக்கும் இந்திரனை நோக்கி "இவ்விடத்து உன்னை உத்தேசித்து நான் தவம் செய்யவில்லை. உன்னிடமிருந்து வரத்தையும் யான் விரும்பவில்லை. நீ வந்த வழியே செல்லலாம். ஏ அமராதிப! நாராயணனே எனக்கு நாதன்; உன்னை நான் என்தவத்தால் சந்தோஷப்படுத்தவில்லை; எனதாச்சிரமத்திற்குத் தீங்கிழைக்காதே. செல்" என்றான். இதைச் செவியுற்ற பகவான் அம்பரீஷனுடைய பக்திக்கு மகிழ்ந்து சுயரூபங்கொண்டு கருடவாகனத்தின் மீது விளங்கினர்.

சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம் முதலிய ஆயுதபாணியாயும் மற்றொரு அஞ்சன பருவதம் போலவும் தனக்கெதிரில் விளங்கா நின்ற எங்கும் நிறைந்த ஜனார்த்தனனைக் கண்டதும் அம்பரீஷன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு அவரது திருவடியில் முடிசாய்த்து வணங்கி, "ஏ லோகனாதா! அருள் புரியவேண்டும்! நாதனே!"

ஜகத்பதியே! கிருஷ்ணா! சர்வலோகசரண்யா! நீரே ஆதிபுருஷன் ஆதியற்றவன், அநந்தன், புருஷன், பிரபு, அப்பிரமேயன், விபு, விஷ்ணு, கோவிந்தன், கமலலோசனன், மகேசுவரன், கவ்யவாஹனன், கபாலி, பிரபஞ்சனன், பரமாத்மா தங்களைச் சரண மடைந்தேன். காப்பாற்றவேண்டும், வேறுகதியில்லேன்" என்று தோத்தரித்தான். பகவான் அம்பரீஷனது தோத்திரத்துக்குவந்து அம்பரீஷ! நீயே எனது பரம பக்தன். நின்றவத்திற் குவந்தேன், நின் விருப்பம் யாது தெருவி; அளிக்கின்றேன்; நான் எப்போதும் பக்தப்பிரியன். ஆகையால், உனக்கு வரமளிப்பதன் பொருட்டு இங்கு வந்திருக்கிறேன்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இதைச் செவியுற்ற அம்பரீஷன்: ஆனந்தமேலிட்டுத் தழதழத்த குரலுடன் "விஷ்ணுவென்னும் பெயர்கொண்ட பரமாநந்த மூர்த்தியாகிய தங்களிடத்திலேயே என் சித்தமிருக்க வேண்டும். பூமண்டலமுழுதும் தமது பக்தர்களாகவேண்டும். அந்த பூமிக்கு நான் சக்ரவர்த்தியாக வேண்டும்" என்று வரங்களைக் கேட்டான். பகவான் அம்பரீஷனைப்பார்த்து "உன் கோரிக்கையாவும் நிறைவேறும். இதோ இந்த சக்ராயுதத்தைப் பெற்றுக்கொள்; இதை நான் முன்னொரு சமயம் உக்ரமான தவம் புரிந்து பரமசிவனிடமிருந்து பெற்றுக்கொண்டேன. ரிஷிசாபத்தாலுண்டாகும் துக்கங்களையும், பகைவர், வியாதிகள் இவைகளாலுண்டாகும் துக்கங்களையும் இந்த ஆயுதம் நிவர்த்திக்கும்" என்று கூறிமறைந்தார். பிறகு அம்பரீஷன் ஜகத்பிரபுவாகிய நாராயணரை வணங்கித் தவத்தினின்று மெழுந்து அயோத்தியாபட்டணம் வந்து முன் போல இராஜ்யபரிபாலனம் செய்து வந்தான்.

அப்பொழுது அந்தணர் முதலிய நான்கு வருணத்தவர்களும் தத்தம் மரபிற்குரிய ஒழுக்கத்தினின்றுந் தவறுமலிருக்கும்படி பாதுகாத்துவந்தான். விஷ்ணுபக்தர்களை மகிழ்ச்சியுடன் ஆராதித்து வந்தான். நூறு அசுவமேத யாகங்களையும், நூறு வாஜபேய யாகங்களையும் செய்து, ஆர்கலியை அகழியாகக் கொண்ட இப்புவி முழுதும் ஆண்டுவந்தான்.

இவன், அசுரபுரிந்து வருங் காலத்தில் அயோத்தியில் ஒவ்வோர் வீட்டிலும் விஷ்ணு மூர்த்தியை வைத்து ஆராதனை செய்து வந்தார்கள். ஒவ்வொரு வீட்டிலும் வேத கோஷங்களும் அரிநாம சங்கீர்த்தனங்களும் யாக மந்திர கோஷங்களும் நிறைந்திருந்தன. அந்த அயோத்தியில் வயல்களிலெல்லாம் எக்காலமும் பயிர்கள் நிறைந்திருந்தன. பூமி முழுதும் புற்கள் நிறைந்திருந்தன. துர்ப் பிக்ஷமே கிடையாது. ஜனங்களுக்கு வியாதிகளும் உபத்திரவமும் உண்டாவதில்லை. பார்க்கப்பார்க்க அழகுவாய்ந்த சுதரிசனத்தின் உதவியால் ஸகல ஜனங்களையும் காப்பாற்றிக் கொண்டு இந்திரன் போன்ற அம்பரீஷ மஹாராஜன் சமுத்திரம் வரையில் வியாபித்திருக்கும் மங்களகரமான பூமியை நீதியுடன் பரிபாலித்துக் கொண்டிருந்தான்.

இரண்டாவதுசருக்கம்

முற்றிற்று.

மூன்றாவதுசருக்கம்.

இவ்விதம் அம்பரீஷமஹாராஜன் அரசாண்டுவந்தான். இவ்வரசனுக்குச்சகல இலக்ஷண மமைந்தவளும் தாமரைப் பூப்போன்ற கண்ணுடையவளுமகீர்த்தி வாய்ந்தவளுமாகிய ஸ்ரீமதி என்னும் பெயருள்ளஓர் பெண்ணிருந்தாள்.

அச்சமயத்தில்மகிமை பொருந்தியநாரதரும்மிகுதியானகாந்தியுள்ளபர்வதமுனிவரும்அம்பரீஷமஹாராஜனுடையகிருஹம்வந்தார்கள்.இவர்களைக்கண்டதும் அம்பரீஷன் வணங்கி விதிப்படி பூசித்தான்.இச்சமயம் அரசனுக் கருகே யிருந்தஸ்ரீமதியைக்கண்ட நாரதர் பரமாச்சரியமடைந்துஅரசனைநோக்கிஅரசனே!சர்வஇலட்சணங்களுமமைந்து தெய்வகன்னிகைக் கொப்பாக விளங்கும் இப்பெண் யார்?என்று கேட்டார்.

இவ்வசனத்தைச் செவியுற்ற அரசன், அஞ்சலிபஸ்தனாக விருந்து "முனிவர் பெருமானே! இவள் எனது புத்திரி; ஸ்ரீமதியென்பது இவளுடைய பெயர். இவளுக்கு ஓர் வரன் வேண்டும்" என்றான் அம்பரீஷன். இதைக் கேட்டதும் நாரத மகா முனிவர் ஸ்ரீமதியைத் தாமடைய மனதிலிச்சை கொண்டார். இவருக் கருகே யிருந்த பருவத மகா முனிவரும் ஸ்ரீமதியை விரும்பினார்: பிறகு இருவரும் அம்பரீஷனோடு சற்றுப் பேசி யிருந்து விடை கொண்டு அவிட மிருந்து புறப்பட்டார்கள். அப்பொழுது நாரத மகா முனிவர் அம்பரீஷனைத் தனியே அழைத்துப் போய்த் தமது உள்ளக் கருத்தை வெளியிட்டு ஸ்ரீமதியைத் தமக்குப் பாணிக் கிரகணஞ் செய்து கொடுக்கும்படிக் கேட்டார். அவர் பேசித் திரும்பியதும் பருவத மகா முனிவரும் அம்பரீஷனிடம் சென்று தம் கருத்தைத் தெரிவித்து ஸ்ரீமதியைக் கொடுக்கும்படி கேட்டார். இப்படி இவ்விருவரும் கேட்டதும் அரசன் பயந்து முனிவர்களைப் பார்த்து, "ஐயன்மீர்! நீவிரிருவரும் எனது புத்திரியை விரும்புகிறீர்கள். தாங்கள் சகலமுந் தெரிந்தவர்கள். நான்

தங்களுக்கு என்ன தெரிவிக்கப் போகிறேன். ஆயினும் உங்களி ருவரில் எனது புத்திரி யாரை வரிக்கிறாளோ அவருக்கு நான் அவளைக் கொடுப்பதில் தடையில்லை" என்றான். அதைக் கேட்ட அம் முனிவர்களிருவரும் "அரசனே! அவ்விதமே யாகட்டும்; நாங்கள் நாளைய தினம் வருகிறோம்." என்று கூறி மனமகிழ்ச்சி யுடன் அவ்விடமிருந்து சென்றார்கள். இவ்விரு முனிவரும் வாசு தேவ பக்தர்கள். மகா ஞானிகள்.

பிறகு நாரதர் வைகுண்ட உலகம் சென்று, பகவானை வணங்கி "ஏ நாராயணா! அவ்யய! புவனேசுவர! உமக்கு நமஸ்காரம். தங் களிடத்தில் இரகசிய மாக ஒரு விஷயம் தெரிவிக்க வேண்டுகிறேன். திருவுள மிரங்கி உத்தரவளிக்க வேண்டும்" என்றார். பகவான் நாரத ரைப் பார்த்துப் புன்முறுவல் கொண்டு, "நாரத முனிவரே! உமது கருத்தைத்தெரிவியும்" என்றார். உடனே நாரதர், "புத்திமானும் உமது பக்தியிற் சிறந்தவனும் அயோத்தியாதி பதியுமாகிய அம்பரீஷ னுக்கு, பாந்த நேத்திரமுடைய ஸ்ரீமதி யென்னும் ஓர் கன்னிகை யிருக்கின்றனள். அந்தக் கன்னிகா ரத்தினத்தை நான் மணஞ் செய்து கொள்ள நிச்சயித்திருக்கிறேன். உமது பக்தனும் தபோ நிதியுமாகிய பருவத முனிவரும் அக்கன்னிகையைத் தாம் மணந்து கொள்ள விருப்பங் கொண்டிருக்கின்றனர். இப்படிப் பட்ட எங்க ளுடைய கருத்தை அம்பரீஷனுக்கு நாங்கள் தெரிவித்தோம். அம்பரீஷன் "உங்களிருவரில் யாரை என் குமாரத்தி வரிக்கின்ற னளோ அவருக்குப் பெண்ணைக் கொடுக்கிறேன்" என்றான். அத ற்குச் சரி அவ்விதேமே யாகட்டும்; நாங்கள் நாளை வருகிறோம் எனத் தெரிவித்து விட்டு வந்தோம். இப்பொழுது நான் தங்களி டம் வந்திருக்கிறேன். அடியேனுடைய கருத்தை நிறைவேற்ற வேண்டும். பருவத முனிவருடைய முகம் அந்தக் கன்னிகையின் நேத்திரத்திற்கு மட்டும் குரங்கு முகம்போற் காண வேண்டும். இங்ஙனம் அருள் புரியப்படுமாயின், அப்பொழுது அவள் அவரை வரிக்கமாட்டாள். என்னையே விரும்புவாள்" என்றார். மதுசூத னர் உடனே நகைத்து, "நீர் உம்மிருப் பிடத்திற்குச் சுகமாகப் போய்ச் சேரும். உமது கருத்துப் படியே நிறைவேற்றுகிறேன்" என்றார். நாரதர் "நாம் கிருதார்த்தனானேம். நமது கருத்து

நிறை வேறிற்று" என்றெண்ணி மகிழ்ந்து ஜகத்பதியை வணங்கி அவரிடம் விடை பெற்றுக் கொண்டு அயோத்தியை நோக்கிச் சென்றார்.

இவ்விதம் நாரதர் பரந்தா மனுடன் பேசி விட்டுச சென்றதும் பருவத மகா முனிவர் பகவானிடம் போய், தமதுகருத்தை வெளியிட்டு, "நாரதருடைய முகம் ஸ்ரீமதிக்கு மட்டும் பெருங் குரங்கின் முகம் போலிருக்க வேண்டு" மெனக் கேட்டார். பகவான் முனிவரைப் பார்த்து, முறுவல் கொண்டு "உமது கருத்துப்படியே யாகும்; நீர் அயோத்திக்குச் செல்லும். ஆனால் நாரதரிடம் நீர் இங்கு வந்துபோனதாகத் தெரிவிக்க வேண்டாம்" என்றார். பருவத மகா முனிவர் இதைக்கேட்டு மகிழ்வுற்று நாராயணனை வணங்கி அவிடமிருந்து புறப்பட்டு அயோத்திக்குச் சென்றார்.

இது நிற்க; இங்கு அம்பரிஷ மகா ராஜன், அயோத்தியா பட்டணத்தை மங்களகரமான கொடிகள், தோரணங்கள் நெற்பொரி, மலர் முதலியனவைகளால் அலங்கரிக்கச் செய்தான். வீடுகள் தோறும் வாசலில் நீர் தெளித்துச் சுத்தஞ் செய்யவும் அகில் முதலிய வாசனை வஸ்துக்களைக் கொண்டு பட்டண மெங்கும் பரிமள முண்டாக்கவும் கட்டளை யிட்டான்.

பிறகு தன் ஸபாமண்டபத்தையும் திவ்ய தூப கந்தங்களாலும் இரத்தினத் தூண்களாலும் புஷ்ப மாலைகளாலும் அலங்கரிக்கச் செய்தான். சபை முழுதும் திவ்யமயமான இரத்தினக் கம்பளங்களை விரிக்கவும் உன்னதமான ஆசனங்களை அமைக்கவும் திட்டப் படுத்தினன். சபையின் கண் அநேக தேசத்து அரசர்களையும் பட்டணத்துப் பிரமுகர்களையும் வரவழைத்திருந்தான்.

இங்ஙனம் விளங்கும் திவ்ய சபைக்கு அம்பரிஷன் தன்னுடைய புத்திரி ஸ்ரீமதியை யழைத்து வந்தான். ஸ்ரீமதி சர்வாபரணங்களையு மணிந்து கொண்டிருக்கிறாள். நாராயண மூர்த்தியின் இதயாரவிந்த வாசியாகிய இலட்சுமி தேவியே இந்தப் பூவுலகில் பெண்ணுரு வெடுத்தனளோ வென்று சொல்லத் தக்க பேரெழிலோடும் விளங்குகிறாள். அவ்வுத்தமியின் இடை ஒரு பிடிக்குள் அடங்கத்தக்கதாக விருக்கிறது. நட்டினை யளிக்கக்கூடிய

ஐந்து அவயவங்களுடன் விளங்குகிறாள். முகத்தில் மங்களகாம் துலங்குகிறது. இந்த ஸ்ரீமதியைச் சூழ அநேக தாதியர்களிருக் கிறார்கள். சபையானது அவளுடைய தேஜஸால் விளங்குகிறது. இப்பொழுது அச்சபைக்கு பிர்ம புத்திரரும் மகானும் வித்தையிற் பெரியவருமாகிய நாரத மகா முனிவரும் பிர்ம நிஷ்டர்களுக்குள் சிறந்தவரான பருவத மகா முனிவரும் விஜயமாயினர்.

மூன்றாவது சருக்கம்

முற்றிற்று.

நான்காவது சருக்கம்.

முனிபுங்கவர்களிருவரும் தன்னுடையசபைக் கெழுந்தருளக் கண்ட அம்பரீஷன், மிகுந்த பரபரப்புடன் அவர்களை ரைவேற்று வீற்றிருக்கத் திவ்யாசன மளித்து உபசரித்தான். தெய்வத் தன்மை வாய்ந்தவர்களும், நித்திய ஞானிகளுக்குள் சிறந்தவர்களும் முனி சிரேஷ்டர்களும் மகாத்மாக்களுமாகிய இவ்விருவரும் ஓர் கன்னிகையின் பொருட்டு அம்பரீஷன் அளித்த ஆசனத்தமர்ந்தனர். பிறகு அம்பரீஷன், முனிவர் களிருவரையும் வணங்கி, மங்களகரம் பொருந்தியவளும் தாமரை யிதழெனத் திகழும் விழிகளுடையவளும் கீர்த்தி வாய்ந்தவளுமான தன் புத்திரி ஸ்ரீமதியை அவர்கள் முன் நிறுத்தி, "குழந்தாய்! உன் மனதில் இவ்விருவருள் எவரை விரும்புகிறாயோ அவரை விதிப்படிவணங்கி இந்த மாலையைச் சூட்டு" என்றான். இங்ஙனம் தனது தந்தை கூறக் கேட்ட ஸ்ரீமதி தன் கையில், மாலையை வாங்கிக் கொண்டு காதியர்களுக்கு நடுவில் பிரமித்து நின்றாள். இப்படி ஸ்ரீமதி பிரமித்து நின்றதும் அம்பரீஷன். "குழந்தாய்! என்ன யோசிக்கிறாய்; இவ்விருவருள் உன் மனம் விரும்புகிறவரின் கழுத்தில் மாலையைப் போடு" என்றான். உடனே ஸ்ரீமதி பயத்துடன் தன் தந்தையின் முகத்தை நோக்கி, "இங்கிருக்கும்இவ்விருவருடையமுகங்களும்எனக்குக் குரங்கு முகமாகக் காண்கின்றன. தாங்கள் கூறுகிறபடி நாரத, பருவத மகா முனிவர்களை நான் பார்க்கவில்லை." ஆனால் இவ்விருவருடைய மத்தியில் பதினாறு பிராய முள்ள ஓர் வாலிபனைக் காண்கின்றேன். இவன் சர்வாபரணாலங் கிருதனாக விளங்குகிறான். மேனியானது காயாம் பூவையொத்துப் பிரகாசிக்கின்றது. கைகள் முழந்தாளைத் தொடுகின்றன. கண்களிரண்டும் காதளவும் நீண்டிருக்கின்றன. உன்னதமான துடைகளிருக்கின்றன. இவ்வுத்தமன் இடையில் அணிந்திருக்கும் ஆடையும் மேலே தரித்திருக்கும் உத்தரியமும் சொர்ணத்தின் காந்தியையும் மங்கச் செய்கின்றன. இவனது வயிறு ஆலிலை போல் சிறுத்திருப்பதால்,

அதன்கண் மூன்று மடிப்புகளின் இடையே யுள்ள நாபியானது நன்றாய்த் தெரிகின்றது. உள்ளங் கை, முகம், நயனம், பாதம், இருதயம், நாபி இவைகள் பங்கஜ மலரை யொத்துத் துலங்குகின்றன. இவனது தந்தவரிசையின் சுந்தமமானது முல்லை மலரை யொத்திருக்கின்றது. இவனது கூந்தல் மேக நிறம் போல் கறுத்திருக்கின்றது. இவன் மறைந்து கொண்டு என்னைப் பார்த்து மந்தஹாஸம் செய்து கொண்டு தன் வலது கரத்தை அபயாஸ்தமாக வைத்துக் கொண்டிருக்கிறான் என்று கூறி வியந்தாள்: இதைக் கேட்ட நாரத முனிவர், ஐய முற்று "ஏ பெண்ணே! உன் கண்ணிற் படும் வாலிபனுக்கு எவ்வளவு கைகளிருக்கின்றன. உண்மையாகக் கூறு" என்றார். ஸ்ரீமதி, "இரண்டு கைகள் தானிருக்கின்றன" என்று ஆச்சரியத்துடன் கூறினாள். இப்பொழுது பருவத முனிவர், ஸ்ரீமதியைப் பார்த்து. 'சுபகரமான அவனுடைய மார்பில் என்ன இருக்கக் காண்கின்றாய்; கரத்தில் தரித்துக் கொண்டிருப்பதென்ன" என்று ஸ்ரீமதியைக் கேட்டார். ஸ்ரீமதி, " இவனது மார்பில் ஓர் மாலையும் கரத்தில் வில்லும் அம்பு மிருக்கக் காண்கின்றேன்" என்றாள்.

ஸ்ரீமதி இங்ஙனம் கூறியதும் முனிபுங்கவர்களிருவரும் தத்தம் மனதில், "இது யாருடைய மாயை யாக விருக்கலாம். மாயாவியும் திருடும் சுபாவ முள்ளவனுமாகிய மகா விஷ்ணுவின் மாயமாகத் தானிருக்கவேண்டும்: இது நிச்சயம்" என்று கருதினார்கள். "வேறொருவரும் இங்கு வரக்காணோம். இந்த விஷ்ணுவையன்றி வேறு யார் என்னுடைய முகத்தைக் குரங்கு முகமாகத் தோன்றும்படி செய்பவன் என்று நாரதர் மறுபடியும் நினைத்தார். பருவத முனிவரும் "நான் வானர முகத்தை எப்படி யடைந்தேன்" என்று யோசித்தார்.

இங்ஙனம் இவ்விருவரும் யோசனையி லாழ்ந்திருப்பதைக் கண்ட அம்பரீஷன் அவர்களைப் பார்த்து, " நீவிர் இருவரும் நிர்மலமான மனதுடன் என் புத்திரியை விவாகம் செய்து கொள்வதன் பொருட்டு இங்குவந்திருந்தும் என்மயங்குகிறீர்கள்? " என்று கேட்டான். தேஜோவான்களாகியமுனிவர்கள், அம்பரீஷ! நாங்கள் மயக்கங் கொள்ளவில்லை. நீ மயக்கங் கொண்டிருக்கிறாய்."உன்

புத்திரி எங்களிருவரில் யாரேனும் ஒருவனை வரிக்கட்டும்" என்றார்கள். முனிவர்களுடைய சாபத்திற்குப் பயந்த அம்பரீஷன் "இவர்களில் யாருக் கேனும் மாலையிடு" என்றுக் கூறிவிட்டனன். அதைக்கேட்ட ஸ்ரீமதி மனதில் ஜகதீசனைத் தியானித்துக் கரத்தில் மாலையை யேந்திக் கொண்டு மௌனமாய் நின்றாள். பிறகு சற்று நேரத்திற் கெல்லாம் ஸ்ரீமதி தான் முன் கண்ட சுந்தர வாலிபனைக் கண்டு அவன் கழுத்தில் மாலையை யணிந்தாள். அவ்வளவில் ஸ்ரீமதியை அச்சபையிலுள்ளோர் ஒருவரும் காணவில்லை. உடனே சபை முழுதும் ஆச்சரிய மடைந்தது! கோலாகல முண்டாயிற்று!!

பிறகு புருஷோத்தமனாகிய மகா விஷ்ணு ஸ்ரீமதியை வைகுண்டத்திற்கு எடுத்துச் சென்றார். முன் ஜன்மத்தில் ஸ்ரீமதி மகா விஷ்ணுவை யடைய வேண்டுமென்பதை முன்னிட்டுத் தவமியற்றினளாதலால், அவர் இச்சென்மத்தில் அவள் கோரிக்கையை நிறைவேற்றக் கருதி தன்னுலகுக்கு எடுத்தேகினர். இதை யறிந்த முனிவர்களிருவரும் "செய்! நீ நிந்திக்கத்தக்கவன்" என்று பகவானைத் திட்டிக் கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு உடனே வைகுண்டம் சென்றார்கள்.

இவ்விருவரும் வருவதை யறிந்த மகா விஷ்ணு ஸ்ரீமதியைப் பார்த்து "ஸ்ரீமதி! முனிவர்கள் வருகிறார்கள். நீ சற்று மறைந்திரு" என்றார். உடனே ஸ்ரீமதி, "அவ்விதமே செய்கின்றேன்." என்று நகைத்துக் கொண்டே தெரிவித்து, மறைந்தாள். முதலில் நாரதர் பிரவேசித்து பகவானை நமஸ்கரித்து "என்னையும் பருவதனையும் இங்ஙனஞ் செய்யத்தகுமா? உண்மையில் நீரே ஸ்ரீமதியை எடுத்து வந்திருக்கிறீர்" என்று கூறினர். இதைக் கேட்டதும் அச்சுத பகவான் தமது கரத்தால் செவியை மூடிக் கொண்டு, "நீர் சொல்கிறபடி நான் அந்தக் கன்னிகையை இச்சித்து இங்கு எடுத்து வரவில்லை" என்றார்.

நாரதர், உடனே வாசுதேவனைப் பார்த்து, "எனக்குக் குரங்கு முக மிருக்கிற தென்று சொல்லக் கேட்கிறேனே" என்றார். நாராயணன், அவரைப்பார்த்து, "நாரதரே! நீர் இரகசியமாகப்பிராத்

நித்த தற்கிணங்கிப் பருவதருடைய முகத்தைக் குரங்கு முகமாகத் தோன்றச் செய்தேன். இவ்வாறே அவரது பிரார்த்தனைக் கிண ங்கி உமது முகமும் கோலாங்கூல முகமாகத் தோன்றச் செய் தேன். நான் பக்திக்குக் கட்டுப்பட்டவன். ஆகையால், இவ்வி தம் செய்யலானேன். என் கருத்துப்படி ஒன்றும் செய்யவில்லை. உங்களுடைய பிரார்த்தனைப்படி நடந்தேன். யார் யார் எதெதை விரும்புகிறார்களோ அதை நான் அவரவர்களுக்குக்கொடுத்தருள் வேன். ஆகையால், இது விஷயமாய் என்னிடத்திலோ அல்லது உங்களிடத்திலோ ஒரு வித குண தோஷங்கள் ஏற்படக் காரண மில்லை என்றார். உடனே பருவத மகா முனிவர், அங்கு வந்து பகவானைப் பணிந்து நாரத முனிவர் வினவியதுபோல் வினவி னார். பகவான் புன்னகை புரிந்து நாரத முனிவர்க்குக் கூறிய படியே கூறி அவ்விருவரையும்பார்த்து"என் ஆயுதத்தைத்தொட்டுக் கூறுகிறேன். உங்களிஷ்டப்படி செய்தேனே யொழிய வேறி ல்லை" என்றார். உடனே நாரதர் "அம்பரீஷனது சபையில் எங்க ளிருவருடைய மத்தியில் கையில் வில்லைத் தரித்துக் கொண்டு இரண்டு கரங்களுடன் நின்று கொண்டிருந்து அப்பெண்ணை யபகரித்து வந்தவன் யார்?" என்றார். பகவான்,"நாரதரே! உலகத் தில் எவ்வளவோ மாயாவிகளிருக்கிறார்கள். யார் அப்பெண்ணை அபகரித்துக் கொண்டு போனார்களோ கண்டதார்? நான் சக்ரபா ணியென்றும் சதுர்ப் புஜங்களையுடையவ னென்றும் சத்திய சந்த னென்றும் நீங்களறிவீர்கள்" என்றார். இதைக் கேட்ட தும் முனி புங்கவர்களிருவரும் சந்தோஷ மடைந்து"ஜகத்பதியே! தங்களிடத்தில் ஓர் தோஷமும் கிடையாது. இத்துஷ்டச் செய்கை களுக்குக் காரணம் அம்பரீஷனே! இந்த மாயை செய்தவனும் அவ னே" என்று கூறி அவரைப் பணிந்து அங்கிருந்து புறப்பட்டு அயோத்திக்கு வந்தார்கள்.

முனிவர்களிருவரும் அயோத்தியில் அம்பரீஷனைக் கண்டு "அம்பரீஷா! எங்களிருவரையும் பெண்ணைக் கொடுப்பதாக வர வழைத்து விட்டு, எங்களை யறியாமல் மாயையால் மற்றொருவனை மறைத்து வைத்திருந்து அவனுக்குப் பெண்ணைக் கொடுத்து எங் களை மோசஞ் செய்தாய்; ஆகையால் "உன்னை அந்தகாரமானது

மூடிக் கொள்ளட்டும். உண்மையில் உன்னறிவு உன்னை யறிய வொட்டாமற் செய்யட்டும்" எனக்கடுஞ் சாபமிட்டனர். இவர்கள் சாபமிட்டு வாயை மூடியதும் ஒரு பெரிய இருட்டானது அம்பரீஷ னுக்கு முன்னிலையில் வந்து தோன்றியது. அக்கணமே பரந்தா மனது சக்ரமானது அம்பரீஷனுக்காக அங்குத் தோன்றிற்று. உடனே முனிவர்கள் பயந்து நடுக்கங் கொண்டு ஓடினார்கள். அவர் களுக்குப் பிறகே இருட்டும் தொடர்ந்தது. சக்ரமும் இருட்டைத் தொடர்ந்து துரத்திற்று. இப்பொழுது பின்பக்கம் திரும்பிப் பார்த்த முனிவர்கள், "கன்னிகையையிச்சித்த பலன் கிடைத்து விட்டது அந்தோ! கஷ்டம்" என்று கூறிக் கொண்டே சக்ரத்தி ற்கும் இருட்டுக்கும் பயந்து அவைகள் துரத்தத் துரத்தச் சகல லோகங்களையும் சுற்றிக் கொண்டு கடைசியில் விஷ்ணு லோகம் சென்று, அவரைக் கண்டு பணிந்து "நாராயணா! ஜகத்பதியே! கோவிந்தா! பத்மநாபா! ஜனார்த்தனா! புருஷோத்தமா!வாசுதேவா! ரிஷிகேசா! புண்டரீ காட்சா! புருஷோத்தமா! காப்பாற்ற வேண் டும்! காப்பாற்ற வேண்டும்!! என்று முறையிட்டார்கள். அப் பொழுது அவர்களைக் கண்ட ஸ்ரீவத்ஸலாஞ்சன னாகிய நாராயண மூர்த்தி தமது அடியார்களுக் கருள் புரிவான் கருதி, சக்ரத்தையும் இருட்டையும் தடுத்து, "அம்பரீஷனும் நமது பக்தன். இவர்களும் நமது பக்தர்களே. ஆகையால் ஒருவருக்கும்நம்மால் தீங்குண்டாகக் கூடா"தென்றெண்ணிமுனிவர்களைப்பார்த்து "பொறுத்துக்கொள்ள வேண்டும்; எனது பக்தனைக் காப்பாற்றும் பொருட்டு என் சக்ரம் செய்த அபராதத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். சாதுக்கள் பொறுமையுள்ளவர்களல்லவா?"என்றுதெரிவித்தார். இதைக்கேட்ட முனி சிரேஷ்டர்கள் பகவானுடைய மாயை யையறிந்து அவரைச் சபிக்க எண்ணி, "நாராயணா! ஸ்ரீமதியை நீ எந்த ரூபங் கொண்டு மறைவாயிருந்து அபகரித்து வந்தாயோ அதே ரூபத்துடன் அம்ப ரீஷனுடைய வம்சத்திற் பிறக்கப் போகும் தசரதனுக்குப் புத்திர னாகப் பிறக்கக் கடவாய். ஸ்ரீமதியும் பூமியிற் பிறந்து ஜனக மகா ராஜனுடைய புத்திரி யாகட்டும். ஓர் இராட்சஸ அதமன் உனது மனைவியாகிய அவளை அபகரித்துக் கொண்டு போகக் கடவது. ஏனெனில், நீ இராக்கத தர்மத்தை யனுசரித்து ஸ்ரீமதியை அபக ரித்துக் கொண்டு வந்தாயல்லவா? நாங்களிருவரும்ஸ்ரீமதியையடை

வதன் பொருட்டு எவ்விதமான துக்கத்தை யனுபவித்தோமோ இது போல அப்பொழுது நீ உன் மனைவியின் பொருட்டு இவ்வித மான துக்கத்தை அனுபவிக்கக்கடவாய்" என்றுசாப மிட்டார்கள்.

இங்ஙனம் சாப மளித்த நாரத பர்வத மகா முனிவர்களைப் பகவான் பார்த்து, "முனிவர்களே! அம்பரீஷனுடைய வம்சத்தில் தசரத னென்னு மொரு அரசன் பிறக்கப் போகிறான். அவன் நெறி தவறாத அரசனாக விருப்பான். உங்களிருவர் சாபப் படியே நான் அவனுக்கு இராம னென்ற பெயருடன் மூத்த குமாரனாகப். பிறக்கப் போகிறேன். எனது வலது கரம் பரதனாகப் பிறக்கும்! எனது இடது கரம் சத்ருக்னனாகப் பிறக்கும். ஆதிசேடன் இல க்குமனனாகப் பிறக்கப் போகிறான். முனிவர்களுடைய சாபம் வீண்போகக் கூடாது" என்று கூறிச் சக்கரத்தை நோக்கி, "ஏ! சக்கரமே நீ செல்" என்றார். உடனே இருள் கூட்டத்தைக் கண் ணுற்று, இருடிகளின் சாப ரூபமாகிய "ஏ இருள் கூட்டமே நான் இராமா வதாரம் செய்யுங் காலத்து என்னை வந்தடையக் கட வாய். நீ இப்பொழுது முனிவர்களையும் அம்பரீஷனையும் விட்டுச் செல்" என்றார். உடனே இருள் கூட்டம், இருந்த இடந்தெரியா மல் மறைந்தது. ஜகத்பிரபு பக்த ரக்ஷகனாகையால் தாமாகவே இந்த துக்கத்தைச் சம்பாதித்துக் கொண்டார். அவரால் தடுக்கப் பட்ட சக்ராயுதம் தன்னிடம் சேர்ந்தது. முனிவர்களிருவரும் ஜனார்த்தனனை நமஸ்கரித்து விட்டுச் சென்றார்கள்.

இவர்களிருவரும் போய்க் கொண்டிருக்கையில் வழியில், "இனி நமது சரீர முள்ள வரையில் விவாகம் செய்து கொள்ள வேண்டு மென்று கன்னிகையை விரும்புவதேயில்லை" என்று பிர திக்ஞை செய்து கொண்டார்கள். பிறகு தங்களாச் சிரமத்திற்குப் போய்ச் சேர்ந்து எப்போதும் போல் பகவத்தியானத்திலிருந்து வந்தார்கள். அம்பரீஷ மகா ராஜனும் அவனுடைய ஆயுட் காலம் வரையில் இராஜ்யத்தை நீதி வழுவாமல் பரிபாலனம் செய்து வந்து அந்திய காலத்தில் விஷ்ணு லோகம் அடைந்தான். அவ னுடன் அவன் வேலைக் காரர்களும் பந்து மித்திரர்களும் விஷ்ணு லோகம் சென்றார்கள்.

தமது அடியார்களாகிய அம்பரிஷன், நாரத பருவதர் இவர்களுடைய மானத்தைக் காப்பதன் பொருட்டு பகவான், தசரத புத்திரனுகவவதரித்து, அஞ்ஞானமாகிய இருட்டால் புத்தி மயக்க முற்று, முக்கியமாய்த் தன்னை யறிய வேண்டிய சமையத்தில் தன்னை யறிந்து கொண்டும், மற்றச் சமையங்களில் மானிடப் பிறவிக் கொத்தும், எங்கும் நிறைந்தவரே யாயினும் சாமன்னியன் போலவும். பக்தர்களின் அனுக்கிரகார்த்தமாக விருந்து வந்தார். பெரியோர்களுடைய செய்கைகள் இவ்விதமே யிருக்கும். மகேசுவரனது மாயையையனுசரித்து மானிடனுகப் பிறந்தார். நன்மை தீமை உணர்ந்த பெரியோர்கள் மாயையைச் செய்யக் கூடாது.

பகவான் இராமனுக அவதரித்ததின் காரணத்தையும் அம்பரிஷனது மகிமையையும் அந்த ஜகத் பிரபுவாகிய நாராயண மூர்த்தி யினுடைய மாயா மகிமையையும் கூறினேன். பகவான் தசரத குமாரனுக அவதரித்ததின் காரணத்தையும் அவருடைய மாயா மகிமையும் படிக்கிறவன், கேட்பவன், கேட்கச் செய்கிறவன், கேட்டு ஆமோதிக்கிறவன் இவர்கள் யாவரும் விஷ்ணு லோகம் போய்ச் சேர்வார்கள். ஒருக் காலும் யம லோகம் புகார்கள்.

நான்காவது சருக்கம்.

முற்றிற்று.

ஐந்தாவது சருக்கம்

சீதையின் உற்பத்திக்குக் காரணம்.

ஏபரத்வாஜ! சீதாதேவியின் உற்பத்திக்குக் காரணங் கூறுகிறேன் கேள்.

திரேதாயுகத்தில் கௌசிகன் என்னும் ஓர் அந்தணனிருந்தான். இவன் வாசுதேவனுடைய பக்தன். அவருடைய திருநாமங்களைச் சதாகாலமும் பாராயணம் செய்வதில் மிக்க ஆவலுள்ளவன். புசிக்கும் போதும் அவனுடையமனம் பகவானிடமே சார்ந்திருக்கும். எப்போதும் அந்த இறைவன் எழுந்தருளியிராநின்ற திவ்ய ஸ்தலங்கடோறும் சென்று, தாளராகங்களுக் கொத்து அவரது சரித்திரங்களைப் பாடித் தோத்தரிப்பான். பக்தியோகமடைந்த வனாக விருந்து அங்கங்கு இரந்துண்பான்.

இங்ஙனம் கௌசிகன் மாயவனைத் தோத்தரித்துக் கொண்டு வருகையில், அவனைக் கண்ட பத்மாக்ஷனென்னு மோர் விப்பிரன் அவனையழைத்து அன்போ டன்னமளித்து வந்தான். கௌசிகன் தன்குடும்பத்துடன் அவிடமேயிருந்து, பத்மாக்ஷனுடைய அன்னம் புசித்து அரியினுடைய நாமகீர்த்தனங்களைப் பாடித் தோத்தரித்து வந்தான். கௌசிகன் செய்யும் தோத்திரங்களைப் பத்மாக்ஷன் சிரவணம் செய்து வந்தான்.

இப்படிச் 'சிலகாலம் நடந்து வந்தது. பிறகு கௌசிகனுக்கு ஏழுசீடர்கள் ஏற்பட்டார்கள். அவர்கள் எழுவரும் பிர்ம, க்ஷத்திரிய வைசிய ஜாதிகளுக்குரியவர்கள். எல்லாரும் ஞானவித்தையால் மேன்மையடைந்தும் மிகவும் பரிசுத்த முடையவர்களாகவும் வாசுதேவபக்தர்களாகவும் விளங்கினார்கள். இவர்களனைவர்க்கும் பத்மாக்ஷன் அன்போடுஅன்னமிட்டுஆதரித்துவந்தான். கௌசிகன் தன்னுடைய குடும்பம் தனது சீடர்கள் எழுவர். இவர்களுடன் அந்த ஸ்தலத்திலேயே யிருந்து பகவானைத்தோத்தரித்துக் கொண்டு பரமானந்த பரிதனாக வாழ்ந்துவந்தான்.

இந்த விஷ்ணுஸ்தலத்தில் மாலவனென்னும்வைத்தியனொருவனிருந்தான். இவனும் அந்த ஜகத்பதியாகிய பரந்தாமனது பாதமலர் மறவாத பரமபக்தன். இவன், உலகரக்ஷகனுடைய சன்னிதியில்நாள்கடோறும் வரிசைவரிசையாகத் தீபங்களை யேற்றிவைத்து வழிபட்டுவந்தான். இவனுக்கு மாலதியென்ற ஓர் மனைவி இருந்தாள். இவள் கற்பிற் சிறந்த உத்தமி. அனுதினமும் தனது நாயகனோடு சர்வேசுவரனுடைய ஆலயத்திற்குச் சென்று ஆலயத்தை பசுவின் சாணியால் மெழுகிச் சுத்தஞ்செய்து அங்கு கௌசிகன் பாடும் திவ்யகீர்த்தனங்களை அன்புடன்கேட்டு ஆனந்தமடைந்து வீடுதிரும்புவாள்.

இதுநிற்க; இப்பொழுது குசஸ்தலமென்னு மிடத்திற் பிறந்தவர்களும் ஸதாசாரசீலர்களுமாகிய ஐம்பதுபிராமணர்கள் அரியைத் தரிசனம் செய்து அவரைத் தோத்தரிப்பதன் பொருட்டு இத்தலத்திற்கெழுந்தருளி மகாத்மாவான கௌசிகனைக் கண்டு அவனிடத்தில் அன்புகொண்டு அவனுக்குப் பணிவிடை புரிந்து வந்தார்கள். நாமசங்கீர்தனத்தில் தேர்ச்சி பெற்ற இவர்களும் கௌசிகனுடைய கானத்தைக் கேட்டுச் சந்தோஷித்து வந்தார்கள். இப்பொழுது கௌசிகனுடைய நாமசங்கீர்த்தனம் மிகப் பிரசித்திபடைந்தது. இவைகளைச் செவியுற்ற காளிங்கனென்னும் அரசன் கௌசிகனிடம் வந்து, கௌசிகனைக் கண்டு, "ஐயா! பரிவாரங்களுடன் கூடிய என்னைப் பற்றிப் பாடவேண்டுகிறேன்" என்றுகூறி, குசஸ்தலவாசிகளை நோக்கி "நீங்களும் அவ்விதமே பாடுங்கள்"என்றான். உடனே கௌசிகன், மன்னவனைநோக்கி, "மன்னா! எனது நாவில் சதாகாலமும் வாசஞ்செய்யும் வாணியானவள் பகவானையன்றி மகவானாகவிருப்பினும் அவனைஸ்தோத்திஞ்செய்யவும் சொல்லவும் மாட்டா"ள் என்று விடையளித்தான். கௌசிகனுடைய சீடர்களாகிய வசிட்டன், கௌதமன், அருணி, பௌரஸ்வதன், வைசியன், சிதாராம் தாஸன், சிசா என்பவர்கள், காளிங்கனைப் பார்த்து "மன்னா! எமதுகுருகூறியதுண்மையே" என்றார்கள். உடனே குசஸ்தலவாசிகளான ஸ்ரீகான்முதலிய விஷ்ணுபக்தர்களும் மன்னவனை நோக்கி, "எமதுசெவி நாராயணனுடைய நாமத்தைத் தவிர வேறெதையுங்கேட்காது." ஆதலால் தங்கள் கீர்த்தியும் வேண்டாம். அதைநாங்கள் கேட்கவும் மாட்டோம். வாயால் தோத்திரஞ்செய்யவும் மாட்டோமென்றார்கள்.

இவர்கள் இங்ஙனங் கூறியதைக் கேட்ட மன்னவன் மனமடங்காக் கோபங்கொண்டு தன்னுடைய ஊழியக்காரர்களைப் பார்த்து, "இந்தபிராம்மணர்கள் செவியிற்படும்படி நீங்கள் எனது கீர்த்தியைப் பாடுங்கள்; நாற்புறங்களிலும்பாடும்போது இவர்கள் கேட்காமலிருப்பதெங்ஙனம்?" என்று உத்தரவளித்தனன். மன்னனுடைய கட்டளையை மேற்கொண்ட ஊழியக்காரர்கள் அனைவரும் அரசனுடைய புகழைப் பாடினார்கள். உடனே கௌசிகன் முதலிய பக்தர்களிற்சிலர் தங்கள் காதைப் பொத்திக் கொண்டார்கள். சிலர் ஒருவர்க் கொருவர் மரத்தினாற் செய்த முளைகளைக் காதிலடித்துக் கொண்டார்கள். சிலர், அரசன் தன்புகழைப் பாடும்படி நிர்ப்பந்திப்பானெனப் பயந்து, தங்கள் நாக்கைத் துண்டித்து விட்டார்கள்.

இவர்களுடைய செய்கையைக் கண்ட அரசன் கடுஞ்சினம் மடைந்து, தன்னுடைய தேசத்தினின்றும் இவர்களைத் துரத்தினான். கௌசிகன் முதலியவர்கள் தங்கள் தங்கள் பொருள் முதலியவைகளை யெடுத்துக் கொண்டு வடதிசையை நோக்கிச் சென்றார்கள். அங்கு சிலகாலம் வசித்துக் கொண்டிருந்து மரணமடைந்தார்கள்.

பிறகு அவர்கள் யமலோக மடைந்தார்கள். அவர்களைக் கண்ட யதருமராஜன் இப்பொழுது நாம் இவர்களை என்னசெய்யலாமென யோசித்து ஆச்சரிய மடைந்தான். இப்படியிருக்க, இதே தருணத்தில் பிரமனவன் திக்பாலகர்களைப் பார்த்து, "கானயோகத்தால் நாராயணனைப் பூசித்து அவரிடத்து அன்புசெலுத்தி வந்தவர்களான கௌசிகன் முதலியவர்களை, உங்களுக்குத் தேவத்வம் சித்திக்கவேண்டுமாயின், இப்பொழுதே அழைத்து வாருங்கள்" என்றார். உடனே திக்பாலகர்களிற் சிலர், ஏ கௌசிக! கௌசிக! என்றும்சிலர்மாலதி!மாலதி!!என்றும்சிலர்பத்மாக்ஷ!பத்மாக்ஷ!!என்றும் கதறிக்கொண்டு யமலோகம் சென்று அவர்களனைவரையும் தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாக ஒரு முகூர்த்தகால நேரத்தில் பிரம்மலோகத்தையடைந்தார்கள். இவ்விதங்கொண்டு வரப்பட்ட கௌசிகன் முதலானவர்களைப் பார்த்த பிதாமகன், அவர்களை எதிர்கொண்டழைத்து நல்வரவுகூறிப் பூசித்தார். பிரம்மதேவர் இவ்விதம்

அவர்களைப்பூசித்ததுதேவர்களுக்குக்கோலாகலத்தைக்கொடுத்தது. பிறகு பிரமதேவர் தேவர்கள் புடைசூழ கௌசிகன் முதலானவர்களோடு விஷ்ணுலோக மடைந்தார்.

வைகுண்டத்தில் மகா விஷ்ணுவானவர் ஆயிரங்காத வழியுபரமுள்ளதும் ஆயிரம் வாசற்படிகளுள்ளதும் இரத்தினங்களிழைக்கப்பெற்று மிகுந்த காந்தியுடன் விளங்குவதுமாகிய ஓர் திவ்ய விமானத்தின் மத்தியிலுள்ள இரத்தின சிங்காதனத்தில் வீற்றிருக்கிறார். இவரைச் சூழ போக சித்தி பெற்றவர்களும் சதா காலமும் பகவானிடத்தில் பக்தி செலுத்துகிறவர்களும், நாராயணனைப் போலவே நான்கு புயமுடையவர்களும் களங்க மற்றவர்களுமான சுவேதத்வீப வாசிகளில் அநேக ஸ்திரீ புருஷர்களிருக்கிறார்கள். லோக சவரக்ஷணையில் மிகுந்த ஆவலுள்ள தேவர்களுமிருக்கிறார்கள். அவர்களைப் பகவான் பார்த்துக்கொண்டு சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்.

இச்சமயத்தில் பிரமதேவர் கௌசிகன் முதலானவர்களையழைத்து வந்து பகவானைப் பணிந்து தோத்திரம் செய்துநின்றார். பிரபுவான நாராயண மூர்த்தி கௌசிகன் முதலானவர்களைப் பார்த்து "ஏ கௌசிக! என்றழைத்து ஆதரவுடன் வரவேற்று மற்றவர்களையும் ஒவ்வொருவராக அழைத்து அருள் நோக்களித்தார்.

இதைப் பார்த்துத் தேவர்கள் பரமாச்சரியமடைந்து ஜயகோஷம் செய்தார்கள். பிறகு பகவான் நாராயண மூர்த்தி பிரமதேவனைப் பார்த்து "இங்கு வந்திருக்கும் குசஸ்தல வாசிகள் அனைவரும் இதமான காரியத்தைச் செய்திருக்கிறார்கள். நமது நாம கீர்த்தனஞ் செய்து அதன் உண்மையை யறிந்திருக்கிறார்கள் வேறு தெய்வத்தை உபாசித்தவர்களல்லர். ஆகையால், இவர்கள் தேவர்களாகவும் சாத்தியர்களாகவும் இருக்கக் கடவர். இவர்கள் என்னைத் தரிசிக்க எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம்" என்றார். பிறகு கௌசிகனை நோக்கி, "ஏ கௌசிகா! நீ கணாதிபத்தியத்தை யடைந்து கணாதிபன் என்னும் பெயருடன் நான் வசிக்குமிடத்தில் உன் நண்பர்களுடன் வசித்து வரக்கடவாய்" என்று கூறி மாலவனைப் பார்த்து நீ திவ்ய ரூபமடைந்து இந்த உலக

முள்ள வரையில் உன் மனைவியுடன் என் கானங்களைக் கொண்டு உன் இஷ்டம் போல் சஞ்சரித்து வரக் கடவாய்" என்றார். பிறகு பத்மாக்ஷனை யழைத்து, "நீ பொருளுக்கு அதிபதியா யிருப்பது டன் தனாதிபதி யென்னும் பெயருமடைந்து உன் இச்சைப்படி சுகமாக சஞ்சரித்து வரக் கடவாய்" என்றார்.

இவ்விதம் அவரவர்களுக்குத்தக்க பதவியை யளித்தவுடன் பகவான் பிரமனை நோக்கி, "கௌசிகன் கணாதிபதியாய் விட்டான். இப்பதவியை யடைந்த இவனை என் சமீபத்திலிருந்து கணங்களை தோத்தரிக்கட்டும். இந்தப் பிராமணர்கள் எனது பரம பக்தர்கள். மிகக் கீர்த்தி வாய்ந்தவர்கள். முளையைக் கொண்டு செவியை யடைத்துக் கொண்டது ஹரி நாம சங்கீர்த்தனத்தைத் தவிர வேறொன்றுக்குஞ் செவி கொடுப்பதில்லை யென்கிறபிடிவாதத்தி னாலேயே யாகையால்,இவர்கள் மகா விருதத்தை அனுஷ்டித்தவர்களாகிறார்கள். என்னுடைய சான்னித்தியத்தினால் இவர்களுக்குத் தெய்வத் தன்மை கிடைத்திருக்கிறது.

இந்த மாலவன் தன் மனைவியுடன் எனது க்ஷேத்திரத்தை யடைந்து பாடகர்களுடன் என்னைப் பூசித்து என்னுடைய குணங்களைப் பற்றிய கானத்தைச் சிரவணம் செய்து வந்தமையால், இந்த என்னுடைய புராதானமான லோகத்தை யடைந்திருக்கிறான்.

இந்த பத்மாக்ஷன் மகா தர்மிஷ்டன். மகாத்மாவான கௌசிகனுக்குப் பொருளுதவி செய்து வந்தான். ஆகையால் எனது சன்னிதானத்தை யடைந்திருக்கிறான் எனக் கூறி விட்டு, பக்த ஜனங்கள் சூழ சொர்ணகசிதமான சிங்காதனத்தில் சர்வ லோக பூஜ்பரும், பக்தி யொன்றினால் சுலபமாக அடையக் கூடிய வரும் தமது பக்த கோடிகளை ரக்ஷிப்பவருமான பகவான் சுகமாக வீற்றிருந்தார்.

ஐந்தாவது சருக்கம்.

முற்றிற்று.

ஆறுவது சருக்கம்.

இச்சமயம் இன்பமான எழுத்துக்கள் நிறைந்த தோத்திரப் பாடல்கள் கௌசிகனுடைய பிரியத்திற்காக மிகவும் உற்சாகத்துடன் உண்டாயின. இப்படித் துதிப்பதில் வீணாகானம் செய்வதில் தேர்ந்தவர்களும் வாத்தியங்கள் வாசிப்பதில் சமர்த்தர்களுமான பலர் சேர்ந்திருந்தார்கள். இந்தத் தோத்திரப் பாடல்களைக் கேட்க விரும்பி, இலட்சுமிதேவியானவள் சேடிமார்கள் பலருடன் புறப்பட்டு வந்தாள். வரும்போது மகா விஷ்ணுவின் பத்னியாகிய அந்த தேவி பாடிக்கொண்டே வந்தாள். இவளைச் சூழப் பிரம்பைக் கையிலேந்திய தாதிமார்களும் அநேகர்கள் வந்தார்கள்.

இங்கு மகா விஷ்ணுவின் சன்னிதானத்திற் கூடியிருக்கும் பிரமாதி தேவர்களைக் கண்ட இலட்சுமிதேவியின் தாதியர்களின் தலைவி, தன் கைப்பிரம்பால் அவர்களை யடித்து விலகும்படி சொன்னாள். பிரமாதிதேவர்கள் இங்குமங்குமாக வோடி அவ்விடத்தை விட்டு வெளிப் போந்து, "இவர்கள் பகவானுடைய முன்னிலையிலிருக்கும் போது நாம் எவ்வளவு? செய்தது யுக்தந்தா"னென்றெண்ணிக் கோபந்தணிந்து அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு நின்றார்கள்.

இச்சமயத்தில் ஒருவன் வந்து தும்புருமுனிவரை யழைத்தான். உடனே அம்முனிவர் இலட்மீகாந்தனாகிய மகாவிஷ்ணுவின் சன்னிதானத்திற்குச் சென்று ஆங்கோர் ஆசனத்தமர்ந்து மூர்ச்சனை அக்ஷரமாதுரியம் இவைகளுடன் இனிமையாகப் பாடி வீணாகானம் செய்தார். கானம் செய்வதில் மிகத் தேர்ச்சி பெற்ற தும்புரு முனிவர் ஸ்ரீ மகா விஷ்ணுவின் ஆக்ஞையால் கௌசிகனுடைய பிரிதிக்காக இவ்விதம் கானம் செய்து அநேக ரத்தினங்கள்பதிக்கப் பெற்ற ஆபரணங்களையும் புஷ்பமாலைகளையும்பரிசாகப் பெற்று அவரது சந்நிதானத்திலிருந்து மிக மகிழ்ச்சியுடன் வெளி வந்தார். இவர் வந்த பிறகு தேவர் முனிவர்கள் யாவரும் பிரமனை முன்னிட்டுக் கொண்டு பகவானிடம் சென்று ஜபகோஷம் செய்து அவரைப் பணிந்து மனமகிழ்ச்சியுடன் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்

இதன் பின் நாரத முனிவர், தும்புரு முனிவர்க்கு மகாவிஷ்ணு சம்மானஞ் செய்ததைக் கண்டு மிகவும் துக்கங்கொண்டு தாபமடைந்த கண்கள் இருதயம் இவைகளையுடையவராகிச் சோக முற்று வியாகுலமடைந்தார். மகா லக்ஷிமியின் தாதிகளால் வெளியே தள்ளப்பட்ட நாரத மகாமுனிவர் மிகக் கோபங்கொண்டு "மகா விஷ்ணுவின் மனைவியாகிய இலட்சுமி தேவி தன் தாதிகளைக் கொண்டு என்னைப் பிரம்பாலடிக்கச் செய்து வெகு தூரத்திற்கப்பால் நிறுத்தி விட்டாள். இது இராக்ஷஸ சுபாவமானபடியால், அந்த இலட்சுமி தேவி இராக்ஷஸர்களின் கர்ப்பத்திற் பிரவேசிக்கட்டும். ஏ இலட்சுமி! என்னை உன் தாதிகள் விளையாட்டாகவே வெளியேதள்ளியபடியால் நீயும் இராக்ஷஸ ஸ்திரீகளால் வெளியே தள்ளப் படுவாய்" எனக் கடுஞ் சாபம் கொடுத்தார், உடனே மூவுலகமும் நடுங்கிற்று. தேவர்கள், கந்தர்வர்கள், தானவர்களெல்லாரும் ஆ! ஆ!! என்று கூச்சலிட்டார்கள்.

இங்ஙனம் உலக மாதாவாகிய இலக்ஷிமி தேவியைச் சபித்ததும் நாரத முனிவர் "என்னைச் சுடவேண்டும்; என்னைச் சுடவேண்டும்; எனப் பிரலாபித்தார். இந்தத் தும்புருவுக்கு மட்டு நாராயணனுடைய கூட்டுறவு உண்டாயிற்றே; இதென்ன ஆச்சரியம்; என்றும் துக்கித்தார். அறிவில்லாத மூடனாகிய என்னை அக்கினியிலிட்டு எரிக்க வேண்டும்; மகா விஷ்ணுவின் சமீபத்திலிருந்து வெரட்டப்பட்ட யான் உயிருடன் சஞ்சரிக்க வேண்டுமா? தும்புரு எனக்கு என்ன செய்தான்; செய்; என்னைச் சுடவேண்டும் என்று தம்மைத்தாமே நொந்து கொண்டார்.

இது இப்படியிருக்க, மகா விஷ்ணுவான்வர் இலட்சுமி தேவிக்கு ஏற்பட்ட கடினமான சாபத்தைக் கேட்டு இலட்சுமி தேவியுடன் நாரத முனிவரிடம் வந்தார். இலட்சுமி தேவி நாரத முனிவரைக் கண்டதும் அவரைத் கௌரவப் படுத்திக் கைகூப்பி நின்று கூறுகிறாள்

"முனிவரே! எனக்கு நீர் கொடுத்த சாபம் பலிக்குமென்பதிலையமில்லை. அது மாறாது. ஆயினும் அதன் சம்பந்தமாக நானொன்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் கிருபை செய்யவேண்டும். அதாவது—ஆரண்ணியத்திலிருக்கும் முனிவர்களுடைய கலசத்தில்

அவர்களுடைய இரத்தம் கொஞ்சங்கொஞ்சமாக நிறையவேண்டும். அந்தஇரத்தத்தைப் புசிக்கும் இராக்ஷஸஸ்திரியின்கர்ப்பத்தில் நான் உண்டாகும்படி கிருபை செய்ய வேண்டு" மென வேண்டினள். இப்படி இலக்ஷிமி தேவி கூறியதன்காரணம் யாதெனில், அவ்விதம் நேரிடப்போவது மில்லை; தனக்குப் பிறப் புண்டாகப் போவது மில்லை யென நினைத்துக் கூறினள். நாரத முனிவர், "அவ்விதமே ஆகுக" என்று இலட்சுமி தேவிக்குக் கூறினர்.

பின் நாராயண மூர்த்தி நாரத முனிவரைப் பார்த்து, "ஓ அந்தண சிரேஷ்டரே! நான் நாம சங்கீர்த்தனத்தால் சந்தோஷ மடைவதுபோல் தானத்தாலும் சந்தோஷிக்கமாட்டேன். தவத்தாலும் திருப்தியடைய மாட்டேன். தீர்த்தங்களாலும் ஆநந்தமடைய மாட்டேன். எனது நாமங்களையும் குணங்களையும் கானம் செய்து என்னுலக மடைந்த கௌசிகனே இதற்குத் திருஷ்டாந்தமாகின்றான். எனது நாமங்களை மூர்ச்சனை முதலியவைகளோடு கானம் செய்வது எனக்கு மிகவும் பிரியமானது. அந்தணரே! தும்புரு என்ற கந்தருவன் அவ்விதம் கானம் செய்யும் மகிமையுடையவனாதலால், அவன் எனக்கு உம்மைவிட மிகுந்த பிரியமுள்ள வனானன். மூர்ச்சனை தாளம் இவைகளோடு நீரும் கானம் செய்து எனக்குப் பிரிய முள்ளவராகக் கூடும். உமக்கு அவ்விதம் கானம் செய்ய விருப்பமிருக்கு மாகில் மானஸஸரஸின் வடபாகத்திலுள்ள மலையில் கானபந்து என்னும் பெயருள்ள (உலூகம்) கோட்டானிருக்கிறது. அதைப் பாரும். அங்கு விரைவாகச் செல்லும். உமக்குக் கானம் செய்யத்தக்க தன்மையுண்டாகும்" என்றார்.

இவ்விதம் பகவான் கூறியதும் பிறர் பேசும் பேச்சின் உண்மையை யறியவல்ல சமர்த்தரான நாரத முனிவர் பரமாச்சரிய மடைந்து மானஸஸரஸின் வட புறத்திலிருக்கும் மலையிலுள்ள கானபந்துவினிடம் சென்றார். அங்கு நான்கு புறத்திலும் கந்தர்வர்கள், கின்னரர்கள், யக்ஷர்கள், அப்ஸரஸ்திரிகணங்கள் உட்கார்ந்திருக்கக் கானபந்து அவர்களுக்கு மத்தியிலுட்கார்ந்திருந்தது. அந்தப் பறவை அங்குள்ள அனைவரையும் கண்டித்து, கானசிக்ஷை செய்வித்துக் கொண்டிருந்தது.

கானபந்து நாரத முனிவரைப் பார்த்ததும் வணங்கி நல்வரவு கூறி விதிப்படி பூசித்து, அவரைப் பார்த்து, "ஏ முனிவரே! எதற்காக நீர் இங்கு வந்தீர்? வந்த காரிய மென்ன? உமக்கு நான் செய்ய வேண்டிய தென்ன? கிருபை கூர்ந்து தெரிவிக்க வேண்டுகிறேன் என்றது. இங்ஙனம் கூறியதும் புத்திசாலியாகிய நாரதர் அந்தப் பறவையைப் பார்த்து. "மகா ஞானமுள்ள உலூக சிரேஷ்டமே! மிகவும் ஆச்சரியமான என் வரலாற்றைக் கேள்.

வைகுண்டத்தில்நாராயண மூர்த்தியின் அருகேயிருந்தஎன்னை இலட்சுமி தேவியின் தாதிகள் தள்ளி விட்டார்கள். அங்கு அப்பொழுது வந்த தும்புரு வென்னும் கந்தர்வனை மகா விஷ்ணுவும் மகா லக்ஷ்மியும் அழைத்துக் கானஞ் செய்யச் சொல்லிச் சிரவணம் செய்தார்கள். பிரமதேவர் முதல் நாங்கள் யாவரும் வெளியே தள்ளப்பட்டோம். கௌசிகர் முதலானவர்கள் அங்கு வீற்றிருந்து கானம் செய்து மகா விஷ்ணுவுக்கு மகிழ்ச்சியைத் தந்து கணங்களுக்கு அதிபதியாகிச் சுகமாக விருக்கிறார்கள். அதைக் கண்ட நான் மிகவும் துக்க மடைந்து தாப முற்றேன். இந்நாள் வரையில் யான் செய்த தானம் ஹோமம் சாஸ்திராப்பியாஸம் அத்தியயனம் இவைகள் யாவும் அவர்கள் செய்யும் கானத்தில் பதினாறில் ஓரம்சமும் பெறா. அது மகா விஷ்ணுவின் மகிமையோடு விளங்குகிறது. இவ்விதம் நான் துக்க மடைந்ததை யறிந்த நாராயண மூர்த்தி என்னையழைத்து, "உமக்குக் கானம் செய்ய விருப்பமிருக்குமாயின் நீர் கானபந்து வென்னும் உலூகத்தினிடம் செல்லும்; அப்பொழுது உமக்குக் கானம் செய்யத்தக்க தன்மை யுண்டாம்" எனக் கட்டளையிட்டனர். அந்தபகவானுடையகட்டளையைச் சிரமேற்கொண்டு நான் இவ்விடம் வந்தேன். நான் தங்களுக்குச் செய்யவேண்டிய பணி விடை யென்ன? உமக்கு நான் சீடன். அழிவற்ற உலூகமே என்னைக் காக்க வேண்டும்." என்று கூறினர்.

இதைக் கேட்டதும் தரும சிந்தையுள்ள உலூகம் நாரத முனிவரை நோக்கி, "ஏ முனிவரே! புத்தியிற் சிறந்தவரே! எனது வரலாற்றைத் தெரிவிக்கின்றேன் கேளுங்கள். கேட்க மிகவும் ஆச்சரியமாயிருக்கும். பாபங்களைப் போக்கக் கூடியது. மங்களங்களை யளிக்கக் கூடியது.

முன்னம் புவனேசன் என்னும் ஓர் அரசனிருந்தான். அவன் தருமநெறி தவறாத உத்தமன். மகா கீர்த்தி வாய்ந்தவன். அவ்வரசன் ஆயிரம் அசுவமேத யாகங்களாலும் பதினாயிரம் வாஜபேய யாகங்களாலும் தேவர்களைப் பூசித்தான். கோடிக் கணக்காகவும் அற்புதக் கணக்காகவும் கோக்களை அந்தண சிரேஷ்டர்களுக்குத் தானமாக வழங்கினான். அவ்விதமே யானைகள் குதிரைகள் கன்னிகைகளையும் பிராமணோத்தமர்களுக்குத் தானம் செய்தான்.

இவ்விதம் மகா தரும சீலனாகவிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்து வந்த அந்த புவனேசன், நாராயண மூர்த்தியை யேனும் மற்றவர்களையேனும் கானத்தால் திருப்தி செய்விக்கக் கூடாதென்றும், பரம புருஷனை வேதங்களால் தான் துதிக்கவேண்டுமென்றும் மகா உத்தமமான வேதங்களை அத்தியயனம் செய்த அந்தணர்கள் கானம் செய்யக் கூடாதென்றும், எங்கும் எப்போதும் மாதர்கள் தன்னைப் பற்றியே கானம் செய்ய வேண்டுமென்றும் வந்தி மாகதர்களும் தன்னைப்பற்றியே கானம் செய்ய வேண்டுமென்றும் ஆக்ஞை செய்திருந்தான்.

இப்படியிருக்கும் சமயத்தில் அந்நகருக்கு ஹரிமித்திரர் என்னும் ஓர் அந்தணசிரேஷ்டர் வந்து சேர்ந்தார். அவர் விஷ்ணு பக்தியிற் சிறந்தவர். அந்த மகான் அந்நகருக்கருகாமையிலோடினஓர் நதியை யடைந்து அதன்கண்ணிருந்த ஓர் மணற் குன்றில் மகா விஷ்ணுவின் பிரதிமையை வெகு அழகாகச் செய்து அதனைத் தினந் தோறும் தூப தீப நைவேத்தியங்களுடன் பூசித்து வலம் வந்து நமஸ்கரித்து வந்ததுமன்றி தாளம் வீணை லயம் இவைகளுடன் அந்த பகவானைக் குறித்துக் கானம் செய்து வந்தார். அதை யறிந்த புவனேசன், தன்னுடைய சேவகர்களை யேவ, அவர்கள் அந்த பக்தன் பூசை புரிந்துவரும் மணற் குன்றுக்குச் சென்று, அவருடைய பூசைச் சாமான்களை நான்கு பக்கங்களிலும் வாரி இறைத்து அவரையும் அரசனிடம் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

அரசன் அந்தணனைப் பார்த்ததும் வருத்தமுற்று, அவரிடமிருந்தபொருள்களைப்பிடுங்கிக்கொண்டு அவரை இராஜ்யத்தைவிட்டுத் துரத்தி விட்டான். தெய்வ வசத்தால் அந்த விஷ்ணுவின் பிரதி

மை மட்டும் அரசன் ஆக்கினைக்குத் தப்பிற்று. சிலகாலஞ்சென்ற பின்னர் அவ்வரசன் மரணமடைந்து பரலோகஞ் சென்று கோட்டான் சரீரமடைந்து நரக லோகத்தில் எப்போதும் பசியால் வருந்திக் கொண்டிருந்தான். அந்த உபத்திரவம் சகிக்கொணுத அவன் யமதரும ராஜனிடம் சென்று "தரும ராஜாவே! துர்க்கதியை யடைந்த யான் எப்போதும் பசியால் வருந்துகின்றேன். நான் என்ன பாவம் செய்தேன். இத்துன்பம் என்னை விட்டு எவ்வாறு நீங்கும். ஐயோ! நான் என்ன செய்வேன்" என்று முறையிட்டான். தருமாதருமங்களை நிரூபிக்கும் யமதருமராஜன் கோட்டானுகவிருக்கும் அந்தப் புவனேசனைப் பார்த்து, "மன்னு! நீ அறியாமையால் பெரிய பாபஞ் செய்திருக்கிறுய். அது யாதெனில் ஞாபகப்படுத்துகிறேன். வாசுதேவரையே கதியாக வடைந்த ஹரிமித்திரர் என்பவரை மிகவும் ஹிம்சித்து அவர் செய்து வந்த பூசையையும் கெடுத்தாய். அந்தப் பாபத்தால் உனக்கு எப்போதும் பசியின் துன்பம் உண்டாயிருக்கிறது. நராதிபனே! அந்தப் பாபத்தால் நீ செய்த தானம், யாகம் யாவும் வீணுயின. கீதம், நர்த்தனம், லயம் இவைகளுடன் எப்போதும்ஸ்ரீ ஹரியைப் பற்றிக் கானம் செய்து கொண்டிருந்த ஹரிமித்திரரைப் பிடித்து அவருடைய பொருளைப் பிடுங்கிக் கொண்டது உண்மை தானே? உன் சேவகர்கள் உன்னுடைய ஆக்ஞையால், விஷ்ணுவின் ஸந்நிதானத்திலிருந்த பூசாத் திரவியங்களை யபகரித்துக் கொண்டு பூசையைக் கெடுக்க வில்லையா? பிராமணர்கள் ஹரியின் கீர்த்தனையைத் தவிர வேறு கானம் செய்யக் கூடாதென்றிருக்க நீ அதைத் தடுத்தாயல்லவா? ஆகையால் உன்னைப் பாபம் பிடித்துக் கொண்டது. உனக்குக் கிடைத்த சொர்க்க பதவி முதலிய யாவும் வீணுயின. நீ ஒரு பருவத குகை சென்று அங்கிருந்து கொண்டு 'உன்னுடைய முன் சரீரத்தைத் துண்டு செய்து ஆகாரமாக்கிக் கொள். அந்தச் சரீரம் ஆனவுடன் இந்தச் சரீரத்தைப் புசி. இவ்விதம் நீ மனுவந்தரம் வரையில்நரகவாதனையிலிருக்கவேண்டும்.மனுவந்தரமானபின்நீநாயாகப் புவியில் பிறக்கவேண்டும்' பின்னர் நீ மானிடனுகப் பிறப்பாய்; என்று தரும ராஜன் கூறி அவ்விடத்திலேயே மறைந்தார். நாரத முனிவரே! முற்பிறப்பில் அரசனுக விருந்த நான் ஹரிமித்திரருக்குச் செ

ய்த அபராதத்தால் இப்போது கோட்டானுகி இந்த மானஸ மலை யின் குகையில் வசிக்கின்றேன். எனக்கு ஆகாரமாக எனது மானிட சரீரம் என்னருகே வந்தது. அப்பொழுது நான் அதிகப் பசியுடனி ருந்தமையால் அச்சவத்தைப் புசிக்க யத்தனித்தேன். அந்த க்ஷண த்தில் மகாமகிமை பொருந்திய ஹரிமித்திரர், தெய்வ சங்கற்பத் தால் சூரியனைப் போன்ற தேஜஸுடைய இரதத்தின் மீது அப் ஸ்ர ஸ்திரிகள் தோத்தரிக்க விஷ்ணு தூதர்கள் சூழ இவ்வழியே சென்றனர், விஷ்ணு பக்தரும் மகா தேஜஸுள்ளவருமாகிய அந்த உத்தமர் என்னைக் கண்டார். சவத்தின் அருகேயிருந்தஎன்னைஅவர் தயையுடன் பார்த்து, "எ பக்ஷியே! உன் அருகே யிருப்பது புவ னேச மகாராஜனுடைய சரீரமாகவல்லவா காண்கிறது. நீ யேன் அதனைப் புசிக்க யத்தனம் செய்தாய்?" என்று கேட்டார்.

நாரத முனிவரே! அந்த ஹரிபக்தருடைய வார்த்தை யென் செவியிற் பட்டதும் அவரை வணங்கி, கைகூப்பி நின்று முன் நட ந்த வரலாறு யாவற்றையுங் கூறி, அக்குற்றத்திற்கு யான் அடைந்த பரிகாரத்தைத் தெரிவித்து ஒரு மன்வந்தரம் வரையில் சவத்தை ஆகாரமாகக் கொண்டிருந்து பிறகு புவியில் நாயாகப் பிறக்கவும் பின் மானிட ஜன்மமடையவும் நேர்ந்ததைத் தெரிவித்தேன். இவைக் கேட்டதும் ஹரிமித்திரர் கருணையுடன் என்னைப் பார்த்து "உலூகமே! எனக்கு நீ செய்த குற்றத்தை மன்னித்தேன். இந்தச் சவம் மறைந்து போகட்டும். நீயும் நாயாகப் பிறக்கவேண்டாம். என் அனுக்கிரகத்தால் உனக்குக் கானம் செய்யும் திறமையுண்டா கட்டும். நீ இன்று முதல் மகா விஷ்ணுவைக்கானஞ் செய்; தேவர் கள், கந்தர்வர்கள், அப்சர ஸ்திரிகள் இவர்களுக்கு கானசாரியனாக விரு. உனக்கு இன்று முதல் நல்ல ஆகாரமும் கிடைக்கும். பின்சில நாளில்உனக்கு மங்களமுண்டாகும்" என்றார் இவ்விதம் ஹரிமித்திரர் கூறியதும் அவருடனிருந்த விஷ்ணுபக்தர்கள் அவர் கூறியவைகளை உசிதமென ஏற்றுக் கொண்டார்கள். பிறகு நரகம் போன்ற யாவும் ஓர் க்ஷணத்தில் மறைந்தன. நாரத முனிவரே! இயற்கையிலேயே விஷ்ணு பக்தர்களின் கருணைஇப்படிப்பட்டது. குற்றம் செய்தவர் களின் துக்கத்தையும் அக்கருணை போக்குகின்றது: பிறகு அந்த ஹரிமித்திரர் அமுதத்திற் கொப்பான மொழிகளைக் கூறி விட்டு

விஷ்ணு லோகம் சென்றார். அந்த ஹரிமித்திரர் என்னும் மகானு டைய அனுக்கிரகத்தால் பசியால் வருந்தி மானிட சரீரத்தைப் புசிக்கத் தயாராகவிருந்த நான் நல்ல ஆகாரமருந்தி அப்சர ஸ்திரீ கள் கந்தர்வர்கள் முதலியவர்களுக்கு காருசாரியனாகவும் உத்தம னாகவுமிருக்கிறேன். முனிவரே! நான் கூறிய அதியற்புதமான என்னுடைய முன் ஜன்ம சரித்திரத்தைக் கேட்குமுன், மனதில் விஷ்ணுவைத் தியானம் செய்து கொண்டு சிரவணம்செய்பவன்யாரா யிருப்பினும் மஹா யோகிகளுக்கும் அதிதுர்லபமும் ஸ்ரீ மகா விஷ்ணுவின் கிருகமுமாகிய வைகுண்டலோக மடைவான்.

ஆறுவது சருக்கம்.

முற்றிற்று.

ஏழாவது சருக்கம்.

இவ்விதம் பேசி முடிந்ததும் கானபந்து நாரத முனிவரைப் பார்த்து, "இதோ கின்னரர்கள், வித்யாதரர்கள், அப்சர ஸ்திரி கணங்கள் யாவரும் கானசாரியனாகிய என்னை யடைந்து கான வித்தையை அப்பியாசம் செய்து கொள்ளுகிறார்கள் பாருங்கள். தவத்தையே பொருளாகக் கொண்டவரே! இந்த கான வித்தை தவத்தாலும் மற்ற சாமர்த்தியத்தாலும் அப்பியசிக்கத் தக்கதன்று. ஆதலால் நீர்என்னிடமிருந்து தான் இந்த கான வித்தையை அப்பியாசம் செய்துகொள்ளவேண்டும்." என்றுகூறிற்று. உடனே முனிசிரேஷ்டராகிய நாரதர் அதற் கொப்பிக் கானஞ் செய்ய ஆரம்பித்தார்.

நாரதர் கானஞ் செய்யத் தொடங்கியதும் கானபந்து அவரைப்பார்த்து, கானம் செய்யும் போது கவனிக்கவேண்டியவிஷயங்கள் பல;கூறுகிறேன் அவைகளைக்கவனமாய்க் கேட்டுக் கொள்ளுங்கள்.

கானம் செய்யும் போது வெட்கத்தை விட்டு விடவேண்டும். இது போலவே ஸ்திரீகளின் சங்கம காலத்திலும் துன்பம் வரும் போதும் விவகாரத்திலும் வரவு செலவிலும் வெட்கத்தை விட்டு விடவேண்டும். மந்தன், மறைந்திருப்பவன், கையை உதறும் இயல்புள்ளவன், திறந்த வாயன், நாக்கை அடிக்கடி வெளியே கொண்டு வருகிறவன், தன் தேகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவன், பிறரைப் பாராமலிருப்பவன், கைகளை உயரத் தூக்குகிறவன், உயரப் பார்க்கிறவன், இவர்கள் கான வித்தையை அப்பியசிக்கத் தகாதவர்கள். இவைகளன்றி கானம் செய்வதில், ஹாஸியம், பயம் நடுக்கம், சோகம், பிறரிடத்தெண்ணம், தாகம் இவைகளேழும் கூடாதவைகள். ஒருகையால் தாளம் போடக்கூடாது. பசியின் துன்பமுடையவன் கானஞ் செய்ய அருகனல்லன். இருட்டில் கானம் செய்யவே கூடாது. இப்படிப்பட்ட விதிகளைக் கானம் செய்யும் போதுசெவ்வையாக அனுஷ்டிக்க வேண்டும் என உபதேசித்தது. பிறகுநாரதர் அந்த உலூகத்தினிடம்தேவவருடங்களில்ஆயிரவருடமிருந்து கான சாஸ்திரத்தை அப்பியாசம் செய்தார். கான சாஸ்தி

ரங்களின் தன்மையையறிந்தவரும், வீணை முதலியவற்றில் தேர்ந்தவரும் சுவரங்களின் பேதங்களை நன்கறிந்தவருமாகிய முனிசிரேஷ்டர் நாற்பத்தாறுயிரம் சுவரபேதங்களைத் தெரிந்து கொண்டார். பிறகு கந்தர்வர்களும் கின்னரர்களும் நாரதரிடம் மிகவும் அன்புபாராட்டி வந்தார்கள். பிறகு நாரதர் கானபந்துவைப் பார்த்து, "காங்கைகளுக்குச் சத்ருவாகிய உலூகமே! உன்னையடைந்து நான் சங்கீத சாஸ்திரத்தை அறிந்து கொண்டேன். உனக்கு கான சாஸ்திரத்தில் நல்ல ஞானமிருக்கிறது. நீ யடைய விரும்புவதென்ன ? நான் அதை உனக்குச் செய்கிறேன்" என்றார். அதைக் கேட்ட கானபந்து "ஏ பிராமணோத்தமா! பிரம தேவனுடைய ஓர் பகலில் பதினான்கு மனுக்கள் ஏற்படுகின்றார்கள். பிறகு மூவுலகத்திற்கும் பிரளயம் ஏற்படுகிறது. அது வரையில் எனக்குக் கீர்த்தியும், மங்களமும், மன அப்பியாசமும் ஏற்படவேண்டும்" என்று கூறிற்று. நாரதர் உலூகமே! நீ கோரியபடியே ஆகும். இந்தக் கற்பம் சென்றபின்பு நீ கருடனாகப் பிறப்பாய். அப்பொழுதும் அச்சுதனுடைய குணங்களைக் கானம் செய்து சாயுஜ்யம் பெறுவாய். உனக்கு மங்களமுண்டாகும். நான் போய் வருகிறேன். எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் எனக் கூறி உலூகத்தினிடம் விடை பெற்றுக் கொண்டு தும்புருவை ஜயிப்பதற்குச் சென்றார்.

இங்கே தும்புருவின் கிருகத்திற்கருகே, விகார உருவமுடையவர்களும் கை, தொடை, கால் இவைகளை யிழந்தவர்களும் மூக்கு கண், மார்பு இவைகளை யிழந்தவர்களும் சேதிக்கப்பட்ட சரீரமுடையவர்களுமாகிய ஸ்திரீ புருஷர்களிருக்கக் கண்டார் நாரதர். இவ்விதம் அங்கபங்கமடைந்து கிடக்கும் அவர்களைப்பார்த்து, நீங்களேன் இத்தகைய கோலத்திற்குள்ளானீர்கள் என விசாரித் தார்.

அவர்கள் "முனிவரே! நாங்கள் இராகங்களின் ஸ்திரீகளும் புருஷர்களுமாகிறோம். நாங்கள் இவ்விதம் அங்கபங்கமடைந்ததற்கு நீரே காரணம். நீர் சந்திகளைப் பேதப் படுத்திக் கானம் செய்கிறீர். அதனால் எங்களுக்கு இந்தத் துன்பம் ஏற்பட்டது. இனித் தும்புரு பாடியதன் பிறகு தான் சேதபேதங்களை யடைந்த எங்களுடைய அவயவங்கள் சரிப்படவேண்டும். தும்புருவால் எங்களுக்

ளுச்சகமும் உம்மால் தொந்தரவுமுண்டாகிறது என்றார்கள். நாதர் இதைக் கேட்டதும் ஆச்சரியமடைந்து "என்னைச் சுடவேண்டும் சுடவேண்டும்" என்று சொல்லிக் கொண்டு நாராயண மூர்த்தியிடம் சென்றார்.

சுவேதத்வீபத்திலிருந்த பகவான் தரிசனம் செய்யவந்த நாரத முனிவரைப்பார்த்து, "ஏ நாரத! கான பந்து வென்னும் உலூகத்தினிடம் நீர்கானசாஸ்திரங் கற்றுவந்த போதிலும்இன்னும்கானசாஸ்திரத்தின் கரைகண்டவரல்ல. கான விஷயத்தில் நீர் தும்புருவுக்குச்சமானராக மாட்டீர். வைவஸ்வத மனுவந்தரத்து இருபத்தெட்டாவது தடவையில் துவாபரயுகத்தின் முடிவில் நான் யாதவவம்சத்தில் வசுதேவ தேவகியினிடம் கிருஷ்ணனாக அவதரிக்கப் போகிறேன். அப்பொழுது என்னிடம் வந்து உண்மையுணர்க்கின், கானசாஸ்திரத்தின் முடிவைத்தெரிவிக்கின்றேன். தும்புருவுக்குச் சமமாகச் செய்கின்றேன். அதுவரையில் நீர் தேவர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் இந்த கான சாஸ்திரத்தை உபதேசம் செய்துகொண்டிரும்" என்று கூறி மறைந்தார்.

பிறகு வீணாகானம் செய்வதில் ஆவலுடையவரும் தேவர்களுக்குச் சமமானவரும் தவங்களுக்கு இருப்பிடமாக விளங்குகிறவரும் வாசுதேவரிடம் பக்தியுடையவருமாகியநாரதர் தமது வீணையை யேந்திக் கொண்டு உலகெங்கும் சஞ்சாரஞ்செய்ய வாரம்பித்து, வருணன், அக்னி, வாயு, ஈசானன் இவர்களுள்ள லோகங்களேடோறும் சென்று அங்கங்கு விஷ்ணுவை வீணாகானம் செய்து தோத்தரித்து வந்தார். அப்பொழுது ஒருசமயம் பிரமதேவரிடம் சென்றார். இங்கு பிரமதேவரிடம் ஹாஹா-ஹூஹூ என்ற பெயரையுடைய இரண்டு கந்தர்வர்கள் மகாவிஷ்ணுவைக் குறித்துக் கானம்செய்து கொண்டிருக்கக் கண்டு சந்தோஷ மடைந்தார். பிரமதேவரை வணங்கி அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு மீண்டும் உலகெங்கும் சஞ்சாரஞ்செய்து கொண்டிருந்தார்.

இங்ஙனம் சிலகாலமிருந்த பின்னர், மறுபடியும் தும்புருவின் இருகம் சென்றார். அங்கு முன்னிருந்த அங்க வீனர்களைக் காணவில்லை. ஷட்ஜம் தைவதம் முதலிய சுவரங்கள் உருவங்கொண்டு விள

ங்குவதைப் பார்த்தார். பார்த்ததும் வெட்கமுற்று அங்கு தங்காமல்விரைவாக வெளிப் புறப்பட்டுப் பலவேறிடங்களுக்குச் சென்று கானசாஸ்திரத்தை அப்பியாஸம் செய்வித்தார்.

பின்னர்முன்னம் நாரதமுனிவருக்குக் குறிப்பிட்டகாலம் வந்ததும் நாராயணமூர்த்தி வசுதேவ நக்குத் தேவகியிடம் கிருஷ்ணனாக அவதரித்தார். அச்சமயத்தில் கானவித்தையிற் சிறந்த நாரதமுனிவர் ஏழுசுவரங்களை யறியவும் அவைகளுக் குரிய ஸ்திரீகளைக் காணவும் எண்ணங்கொண்டு ரைவதகபர்வதம் சென்றுஅங்கு கிருஷ்ணனைவணங்கி, முன் தமக்கு சுவேதத்திவில்ஆக்ஞாபித்தபடிவந்ததாகவும் தெரிவித்தார். உடனே கிருஷ்ணமூர்த்தி புன்முறுவலுற்று ஜாம்பவதியையழைத்து''ஜாம்பவதி! இம்முனிவருக்குக்கானம் செய்யும் கிரமத்தை விதிப்படி அப்பியாசம் செய்துவை'' என்றார். ஜாம்பவதி அவ்விதமே யாகட்டுமென்று தன்நாயனுக்குப்பணிவிடை செய்துவிட்டு நாரதமுனிவருக்கு மனமகிழ்ச்சியுடன் கானசாஸ்திராப்பியாசம் செய்வித்தாள். பின்பொரு வருடமானபின் கேசவர் நாரதரையழைத்து, சத்தியபாமையிடம் சென்று மறுபடியும் கானசாஸ்திராப்பியாசம்செய்யும்படி ஆக்ஞாபித்தார். நாரதர் அவ்விதமே சத்தியபாமையிடம் சென்றுகானசாஸ்திரம் பயின்றுவந்தார். அங்கு ஒருவருடமானபின் சத்தியபாமை நாரதரை வாசுதேவரிடம் செல்லும்படி கூறினாள். நாரதர் அவ்விதமே கிருஷ்ணனிடம் வந்தார். கிருஷ்ணன் ருக்மிணி அரண்மனைசெல்ல ஆக்ஞாபித்தார். நாரதர்கிருஷ்ணனுடைய கட்டளைப்படி அங்குச் சென்று கானம் செய்தார். அதனைக்கேட்ட அங்கிருந்த மாதர்களும் தாதிகளும் ''முனிவர் கானம் செய்கின்றார். ஆயினும் உண்மையான சுவரம் தெரிந்து கொள்ளவில்லை'' என்றார்கள். பின் நாரதர் இரண்டு வருடகாலம் ருக்மிணி தேவியின் அரண்மனையில் வெகு சிரமத்துடனிருந்துகான சாஸ்திரம் பயின்று வந்தார். அங்ஙனம் பயின்றும் சுவரங்களுக் குரிய ஸ்திரீகளை அறியமுடியவில்லை. பிறகு கருணாநிதியாகிய கிருஷ்ணபகவான் நாரதமுனிவரை யழைத்துக் கான சாஸ்திரத்தைக் கற்பித்தார். அதன்பின்சுவரங்களுக்குரிய ஸ்திரீகள் எதிர் தோன்றினர். நாரதரும் பிரம்மானந்த மடைந்தார். அவர் கொண்டிருந்த துவேஷமும் நீங்கிற்று. தும்புருவிடமிருந்த அசூயையும் நீங்கிற்று. பிறகு தேவ ரிஷி விஷ்ணுவை நமஸ்கரித்து ஆனந்த மடைந்தனர்.

பிறகு விஷ்ணு பகவான், முனிவரைப்பார்த்து "முனிவரே! நீரெல்லா வற்றையும் அறிந்தீர். என் சன்னிதானத்திலிருந்து கானஞ் செய்து கொண்டிரும். என்னுலகமாகிய சுவேதத்வீபத்தில் நீர் கேட்டுக்கொண்டபடி பூர்த்தியாயிற்று; எப்போதும் தும்புருவுடன் உண்மையாகக் கானஞ்செய்யும்" என்று ஆக்ஞைசெய்தார்.

இவ்விதம் கிருஷ்ண பகவான் கூறியதும் நாரத முனிவர் உலகெங்கும் சஞ்சரித்துக் கொண்டு லோக நாயகராகிய கிருஷ்ண பகவானையும் சிவனையும் பூசித்து வந்தார். அச்சமயம் மகா விஷ்ணுவின் ஆக்ஞைப்படி பரமசிவன் எழுந்தருளி யிரா நின்ற கைலாஸகிரிக்குச் சென்று அங்கு கானம் செய்தார். முனிவரே! இத சாஸ்திரத்தின் கிரமம் இது தான். பிராமணன் எப்போதும் வாசுதேவரென்கிற பிரம்மத்தைக் கானம் செய்தால் விஷ்ணுவின் சாயுஜ்யமடைவான். யாகங்களெல்லாவற்றையும் செய்த பலனைப் பெறுவான். ஈசுவரனுடைய குண சம்பந்த மற்ற கானம் எவன் செய்கிறானோ அவன் நரக வாதனைக் குள்ளாவான். செய்கையிலும், மனதிலும் வாக்கிலும், வாசு தேவரைத் தியானம் செய்பவன், அவர் சரித்திரத்தைச் சிரவணம் செய்பவன், அவர் குணங்களைப் பாடுகிறவன் இவர்கள் யாவரும் அந்த பரமாத்வையே அடைவார்கள்.

ஜானகியின் ஜனனத்தை முன்னால் உடையதும் அபூர்வமானதும் செவிக்கின்ப மளிக்கக்கூடியதும் இரகசியமானதும் பாபக்கூட்டங்களைத் தகிக்கக் கூடியதும் மங்களங்களைக் கொடுக்கக் கூடியதுமாகிய இச்சரித்திரத்தை சிநேகத்தை முன்னிட்டு உனக்குக் கூறினேன்.

ஏழாவது சருக்கம்.

முற்றிற்று.

எட்டாவது சருக்கம்.

குற்ற மற்ற அந்தண சிரேஷ்டனே! இலக்ஷிமி தேவி நாரத முனிவர் சாபப்படி முனிவர்களின் இரத்த சம்பந்தத்துடன் இராக்ஷஸ ஸ்திரீயின் கர்ப்பத்தில் உற்பவித்து பூமியில் ஜனக மகா ராஜனுக்குப் புத்திரியானதைக் கூறுகிறேன் கேள்.

பத்துத் தலையுடைய இராவணன் என்னும் ஓர் அரக்கன் மூவுலகத்திற்கும் தான் அரசனாக ஏற்படுவதற்கும் ஜரா மரண மில்லாமலிருப்பதற்கும் அநேக வருட காலம் தவம் புரிந்து வருகையில் மகா தேஜஸோடு விளங்கினான். அப்படிப்பட்ட அவனுடைய காந்தியால் உலகம் முழுதும் மிகத் தாப மடைந்தது. அச்சமயம் பிரம தேவர் தேவர்களுடன் அவன் முன் தோன்றி "புலஸ்திய வம்சத்தில் பிறந்த ஏ இராவணா! இனி நீ தவம் செய்வதை நிறுத்தி விடு; நீ செய்யும் கடுமையான தவத்தால் உலகம் முழுதும் சாம்பலாகப் போய் விடும் போலிருக்கிறது. நீ விரும்பும் வரத்தைக் கேள் கொடுக்கிறேன்" என்றார். பிரமனது உரையைச் செவியுற்ற இராவணன் சூரிய பிம்பத்தை நோக்கிய வண்ண மிருந்த தன் கண்களைச் சரியான நிலைமைக்குக் கொணர்ந்து, லோக நாயகராகிய பிரம தேவனை வணங்கி, "பிரபுவே! எனக்கு எவராலும் மரண முண்டாகம லிருக்கவேண்டும் என, பிரமன் "உனக்கு மரணம் சம்பவியாமலிராது. ஆகையால் அதை விடுத்து வேறு வரன் கேள்; என்றான். மாயாவியாகிய இராவணன், தேவர்கள், அசுரர்கள், யக்ஷர்கள், பிசாசங்கள், உரகர்கள், இராக்கதர்கள், வித்தியாதரர்கள், கின்னரர்கள் இவர்கள் எவர்களாலும் எனக்கு மரண முண்டாகமலிருக்க வேண்டும். இதுவன்றி, என்பெண்மேல் நான் மோகங்கொண்டு அதைவேண்டநேர்ந்து, அப்பெண் மறுக்குமாகில் அச்சமயம் எனக்கு மரண முண்டாகவேண்டும்" என்று கேட்டான். பிரம தேவர் "அவ்விதமே ஆகும்" எனக்கூறி உடனே தமதிருப்பிடம் சென்றார்.

பிறகு அவ்வரக்கன் மானிடர்களைத் துரும்பாக் கருதி மதிக்கவேயில்லை. பிரமதேவர் அருளிய வரத்தின் வலுமையால் இராவ

னன் மூவுலகத்தை ஜயித்துக் கன்னியமடைந்தான். இவன் ஒரு காலத்தில் தண்டகாரண்ணியம் வந்தான். அங்கு தவம்புரிந்து அக்னிக் கொப்பாகவிளங்கும் முனிவர்களைப் பார்த்து,இம்முனிவர்களை ஜயிக்காதவரையில் நானெப்படி இந்த மூவுலகத்தையும் ஜயித்தவனாவேன். மகாத்மாக்களாகிய இவர்களை வதஞ்செய்வதில் நன்மை ஒன்றையும் காணேம் என ஆலோசித்து, முனிவர்களை நோக்கி, "நான் உலகமுழுவதையும் வென்று பிரபுவாயிருக்கிறேன். உங்களையும் ஜயிக்க விரும்புகிறேன்." என்று சொல்லிக்கொண்டே, தன் பாணத்தின் நுனியால் ரிஷிகளின் தேகத்திற்குத்தி அதிலிருந்துண்டாகும் இரத்தத்தைக் கலசத்திலேந்தி எடுத்துக் கொண்டு அவ்வழியே சென்றான்.

அவன் போகும் வழியில் ஓர் முனிவராச்சிரமமிருந்தது. அது கிருத்ஸமதர் என்னும் ஓர் முனிவருடையது. அவருக்கு நூறு பிள்ளைகளிருந்தனர். பெண் மட்டும் இல்லை.ஆகையால் அம்முனிவர்மகாலக்ஷ்மியைத் தாம் தமக்குப் புத்திரியாக அடைய வேண்டித்தமக்கருகே ஒருகலசம் வைத்துக் கொண்டு அதில்தினந்தோறும்கொஞ்சம்கொஞ்சமாகப்பாலை விட்டு மந்திரோச்சாரணம் செய்துதருப்பையின் நுனியால் கலக்கிக் கொண்டே வந்தார். இந்த முனிவர் இராவணன் சென்ற அன்றையதினம் வேறு வனம் சென்றிருந்தார். தெய்வச் செயலால் அக்கலசத்தைக் கண்ட இராவணன் தன் கைக்கலசத்திலிருந்த இரத்தத்தை அதில் விட்டுக் கலந்து அதையெடுத்துக்கொண்டு தன்னுடைய வீட்டிற்குச்சென்று தன் மனைவிமந்தோதரியை யழைத்து, "இந்தக் கலசத்தை வெகு கவனமாகப் பாதுகாத்துவா; இதிலிருக்கும் இரத்தம் விஷத்தைக் காட்டிலும் கடுமையானது. இதை யாருக்கும் கொடுக்காதே. நீயும் புசிக்கக் கூடாது. இது முனிவர்களுடைய இரத்தம்" என்று கூறிக் கலசத்தை அவள் கையிற் கொடுத்தான்.

மூவுலகங்களையும் ஜயித்து அவைகளைத் தனக்குக் கீழாக்கிக் கொண்ட இராவணன், தேவ, அசுர, யக்ஷகின்னர ஸ்திரீகளை அபகரித்து எடுத்து வந்து, மந்தர மலையிலும் சத்திய பருவதத்திலும் இமய விந்திய பருவதங்களிலு மிருந்து அவர்களோடு கிரீடை செய்து கொண்டிருந்தான்.

இச்சமயத்தில் பரிசுத்தமான மனமுடைய மந்தோதரி, தன் நாயகன்தன்மேல்அன்பில்லாமல் பரஸ்திரீயோடு ஸ்னேகம் வைத்துக் கொண்டிருப்பதற்கு மிகவும் வருத்தமுற்று, “இங்ஙனம் கணவனால் வஞ்சிக்கப்படும் ஸ்திரீகளுடைய யௌவனத்தையும், குலத்தையும் பிழைப்பையும் சுடவேண்டும். ஆகையால் நான் மரணமடைவதே உத்தமம்” என நிச்சயித்து, நாயகன் தன்னிடம் கொடுத்து விட்டுப்போன முனிவர்களுடைய இரத்தத்தை எடுத்துப் பதிவிருதையாகிய மந்தோதரி பானம் செய்தாள். இது இலட்சுமி தேவியை உத்தேசித்து ஜபிக்கப்பட்ட பால்கலந்த இரத்தமானதால் மந்தோதரி அக்னி போல் பிரகாசிக்கும் கர்ப்பத்தை யடைந்தாள்.

அது கண்ட மந்தோதரி ஆச்சரிய மடைந்து, கொடிய விடத்தினும் கடுமையான இரத்தத்தைப் பானஞ் செய்தேன்! அதனால் கர்ப்பமுண்டாயிருக்கிறது. நான் கர்ப்பமடைந்த இச்சமயமோ கணவன் ஊரில்லாத சமயம். அவன் காமவெறி கொண்டு பரஸ்திரீகள் அனேகரோடு விளையாடிக் கொண்டிருக்கின்றார். இந்த வருடமுழுதும் எனக்கும் என் நாயகனுக்கும் சம்பந்த மேற்படவில்லை. பதிவிருதையாகிய நான் இப்பொழுது கர்ப்பம் அடைந்திருப்பதைப் பற்றி என் கணவனிடம் என்ன சொல்வேன்—என்று பல படியாக யோசனை செய்து கொண்டு தீர்த்தயாத்திரை செய்யும் உபாயத்தை முன்னிட்டு விமானத்திலேறி குருக்ஷேத்திரம் சென்றாள். குருக்ஷேத்திரம் அடைந்ததும் தன் கர்ப்பத்தை வெளிக்குக் கொணர்ந்து அதை அவ்விடத்திற் புதைத்து வைத்து விட்டு ஸரஸ்வதிநதியில் ஸ்நானம் செய்து தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தாள். இந்த இரகசியத்தை ஒருவரிடமும் சொல்லவில்லை.

இப்படியிருந்து வருகையில் சில காலத்திற்குப் பின் ஜனக மகாராஜன் ஜாங்கலதேசத்தில் யாகஞ் செய்யக் கருதி குருக்ஷேத்திரம் வந்து சொர்ணக் கலப்பை கொண்டு யாகபூமியைச் சோதித்தார். அப்பொழுது கலப்பையின் நுனியில் ஓர் கன்னிகை கிடைத்தனள். கன்னிகை வெளிப்பட்டதும் தேவர்கள் புஷ்பவருஷம் பொழிந்தார்கள். இதைக் கண்ட ஜனகமகாராஜன் இன்னதுசெய்வதென்கிற யோசனையேயில்லாமல் திகைத்து நின்றார். அப்போது ஆகாய மார்க்கத்தில் “அரசனே! இந்தக் கன்னிகையை நீ எடுத்

துக் கொண்டு போய்ப் பாதுகாத்துவா. இவள் தேவர்களுக்குரியவள் மகா காந்தியுடையவள். உனது கிருகத்தில் மங்களகரமான காரியங்கள் நடக்கும். உலகத்திற்கும் சுகமுண்டாகும். யாகத்தை விடாமல் நடத்து. அது விக்கினமில்லாமல் முடியும். இக்கன்னிகை கலப்பைக் கொழுவிற் கிடைத்தமையால், இவளுக்குச் சீதை யென்கிற பெயர் ஏற்படட்டும். இக்கன்னிகையை உனது பெண்ணாகவே யெண்! என அசரிரி வாக்குண்டாயிற்று. இதைக் கேட்டதும் ஜனகன் பரமாச்சரியமடைந்து இதுவும் தெய்வ கிருபைதானென்று நினைத்து, கன்னிகையை யேற்றுக் கொண்டு பின் யாகத்தை முடித்து விட்டு அக்கன்னிகையின் ஆச்சரியமான வரலாற்றைப் பற்றி மகரிஷிகளுக்குத் தெரியப்படுத்தினன்.

பிராமணோத்தமரே! சீதாதேவியின் ஜனனத்திற்குக் காரணம் கூறினேன். இதை மானிடன் சிரவணம் செய்வானாகில் பாபங்கள் யாவுமொழிந்து சுகம் பெறுவான். தவிர ஜனகமகாராஜன் குமாரியின் உற்பத்தியைக் கூறும் இக்கதையைக் கேட்பினும், கேட்கும்படி செய்யினும் மறுபடி பூமியில் பிறப்பு ஏற்படாது. மிகுந்த புண்ணிய பலனுமுண்டாகும். அவர்களுடைய கிருகத்தில் சீதாதேவி யெப்போதும் வாசம் செய்வாள்.

சீதையின் உற்பத்தியைக் கூறும்

8வ-து அத்தியாயம்.

முற்றிற்று.

9-வது சருக்கம்.

ஸ்ரீராமபிரான் சீதாதேவியைமணஞ்செய்து கொண்டு தசரதர் முதலானவர்களுடனும் சகோதரர்களுடனும் சீதையை யழைத்துக்கொண்டு வாத்திய கோஷத்துடன் அயோத்தியாபுரிக்குப்புறப்பட்டுவந்தார்.

அச்சமயம், ரிசீக முனிவரின் புத்திரராகிய ஜமதக்னி முனிவருக்கு ரேணுகையிடம் உண்டான பரசுராமர், எந்தக் காரியத்தையும் எளிதில் முடிக்க வல்லவரும் தசரத புத்திரருமாகிய இராமபிரானுடைய திருமணச் செய்தி கேட்டு வழியில் இராமனைச் சந்தித்தார். க்ஷத்திரியர்களைக் கருவறுக்கும் வில்லைபடைத்த இவர் தசரத குமாரனாகிய இராமபிரானுடைய பராக்ரமத்தைப் பரிக்ஷிக்க வேண்டுமென்கிற எண்ணங்கொண்டார். இராமச்சந்திரன் தம்முன் அஸ்திரத்துடன் வந்து நிற்கும் பிரமரிஷியைப் பார்த்து புன்னகை புரிந்து "ஓ முனிசிரேஷ்டரே! உமது வரவு நல்லவரவாகுக. உமக்கு நான் செய்யவேண்டிய பணிவிடை யென்ன" என்று கேட்டார். பிருகுவம்சத்திற் பிறந்த இராமர், தசரத இராமனைப் பார்த்து, "என்னாலும் என் வரவாலும் பிரயோசன மென்ன விருக்கிறது? க்ஷத்திரியர்களுக்குக் காலன் போன்ற வில் இதோ இருக்கின்றது. ராகவ! உனக்குப் பராக்கிரம மிருக்குமாயின் இதனை ஆரோபணம் செய்" என்றார். இதைச் செவியுற்றதும் தாசரதி "மகிமை வாய்ந்த பரசுராமரே! நீர் என்னை அவமதிக்கவேண்டாம். க்ஷத்திரியர்கள் பிராமணர்களிடம் தங்கள் பராக்ரமத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசுதல் சிறிதும் தருமமாகாது. அதுவும் இக்ஷுவாகுவம்சத்தரசர்களுக்குத் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்ளுதல் மிகவும் இகழ்ச்சியானது" என்றார். இங்ஙனம் கூறிய சீதாகாந்தனை நோக்கி, "இக்ஷுகுலோத்பவனே! வாய்ப்பேச்சுப் பேசுவதில் சிறிதும் பயனில்லை. வில்லை எடு" என்றார் பரசுராமர். உடனே பராக்ரமசாலியும் தாசரதியுமாகிய இராமச்சந்திரப்பிரபு மிகவும் கோபங் கொண்டு க்ஷத்திரிய சிரேஷ்டர்களைச் சங்கரித்ததும்

தேவார்கமானதுமாகிய வில்லைவிளையாட்டாக ஆரோபணம் செய்து மந்தகாசத்துடன்குணத்தொனி செய்தார். இடிபோன்ற அந்தச்சப்தத்தால் பூதங்கள் யாவும் நடுங்கின. பிறகு தாசரதி "பரசுராமரே! ஆரோபணஞ் செய்து விட்டேன். இனி நானுமக்குச் செய்யவேண்டியதென்ன,என்றார். பரசுராமர்,"இதோ இந்த பாணத்தைச் செவிவரையிழு"என்று திவ்யமான பாணமொன்றைக் கொடுத்தார். இராமச்சந்திரன் மிகச் சினமடைந்து, "ஏபார்க்கவராம! உமக்குக் கர்வம் மிகுதியுமுண்டென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மன்னித்தேன். பிரமதேவனுடைய அனுக்கிரகத்தால் நீர் க்ஷத்திரியர்களை நாசஞ் செய்தீர். அந்த கர்வத்தால் என்னையும் இப்போது நிந்திக்கிறீர். என்னுடைய உருவத்தைப்பாரும், உமக்கு அதற்குரிய கண்களைக் கொடுக்கிறேன்." எனக் கூறித் திவ்யதிருஷ்டியைக் கொடுத்தார்

பிறகு, அந்த பார்க்கவராமர் தசரதராமரது திவ்யசரீரத்தில் ஆதித்தர்கள், வசுக்கள், ருத்திரர்கள், அக்கினிகள், நக்ஷத்திரங்கள், கிரகங்கள், நதிகள், தீர்த்தங்கள், ரிஷிகள், பிர்ம்மசொரூபம்பெற்றவர்கள், சித்தியர்கள், தேவரிஷிகள் சமுத்திரங்கள், பருவதங்கள், வேதங்கள், உபநிஷத்துக்கள்,யாகங்களுடன் வஷட்காரங்கள், ரிக்வேதங்கள், யஜுர்வேதங்கள், சாமவேதங்கள், தனுர்வேதங்கள், மின்னல்கள், மேகக் கூட்டங்கள், வருஷங்கள், இவைகள் யாவையும் கண்டார். அக்கணமே மகாவிஷ்ணு அந்த பாணத்தைப் பிரயோகித்தார். உடனே இடிவிழுந்தன. கொள்ளிக்கட்டைகள் விழுந்தன. மண்மாரி பொழிந்தது. பூமி நடுங்கிற்று. பெரும் ஓசை யுண்டாயிற்று. இப்படிக் கிளம்பிய பாணம் பரசுராமரையும் மூர்ச்சையடையும் படி செய்து அவரிட மிருந்த விஷ்ணுவின் அம்சத்தையும் கிரகித்துக் கொண்டு இராமரிடம் வந்து சேர்ந்தது.

பிறகு பரசுராமர் மூர்ச்சை தெளிந்தெழுந்து பிரக்ஞையுற்றுப் பிராணன் தன் நிலைமை யடைந்தவுடன் விஷ்ணுவின் அம்சமாகிய இராமச்சந்திர மூர்த்தியை வணங்கி அவரது உத்தரவு பெற்று மறுபடி மகேந்திர பருவதம் சென்றார். அங்கே அவர் அருந்தவம் புரிந்து கொண்டிருந்தார்.

இப்படியாக வருடம் ஒன்று கடந்தபின், ஒளியிழந்து மத மடங்கித் துக்கத்துடனிருந்த பரசுராமனை அவருடைய பிதிர்க்கள் கண்டு, "ஏ புத்திர! விஷ்ணுவிடம் சென்று நீ செய்த காரியம் சரியல்ல அவர் மூவுலகமும் பூஜிக்கத்தக்கவர். எங்கும் புகழ்படைத்தவர். ஆகையால் நீ புண்ணிய நதிசென்று தீர்த்த ஸ்நானம் செய்துவா. உனக்குத் திடசரீரமுண்டாம். புண்ணிய நதி எதுவெனில் உன்னுடைய பிரபிதாமகராகிய பிருகு முனிவர் தேவயுகத்தில் தீப்தோதம் என்னும் பெயர் கொண்ட நதியில்ஸ்நானஞ் செய்து சிறந்ததவம் செய்தார். அங்கு நீ சென்று ஸ்நானம் செய்" என்றார்கள். பரசுராமர் தமது பிதிர்க்களின் சொற்படி அநுஷ்டானங்களைச் செய்து மறுபடியும் முன்போன்ற தேஜஸையடைந்தார்.

ஏபாலக! உத்தமமான இந்தஇராமசரித்திரத்தைசிரவணஞ்செய்பவன் பாபங்களொழியப் பெற்று விஷ்ணுலோக மடைவான். பிறகு இராமச்சந்திர பிரபு வந்திமாகதர்கள் பக்தியுடன் தோத்தரிக்க, தேவர்கள் புஷ்பவருஷங்களை வருஷிக்கச் சீதாதேவியுடன் உத்தர கோசல தேசம் வந்து சேர்ந்தார்.

பரசுராமருக்கு விசுவரூபதரிசனம் அளித்த

9-வது சருக்கம்

முற்றிற்று.

10-வது சருக்கம்.

பிறகு இராமச்சந்திரமூர்த்தி ஓர் காரணங்கருதி சீதை, இலக்குமணர் இவர்களுடன் தண்டகாரண்யம் சென்று அங்கு கோதாவரி நதிக்கரியில் ஓர் பர்ணசாலை ஏற்படுத்திக் கொண்டு சில காலம் வாசஞ் செய்து காட்டில் வேட்டை விளையாடி வந்தனர்.

அப்பொழுது ஒரு சமயம் இராவணன் சீதையைக் கண்டு மோகங் கொண்டு இராமரையறியாமல் அந்தப் பிராட்டியை அபகரித்துச் சென்று இலங்கையில் வைத்திருந்தனன்: இச்செய்தியறிந்த அதிவீரர்களாகிய இராமரும் இலக்குமணரும் சீதையைக் கண்டு பிடிக்கவேண்டுமென்கிற ஆவலுடன் காடெங்கும் சஞ்சாரம் செய்தார்கள். அப்பொழுது சீதையைக் காணாத துக்கத்தால் வருத்தமுற்று இராமர் கண்களினின்றும் நீர் பெருகிற்று. அது ஓர் நதியாகி வைதரணியென்கிற பெயரை யடைந்தது. இது கண்ணீரிலிருந் துண்டானமை பற்றியும் மானிடர்கள் அதில் ஸ்நானம் செய்து தர்ப்பணம் செய்வது பற்றியும் இதற்கு வைதரணியென்கிற பெயர் ஏற்பட்டது. கண்களினின்றும் தோன்றிய மலங்களே மலைகளாயின. தயாளமனதுடைய இராமர் சுக்ரீவனென்கிற வானரவீரனுடை நட்பினையடையக் கருதி, தம்பி இலக்குமணனுடன் ரிசியமூகபர்வதம் வந்தார். வாலிக்குப் பயந்து தன் ஐந்து அமைச்சர்களுடன் அங்கு வாசம் செய்யும் சுக்ரீவன் வில், பாணம் இவைகளைத் தரித்த வீரர்களாகிய இராமலட்சுமணர்களைக் கண்டான். கண்டதும் அதிபலசாலிகளாகிய இவர்கள் வாலியைச்சேர்ந்தவர்களோவென்று எண்ணி, அநுமானை பிரமசாரிவேடத்துடன் அவர்களிடம் சென்று விசாரித்துவர அனுப்பினான். ஆஞ்சநேயர் இராமலட்சுமணர்களைப் பார்த்து அவர்களுக்கருகே வந்து நீங்களிருவரும் யாரெனக் கேட்டார். உடனே நான்கு கைகளுடனும் சிரசில் கிரீடமும் கையில் சங்கம் சக்ரம், கதை இவைகளும் மார்பில் ஸ்ரீவத்ஸமென்கிற மணியும் விளங்க, மஞ்சட்

பட்டாடை புனைந்தவராய், இலட்சுமிஸரஸ்வதி இருவரும் இருமருங்கிருந்து வர, நான்கு பக்கங்களிலும் பிரமதேவரின் குமாரர்களாகிய சநந்தர் முதலியவர்கள் ஸ்தோத்திரஞ் செய்ய, தேவர்கள், பிதிர்க்கள் கந்தர்வர்கள், சித்தர்கள், வித்தியாதரர்கள், உரகர்கள், இவர்கள் சூழ, தேவரும் மகாத்மாவும், தாமரைமலரை யொத்த நேத்திரங்களையுடைய வரும் ஆயிரஞ் சூரியனுக்குச் சமானமானவரும் அநேக சந்திரனை நிகர்த்தமுகமுடையவரும் லோகேசுவரனுமாகிய இராமபிரான் விளங்கினர். ஆயிரம் படங்களைக் குடையாகக் கொண்டு ஆதிசேஷராகிய இலட்சுமணர் விளங்கினர். இவ்விரு திவ்ய உருவங்களைக் கண்டதும் ஆஞ்சநேயர் பரமாச்சரிய படைந்து, ஓர் கணம்வரையில் இரண்டுகண்களையு மூடிக்கொண்டிருந்து பின் அந்த ஆச்சரிய உருவங்களைப் பார்த்து வணங்கி, பலவிதமாகத் தோத்திரஞ் செய்து இரகுவீரரை நோக்கி, "நான் சுக்ரீவனுடைய மந்திரி; அநுமான் என்பது என் பெயர். தங்களிருவரையும் இன்னரெனத் தெரிந்து வரும்படி என்னைச் சுக்ரீவன் அனுப்பினர். அதன் பொருட்டு நான் இங்கு வந்தேன். முதலில் நான் உங்களிருவரையும் இரண்டு கைகளையுடையவராகவும். வில்பாணம் இவைகளைக் கையிலேந்தியவராகவு மிருக்கக்கண்டேன். இப்போது நீங்கள் வேறுவிதமாகக் காணப்படுகிறீர்கள். நீங்கள் யாரென்பதைத் தெரிவிக்க வேண்டு" மென வேண்டினர். இவ்விதம் தத்தளித்துப் பேசுகிறவரும் இது என்ன ? எப்படி இவ்விருவுருவமும் தோன்றியதென எண்ணுகிறவரும் விநேயரும், அஞ்சலி செய்து கொண்டிருப்பவரும் பவனகுமாரனுமாகிய அனுமானை நோக்கி இராமச்சந்திரர் கூறுகிறார்.

ஸ்ரீராமர் சதுர்புஜதாரியாகத் தமது திருவுருவதரிசனங் காட்டியதைக் கூறும்.

10-வது சருக்கம்.

முற்றிற்று.

11-வது சருக்கம்

புருஷோத்தமராகிய இராமர் அனுமானைநோக்கி, "ஏபாலக! பக்தனுகிய உன்கேள்விக்கு விடைதருகிறேன் கேள். நித்தியமும் ஆத்ம சொருபத்தின் இரகசியத்தை விளக்குவதுமாகிய ஞானமிது. இதை யாருக்கும் சொல்லக்கூடாது. இதனைத் தேவர்கள், பிராமணர்கள் இவர்களுங் கூடமுயற்சி செய்து தெரிந்துகொள்ளவில்லை. இந்த ஞானத்தை யடைந்த பிராமண சிரேஷ்டர்கள் பிர்ம்மமாகவே ஆய்விட்டார்கள்.மறுபடி ஸம்ஸாரபந்தத்திற் குள்ளாகவில்லை. முன்னிருந்த பிரமஞானிகளும் இவ்வாறுதா னுனர்கள். இரகசியத்தினும் இரகசியமிது. வெளிவிடாமல் காப்பாற்றக் கூடியது. அறிவுடையவன் வம்சததில் பிர்மஞானிகள் ஜனிக்கின்றார்கள்.

"பக்தசிரேஷ்டனே! ஆத்மாகேவலமாகவும் நிர்மலமாகவும் சாந்தமானதாகவும், நித்தியமாகவும் சூக்ஷ்மமாகவும் பிரத்தியக்ஷ சின்மாத்திரமாகவும் தமக்குப் பரமாகவும் இருக்கிறார். அந்த ஆத்மாதான் அந்தர்யாமியாகிய சத்புருஷன். அவர் தான் பிராணன் அவர் தான் மகேசுவரன், அவரே காலாக்னி, அந்த சொருபந்தான் அவ்யக் தம் என வேதம் முறையிடுகின்றது. ஆத்மாவினிடந்தான் பிரபஞ்சமுண்டாகிறது. அவரிடமே லயமடைகின்றது. அந்த ஆத்மா மாயையில்கட்டுண்டு மாயாவி யாகும் போது அநேக சரீரங்களைப் படைக்கின்றார். பிரபுவாகிய இந்த ஆத்மாஜனனமரணமடைவதில்லை. தம்மை அடைந்தவர்களுக்குச் சம்சார பந்தத்தைக் கொடுப்பதில்லை. இந்த ஆத்மா பிருதி அப்பு, தேயு, வாயு, ஆகாயம், பிராணன், மனம், வியக்தம் இவைகளெவையுமல்ல, சப்தம் பரிசம், ரூபம், இரஸம், கந்தம், இவைகளுமிவர்க்கில்லை. அகங்காரம் இவருக்கில்லை, வாக்கு, கைகால், பாயு உபஸ்தம் இவைகளெவையும் இவருக்கில்லை. இவர் பிரகிருதியுமல்ல. புருஷனுமல்ல, மாயையுமல்ல; பிராணனுமல்ல, உண்மையில் சைதன்ய ரூபமுடையவர்.பிரகாசத்திற்கும் இருளுக்கும் சம்மந்தமில்லாததுபோல்

பிரபஞ்சத்திற்கும் பரமாத்மாவுக்கும் சம்பந்தமில்லை. உலகத்தில் நிழலும் மரமும் ஒன்றுக் கொன்று விலக்ஷணமாக விருப்பது போலவே, பிரபஞ்சமும் புருஷனும். ஆத்மா இயற்கையில் மலின முடையதாகவும் சொஸ்தமில்லாததாகவும் இருந்தால் எவ்வளவனந்தம் ஜன்மம் எடுத்தாலும் முத்திசித்தியாது. முத்தியையடைந்த முனிவர்கள், ஆத்மாவை விகாரமற்றதென்றும் துக்கமற்றதென்றும் ஆனந்தசொரூபமுடையதென்றும் அழிவற்றதென்றும் அறிகிறார்கள். நான் கர்த்தா, சுகதுக்கமுடையவன், கிருசன், ஸ்தூலன் என்னும் அறிவு அகங்காரத்துடன் சம்பந்தமடைந்து விடுகிறது. அப்பொழுது ஜனங்கள் ஆத்மசொரூபத்தில் ஆரோபணம் செய்கிறார்கள். வேதமறிந்த பெரியோர், ஆத்மசொரூபத்தைச் சாக்ஷியென்றும் மாயைக்குப்புறம்பானதென்றும்போக்தாவென்றும் அழிவற்றதென்றும் எங்கும் வியாபித்திருப்பதென்றும் தெரிந்து கொண்டு பேசுகிறார்கள். ஆகையால் இந்த சம்ஸாரமானது மானிடர்களுக்கு ஏற்படுவது அக்ஞானத்தின் மூலமாகத்தான். வேறு விதமாகத் தோன்றுவது அக்ஞானத்தால் தான். அந்த அக்ஞானம் பிரகிருதியின் சம்பந்தமுள்ளது. பரமபுருஷன் எப்போது முள்ளவர், ஜோதி சொரூபமானவர். எங்குமிருப்பவர். அகங்காரத்தால் ஏற்படும் அவிவேகத்தினால் நான் கர்த்தாவெனக் கருதுகிறான். பிர்ம்மசொரூபத்தை வாதிக்கும் மகரிஷிகள், பிரதானம் பிரகிருதி காரணம் இவைகளைத் தெரிந்து கொண்டு ஆத்மசொரூபத்தை ஸதஸத்சொரூபமாகவும் நித்தியமாகவும் அவ்யக்தமாகவும் அறிகிறார்கள். ஆத்மா கூடஸ்தனாக விருப்பினும் நிரஞ்சனனாகிறான். ஆத்மா அக்ஷரம், பிர்ம்மசொரூபம் என்பதை உண்மையாகத் தெரிந்து கொள்வதில்லை. ஆத்மாவையடையப் பெறாத ஜடவஸ்துவில் தன்னுடையது என்கிற எண்ணமேற்படுகிறது. இராகம் துவேஷம் முதலியவைகள் யாவும் பிரமத்தின் நிபந்தனையால் ஏற்படுகின்றன. இந்தப் பிரபஞ்சோற்பத்தி காலத்தில் பாவபுண்ணியங்கள் ஏற்படுவதாக வேதங் கூறுகிறது. அந்த பாபபுண்ணிய வசத்தால் தேகங்கள் அநேகம் உண்டாகின்றன. நித்தியமானதும் எங்கும் நிறைந்திருப்பதும் குற்றமற்றதுமாகிய ஒரே ஆத்மா மாயையின் சக்தியால் பேதமடைகிறது. இயற்கையில் அது பேதிப்பதில்லை. ஆகையால் முனிவர்கள் உண்மையில் அத்வைதத்தையே கூறுகிறார்கள்.

அவ்யக்தத்தின் ஸ்வபாவத்தால் பேதம் ஏற்படுகிறது. மாயையானது ஆத்மாவை ஆச்ரயிக்கிறது. புகையின் சம்பந்தத்தால் ஆகாயம் மாசுபடாதது போல் கைகால் முதலிய அவயவங்களால் ஏற்படும் பாபங்களால் ஆத்மாவுக்கு ஒன்றும் ஏற்படாது. படிகக்கல் இயற்கையிலேயே பிரகாசிப்பதுபோல் ஆத்மா நிர்மலமாகப்பிரகாசிக்கின்றது. அறிஞர்கள் இந்த உலகத்தை ஞான சொரூபமென்று கூறுகிறார்கள். அறிவிலிகள் அர்த்த சொரூப மென்கிறார்கள். கூடஸ்தரும் நிர்க்குணரும் வியாபகரும் இயற்கையிலேயே சைதன்ய சொரூபருமாகிய பரமாத்மாவை பிர்ம்மஞானிகள் அர்த்த சொரூபமென வறிகிறார்கள்.

ஆகையால் ஆத்மா, அக்ஷரூபமுடையவன். சுத்தன், நித்தியன். எங்கு மிருப்பவன். அழிவற்றவன் எனவறிக. முத்தியை விரும்புகிறவர்கள் இவனைத்தான் உபாசிக்க வேண்டும். மனனஞ் செய்யவேண்டும். சிரவணம் செய்யவேண்டும். எங்கும் நிறைந்துள்ள சைதன்னிய சொரூபம் பிரத்தியட்சமாக எப்போது யோகியின் மனதில் பிரகாசிக்கிறதோ அப்பொழுது தான் அந்த யோகி பிர்ம்மத்தை அடைகிறான். எவன் எப்போது பூதங்களெல்லாவற்றையும் தன்னிடத்திலும் பூதங்களெல்லாவற்றிலும் தன்னையும் காண்கிறானோ அப்பொழுது தான் அவன் பிர்ம்மத்தை யடைகிறான். எப்பொழுது பூதங்களைப்பார்க்க வில்லையோ அப்பொழுது பரவஸ்துவுடன் ஒன்றாகிக் கேவலனாகிறான். மனதில் தோன்றக் கூடிய காமாதிகள் எப்பொழுது நீங்கப்பெறுகிறானோஅப்பொழுது தான் முத்திக்குரியவனாகிச் சுகமுறுகிறான். தனித்தனியே யிருக்கும் பூதங்களை எப்பொழுது ஏகமாகக் காண்கின்றானோ அப்பொழுது தான் அவன் பிர்ம்மத்தை யடைகிறான். தன்னை உண்மையில் கேவலமான ஆத்மாவென வறிந்து உலகம் யாவும் மாயாகாரியமென எண்ணுகிறவனே சுகமடைகிறான். பிறப்பு, இறப்பு மூப்பு துக்கம், வியாதி இவைகளுக்கு மருந்து போல்வதும் கேவலமானதும் விக்ஞான சொரூபமுடையதுமாகிய பிர்ம்மசொரூபம் எப்பொழுது எவனிடம் பிரகாசிக்கின்றதோ அப்பொழுது அவன் சிவனாகவே ஆகிறான். உலகத்திலுள்ள நதிகளும் நதங்களும் யாவும் கடலிற் சங்கமமாவது போல், நிஷ்களமான பிரமத்துடன் ஒர்தனத்தில் ஐக்கியப்படுவான். ஆகையால் எஞ்சியது விக்ஞானமே.

பிரபஞ்சமில்லை. விக்ஞான சொரூபம் அக்ஞானத்தால் சூழ்ந்திருக்கும்போது தான் மோகமுண்டாகிறது. சம்பந்தமற்ற ஞானமே நிர்மலமானது. சூக்ஷ்மமானது. விகற்பமற்றது. அழிவற்றது. விக்ஞான சொரூபமுள்ளது. இதுவே உத்தமமான ஏகாந்த ஞானம். இதை நானுனக்கு உபதேசஞ் செய்தேன். இதுவே வேதாந்தங்களின் ஸாரம். இந்த சாங்கியத்தில் ஒருமைப்பட்ட மனதுடனிருப்பதே யோகம் என்பது. யோகத்தால் ஞானமும் ஞானத்தால் யோகமும் ஏற்படுகிறது ஞானம் யோகம் இவையிரண்டுமுடையவனுக்கு அடைய வேண்டிய தொன்றுமில்லை. யோகிகள் அனுஷ்டானம் செய்வது சாங்கியமேயாகும். சாங்கியம் யோகம் இவையிரண்டும் ஒன்றென்று தெரிந்து கொள்கிறவன் தத்துவமறிந்தவனாகிறான். ஏ பாலக! சிலர் பொருளாசையில் மனதைச் செலுத்தி அதிலேயே முழுகிப்போகிறார்கள். ஞானம் யோகம் ஆகிய இவையிரண்டும் கைவரப்பெற்றவன் தேகம் நாசமடைந்தபோது எங்குநிறைந்ததும் சலனமற்றதுமான பிர்ம்மத்தை அடைவான். நான் ஆத்மா; அவ்வியக்தன். மாயாவி, பரமேசுவரன், வேதங்களிற் கூறப்படுகிறவன். கைகால்களையுடையவன். அந்தர்யாமி, காலில்லாதவன், ஆயினும் வேகமாகச் சொல்லக்கூடியவன். எல்லோருடைய இருதயத்தினு மிருப்பவன். கண்ணில்லாமலே பார்ப்பவன், செவியின்றிக் கேட்பவன். நான் எல்லாவற்றையும் அறிவேன். என்னையாரும் அறியார்கள். தத்துவமறிந்த பெரியோர்கள் என்னையே மகாபுருஷனென்பார்கள். நிர்க்குணமும் நிர்மலமுமாகிய என் சொரூபத்தை எனது மாயையால் மோகமடைந்த தேவர்களும் தெரிந்துகொள்ள மாட்டார்கள். உண்மையறிந்த யோகிகள் எனது அதிரகசியமும் எங்கும் நிறைந்ததுமாகிய தேகத்தில் பிரவேசித்து சாயுஜ்யம் பெறுகிறார்கள். எங்கும் நிறைந்துள்ள மாயை எவர்களை அடைவதில்லையோ அவர்கள் சுத்தமும் பரமுமாகிய ஸ்தானத்தைஉண்மையால்அடைகிறார்கள். அநேககற்பகோடிகாலமாயினும் அவர்கள் மறுபடியும் திரும்புவதில்லை. என் அனுக்கிரகத்தால் இந்த உபதேசம் உனக்கு ஏற்பட்டது. சாங்கியயோகத்தைத் தழுவிய இந்த விக்ஞான சொரூபத்தைப் பிள்ளையில்லாதவனுக்கும் சீடனுக்கும் யோகிகளுக்கும் உபதேசம் செய்பக்கூடாது.

சாங்கியயோகத்தின் விவரத்தை விளக்கும்.
11-வது சருக்கம் முற்றிற்று.

12வது சருக்கம்.

ஓ அந்தணசிரேஷ்டனே ! இராமர்மூர்த்தி அனுமானுக்குபதேசஞ்செய்ததின் கருத்தைக்கேள். அவ்யக்தத்தி லிருந்து காலம் உண்டாயிற்று. பிரதானம், புருஷன், பரம் இவைகளுமுண்டாயின. பிரபஞ்ச சொரூபமாகிய பரவஸ்துவுமுண்டாயிற்று. அந்த பரவஸ்துவின் கைகால்கள் எங்குமிருக்கின்றன. அவரது கண்கள் சிரம் முகம் இவைகள் எங்கு மிருக்கின்றன. அவரது செவியும் எங்கு மிருக்கின்றது. ஆகவே உலகெங்கும் அவரே வியாபித் திருக் கின்றனர். இந்திரியங்களுக்குக் குணங்கள் ஏற்படுவது போல் அவருக்கும் தோற்றமுண்டு. உண்மையில் இந்திரியங்களே யில்லாதது. எல்லாவற்றிற்கும் ஆதாரமானது. ஸ்திரமான ஆநந்தமுடையது. இரண்டாவதில்லாதது. உபமானமற்றது. பிரமாணத்திற்கு அடங்காதது. விகற்பமற்றது. நிராபாஸமானது. பின்னமான சொரூபமுடையது. அழிவற்றது. நிர்க்குணமானது. பரமாகாசம். அறிஞர்கள் அந்தவஸ்துவையே ஞானமெனக் கூறுவார்கள். அந்தவஸ்துதான் பூதங்களுக்கு ஆத்மா? உள் புறம் இரண்டிற்கும் அப்பாலிருப்பது. அந்த வஸ்துதான் நான். எங்குமிருப்பவன். சாந்தன். ஞானரூபன். பரமேசுவரன். அவ்யக்த ரூபமுடையவன் என்றார் இராமர். ஆகவே அந்த வஸ்து உலக முழுதும் வியாபிக்கப் பட்டதாகுமல்லவா? பூதங்கள் யாவும் என்னிடத் திலிருப்பதாக எவன் தெரிந்து கொள்கிறானோ அவன் பரவஸ்துவைத் தெரிந்துகொண்டவனாகிறானென்றார். பிரதானம் புருஷன் என்னும் இரண்டும் இரண்டு தத்துவங்கள். அவ் விரண்டுக்கும் சேர்க்கையையுண்டுபண் ணுவதே காலம். ஆதியுமந்தமுமில்லாத இம்மூன்றும் அவ்வியக்தத்தி லிருக்கின்றன. அந்த அவ்யக்தத்தைத் தவிர மற்ற எந்த வஸ்துவும் அந்த அவ்யக்த சொரூபந்தான். அந்த அவ்யக்த சொரூபத்தைத் தான் என்னுடைய உருவமென்று பெரியோர்கள் கூறுகிறார்கள் என்றார் இராமர். அந்த அவ்யக்தம் மகத்துவமுதல் விசேஷம் வரையிலுள்ள பிரபஞ்சம் யாவற்றையுமுண்டுபண்ணுகிறது. மாயையென்பது பிரகிருதி. அதுபிராணிகளை மோகிக்கச் செய்கிறது. புருஷன் பிரகிருதியில் சம்பந்தப் பட்டிருக்கும்போது பிரகிருதியின் குணங்களை யனுபவிக்கிறான். ஆதியில் உண்டான விகாரம் பிரகிருதி, மகான், ஆத்மாவென்றுசொல்லப்படு

கிறது. விஜ்ஞான சக்தியென்றும் கூறப்படுகிறது. அந்த விஜ்ஞான சக்தியிலிருந்து அகங்காரம் உண்டாயிற்று. ஆத்மாவே அகங்கார மென்கிற பெயருடையது. அதுதான் ஜீவன் அந்தராத்மா வென்ப தும். ஜன்மத்திலேற்படும் சுகதுக்கங்களை அதனாலேயே தெரிந்து கொள்ளவேண்டும். அதுதான் விஜ்ஞான சொரூபம். அதற்குமனமே உபமானமாக நிற்கிறது. அவிவேகத்தால் மானிடனுக்குச் சம்ஸார பந்தமேற்படுகிறது. அந்த அவிவேகம் பிரகிருதியிடம் சம்பந்தப் படும்போது காலமுண்டாகிறது. காலம் பூதங்களை யுண்டுபண்ணு கிறது. காலம் சம்ஹாரம் செய்கிறது. எல்லோரும் காலத்திற்கு வசப்பட்டவர்கள். காலம் யாருடைய வசத்திலு மில்லை. அந்தக் காலன் நித்தியனாகவிருந்து எல்லாவற்றையும் நிக்ரகம் செய்கிறான். அவனே, பகவான், புருஷன், பரன் எனப் பலவிதமாகச் சொல்லப் படுகின்றான். அறிஞர்கள் இந்திரியங்க ளெல்லாவற்றிலும் மனத்தையே சிறந்ததெனக் கூறுகிறார்கள். அகங்காரம் மனத்தைக் காட்டிலுமுயர்ந்தது. அகங்காரத்தைக் காட் டிலும் மகத்மேன்மை யுடையது. மகத்தைக்காட்டிலும் அவ்யக்த முயர்ந்தது. அவ்யக்தத்தைக் காட்டிலும் புருஷன் மேலானவன். புருஷனைவிட பிராணன்மேல். இந்த உலகம் யாவும் பிராணனால்வியா பிக்கப்பட்டிருக்கிறது. பிராணனைக்காட்டிலும் ஆகாயம் சிரேஷ்ட மானது. ஆகாயத்தைவிட அக்னி மேன்மையுடைத்து. அக்னி சொரூபனாகிய நான் எங்குமிருப்பவன். சாந்தன், ஞானசொரூபி, பரமேசுவரன், என்னைவிடச் சிறந்த பூதம் எதுவுமில்லை. என்னை இவ்விதந் தெரிந்துகொண்டவர்கள் பந்தத்தினின்றும் விடுபடுவர். ஆகாய சொரூபனும் மகேசுவரனும் அவ்யக்தனுமாகிய என்னைத் தவிர அசையும் பொருள்களிலும் அசையாப் பொருள்களிலும் நித்தியமாகவிருப்பது எதுவுமில்லை. மாயாமயனும் மாயையுடைய வனுமாகிய நான், காலத்துடன் சேர்ந்து பிரபஞ்சம் யாவற்றையும் படைக்கின்றேன். சங்கரிக்கின்றேன் இந்தக்காலன் என்னருகிலிருந்து உலகத்தை உண்டுபண்ணுகிறான். அநந்த சொரூபனாகவிருந்து பூதங் களைக்காரியங்களிற் பிரேரணைசெய்கிறான். இது வேதத்தின் ஆஜ்ஞை என்றார்.

உபநிஷத்தின் அர்த்தத்தைக் கூறும்
12-வது சருக்கம் முற்றிற்று.

13 வது சருக்கம்

வாயுபுத்திரனே ! எந்தக் காரியம் செய்தால் இந்த உருவம் உண்டாகுமோ எதனால் இவ்வுலகம் பிரவிர்த்திக்கிறதோ அதைக் கூறுகிறேன். சாவதான மனதுடன் கேள். சிறந்த பக்தியினாலன்றி என்னைத் தெரிந்து கொள்ள முடியாது. தானம் யாகம் முதலிய வைகளில் எதைச் செய்பினும் முடியாத காரியம். நான் வஸ்துக்க ளெல்லாவற்றிலு மிருக்கிறேன். குரங்குகளும் ஜனங்களும் என்னை சர்வசாக்ஷியாக விருப்பவன் என்று தெரிந்து கொள்ளவில்லை. இந்த பிரபஞ்சம் யாவும் எவன் மத்தியிலிருக்கிறதோ எவன் எல்லா வற்றிலுமிருக்கிறானோ அவன் தான் நான். தாதா, விதாதா, விசுவ தோமுகன் என்னும் பெயர்களுக்குரியவனும் நான் தான். முனிவர் தேவர் முதலிய யாவரும் என்னைக் காணமுடியாது. அந்தணர்கள், மனுக்கள், இந்திரன் மற்றும் மகாதேஜஸ்வியான பெரியோர்கள் யாவரும் என்னைக் காணமுடியாது. பரமேசுவர னாகிய என்னைத் தான் வேதங்கள் துதிக்கின்றன. அந்தணர்கள் அநேக விதமான யாகங்கள் செய்து அக்கினியின் மூலமாக என் னையே பூசிக்கின்றார்கள். பிர்ம்ம லோகத்திலுள்ள பிதாமகரைப் பூசிப்பதும் என்னைச் சார்ந்ததேயாம். பூதாதியாகிய ஈசுவரனை யோகிகள் தியானம் செய்வதும் எனக்குரியதுதான். நான் யாகங் களைப் புசிப்பவன். யாகங்களுக்குப் பலனளிப்பவன். தேவர்களனைவ ருடைய சரீரமும் நானே. சர்வேசுவரனும் எல்லோராலும் தோத் திரிக்கப்படுகிறவனும் நான். வேத மறிந்தவர்களும் அறத்துணை பற்றி நிற்போரும் வித்துவான்களுமாகிய பெரியோர்களென்னையே அறிந்து வணங்குகிறார்கள். என்னை உபாசிக்கும் பக்தர்களுடைய சன்னிதானத்தில் நான் எப்போது மிருப்பேன்- என்னை உபாசிக் கும் பிர்ம்ம, க்ஷத்திரிய வைசியர் என்கிற மூவருணத்தாருக்கே யன்றி மற்றவருக்கும் நான் சிரேஷ்டமான ஸ்தானத்தைக் கொடுக் கிறேன்.

என் பக்தர் ஒருபோதும் நாசமடையார்கள். என் பக்தர்கள் பாபரகிதர்கள். என் அன்பரை நிந்திக்கும் மூடன் தேவனாகியஎன்னை நிந்தித்தவனாவான். என் தொண்டரை ஆராதிக்கும் புத்திமான் எப்போது என்னை ஆராதித்தவனாவான். என் ஆராதனையின்பொருட்டு பத்திரம், புஷ்பம், பலம், ஜலம் இவைகளை மனதோடு கொடுப்பவன் எனக்குப் பிரியமுள்ள அன்பனாகிறான். நான் ஆதியில் பரமேஷ்டியாகிய பிர்மதேவரை சிருஷ்டி செய்து என் முகத்தினின்று வெளிவந்த வேதங்களை உபதேசஞ் செய்தேன். நான் யோகிகளெல்லோருக்கும் குரு. அழிவற்றவன். அறநெறி நிற்போருக்கு அரணாயிருப்பவன். வேத விரோதிகளுக்கு நமனாக விருப்பவன். யோகிகளுக்கு சம்ஸாரபந்த விமோசனம் செய்பவன். சம்ஸாரபந்தமற்ற நான் பிராணிகளுக்கு சம்ஸாரபந்த முண்டாக்கக் காரணனாகவுமிருக்கிறேன். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமாகிய முத்தொழிலியற்றுபவனும் நான்தான். நான் மாயாவி. மாயை என்பது என்னுடையசக்தி. அது உலகங்களை மோகிக்கச் செய்யக்கூடியது. எனது பராசக்தியை வித்தையென்றும் சொல்லுகிறார்கள். நான் யோகிகளுடைய மனதில் பராசக்தியுடனிருந்துகொண்டு மாயையை நாசஞ் செய்கின்றேன், நான் சக்திகளைப் பிரவர்த்திக்கச் செய்கிறவன். நிவர்த்தி செய்கிறவன். சக்திகளுக்கு ஆதாரமானவன். முத்திக்கு ஆதாரமானவன். எங்கும் வியாபியாநின்ற ஓர் சக்தி உலகத்தைப் பலவிதமாக உண்டுபண்ணுகின்றது. மற்றொரு சக்தி அநந்தரும் ஜகத்துக்கு நாதரும் ஜகத சொரூபருமாகிய நாராயணமூர்த்தியாகி உலகத்தைப் பரிபாலிக்கின்றது. மூன்றாவது உலகமெல்லாவற்றையும் சங்காரம் செய்கின்றது. அந்த சக்திக்குத் தாமஸசக்தியெனப் பெயர். அதுவே ருத்திர சொரூபமும். சிலர் அந்தசக்தியை தியானத்தாலும் சிலர் ஞானத்தாலும், சிலர் பக்தியோகத்தாலும் தெரிந்து கொள்ளுகிறார்கள். எவன் ஞானமார்க்கமாக என்னை யாராதிக்கிறானோ அவனே மற்ற பக்தர்களைக் காட்டிலும் எனக்கு பிரியனாகிறான். தியானம், பக்தி, கர்மம் இவைகளால் என்னை தியானம் செய்கிறவர்களும் என்னை யடைகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் பிறப்பில்லை. இப் பிரபஞ்சமுழுதும் என்னால் வியாபிக்கப் பட்டிருக்கிற தென்பதை எவன் தெரிந்துகொள்கிறானோ அவனுக்கு முத்தியுண்டாம். இந்த :பிரபஞ்சம் முழுவதையும் நான் பார்க்கி

றேன். மகாயோகேசுவராகிய பகவான் நானே. இந்த யோகேசுவரர் யோகத்தை உபதேசிக்கின்றார். இதுவே மகத்தாகியபிர்ம்மம். நான் பூதங்களுக்கு மகத்தாகையால் என்னை பரமேசுவரனென்று கூறுகிறார்கள். எவன் இம்மாதிரி என்னை மகா போகேசுவரனென்று தெரிந்துகொள்கிறானோ அவன் நிச்சயமான யோகாப்பியாசம் செய்தவனாவான். இதிற் சிறிதுமையமில்லை. பிரேரணை செய்கிறவன் தேவன். பரமானந்த சொரூபமுடையவன் யோகி. இவ்விதமாக எப்போதுமிருக்கிறேன். இவ்விதம் தெரிந்துகொள்ளுகிறவன் வேதமறிந்தவனாகிறான். இரகசியமானதும் வேதசம்மதமுமாகிய இந்த ஞானத்தை அறநெறிநிற்போனுக்கும் யாகம் புரிந்த மகான்களுக்கும் உபதேசம் செய்யவேண்டும்.

பக்தியோகத்தைக்கூறும்

13-வது சருக்கம்

முற்றிற்று.

14-வது சருக்கம்.

நான் ஒருவனே உலகமெல்லாவற்றையும் சிருஷ்டிக்கின்றேன். நான் ஒருவனே பரிபாலிக்கிறவன். நான் ஒருவனே சங்கரிக்கிறவன். சுவரூபன், ஸனாதனன்; வஸ்துக்களெல்லாவற்றுள்ளுமிருப்பவன். எல்லோருக்கும் தந்தை. என்னிடத்தில் தான் யாவுமிருக்கிறது. நானெங்குமிருப்பவனல்ல. நீ பார்த்த சொரூபம் என்னுடையதுதான் அந்த சொரூபத்தை நானுனக்கு என் மாயையால் காண்பித்தேன். பதார்த்தங்கள் எல்லாவற்றுள்ளும் இருப்பவன் நான். நான் உலகங்களிலுள்ளவர்களைப் பிரேரணை செய்கிறவன். இது என்னுடைய கிரியாசக்தி. பிரபஞ்சம் சலனமுறுவது என்னாலேயே. அது என் சுபாவத்தை யனுசரித்திருக்கிறது. நான் காலத்தில் பிரபஞ்சத்தை யுண்டுபண்ணுகிறேன். ஒருருவத்துடன் சங்கரிக்கின்றேன். இவ்விரண்டும் என்னாலேற்படுகின்றன. நான் ஆதிமுடிவில்லாதவன். மாயை தத்துவம் இவைகளைப் பிரவர்த்தி செய்கிறவன். சிருஷ்டியின் ஆதியில் பிரதானத்தையும் புருஷனையும் ஒன்று சேர்க்கிறேன். அவ்விரண்டும் சேர்ந்த பின்புதான் எல்லாம் உண்டாகிறது. மகத்து முதல் யாவும் என் தேஜஸால் விருத்தியடைந்திருக்கிறது. உலகசாக்ஷிபாய்க் காலசக்ரத்திற்குப் பிரவர்த்தகராயிருக்கும் இரண்யகர்ப்பர் என் தேகத்திலுண்டானவர். அந்த இரண்யகர்ப்பருக்குத் திவ்யமான ஐசுவரியத்தையும் நித்தியமான ஞான யோகத்தையும் நான்கு வேதங்களையும் கற்பத்தின் ஆதியில் கொடுத்தேன். பிரமதேவர் என்னை யோகாப்பியாசத்தால் தியானம் செய்து என் ஐசுவரியத்தை அடைந்தார். உலகங்களை என் ஆஜ்ஞையால் சிருஷ்டிக்கிறார். சர்வஜ்ஞராகவுமிருக்கிறார். அவர் நான்கு முகங்களோடிருந்து சிருஷ்டிக்கிறார். உலகங்களின் உற்பத்திக்கும் விநாசத்துக்கும் காரணமான நாராயணமூர்த்தி நான்தான். அந்த நாராயணமூர்த்தி உலகத்தைப் பரிபாலனம் செய்கிறார். பூதங்களுக்கு அந்தகனும் காலாத்மகனும் பிரபுவும் என் அம்சமுமாகிய ருத்திரன் சங்காரம் செய்கின்றான். அக்கினி,

தேவர்களுக்கு ஹவ்வியத்தையும் கவ்வியம் புசிப்பவர்களுக்குக் கவ்வியத்தையும் கொண்டுபோய்க் கொடுக்கிறான். என் சக்தியின் கட்டளைப்படி பாகம் செய்கிறான். நீர் பெருகக்காரணமாக விருப்ப வனும் தேவசிரேஷ்டனுமாகிய வருணன் ஈசுவரனுத்தரவால் எல்லாவற்றையும் ஜீவிக்கச் செய்கிறான். பூதங்களுக்குள்ளும் புறம்பு மாயிருக்கிற நிரஞ்சனராகிய பகவான் என்னுஜ்ஞையால்பூதங்களின் சரீரங்களை ஒழிக்கிறான். தேவர்கள் அமுதபானஞ் செய்யக் காரண மானவனும் மானிடர்களைச் சீவிக்கச் செய்பவனுமாகிய சந்திரன் என்னுத்தரவால் பிரகாசிக்கிறான். பிரமதேவரின் ஆஜ்ஞைப்படி உலகெங்கும் ஒளி வீசச் சூரியன் பிரகாசித்துக்கொண்டு மழையை யுண்டுபண்ணுகிறான். உலகபாலகனும் தேவர்களுக்குப்பதியும்யாகங் களுக்குப் பலனை யளிப்பவனுமாகிய இந்திரன் என்னுத்தரவால் பரிபாலிக்கின்றான். தேவதேவனாகிய என் உத்தரவால் சூரியபுத்திர னாகிய யமன் நியமப்படி துஷ்டர்களைத் தண்டித்துக் கொண்டிருக் கிறான். குபேரன் எப்போதும் நவநிதிகளுக்கு அதிபதியாகவும் தனங்களைக் கொடுக்கிறவனாகவும் இருக்கிறான். இந்த நிருருதி எனதாஜ்ஞையால் இராக்கதர்களுக்கு நாதனாகவும் தபோதனர் களுக்குப் பலனளிப்பவனாகவுமிருக்கிறான். பிரபுவாகிய ஈசுவரன் என்னுத்தரவால் வேதாள கணங்களுக்கும் பூதகணங்களுக்கும் அதிபனாகவிருக்கிறான். அங்கிர முனிவனுக்குச் சீடனாகிய வாம தேவர் ருத்திரருக்கு முதல்வராகவும் யோகிகளுக்கு இரக்ஷகராகவு மிருக்கிறார். தருமங்களைப்போதிக்கும் விநாயகர் என் சொற்படி சகல ஜனங்களும் ஆராதிக்கத்தக்கவராகவும் விக்கினங்களை யுண்டு பண்ணவும் போக்கவும் வல்லவராகவுமிருக்கின்றார். வேதமறிந்த வர்களுக்குள் சிரேஷ்டரும் தேவசேனாபதியுமாகிய கந்தபிரான் சுயம்புவாகிய என்னுத்தரவால் விளங்குகிறார். பிரஜைகளுக்குப் பதியாகிய மரீசி முதலிய மகரிஷிகள் பரனாகிய என்னுஜ்ஞைப்படி உலகத்தைப் பலபடியாகச் சிருஷ்டிக்கின்றார். சகல பிராணிகளுக் கும் சம்பத்தைக் கொடுக்கும் இலக்ஷுமிதேவி என்னுத்தரவால் நாராயணனுக்கு மனைவியாக இருக்கிறாள். ஜீவன்களுக்கு வாக் சாதுரியத்தைக் கொடுக்கும் சரஸ்வதி தேவி ஈசுவரனாகிய என தாஜ்ஞையால் பிரவர்த்திக்கிறாள். அநேக புருஷர்களைக் கொடுநரகத் தினின்றும் காக்கும் சாவித்ரிதேவி, தேவனாகிய எனதாஜ்ஞையை

அனுசரித்திருக்கின்றனள். தியானித்த மாத்திரத்தில் சிறந்தபிரம வித்தையை யளிக்கும் வல்லமையுள்ள பார்வதிதேவியும் என் வார்த்தைக்குக் கட்டுப்படுகின்றனள். அளவிறந்த மகிமையுடையவரும் தேவர்களுக்குப் பிரபுவுமாகிய ஆதிசேடன் என் கட்டளைப்படி சிரசால் உலகத்தை வகித்துக்கொண்டிருக்கிறான். சம்வர்த்தன் என்கிற பெயர்கொண்ட அக்னி வடவாரூபமாகவிருந்துகொண்டு ஈசுவரனாகிய என் கட்டளைப்படி கடல் நீர் முழுவதையும் பானஞ் செய்கின்றான். ஆதித்தியர்கள், வசுக்கள், ருத்திரர்கள், மருத்துக்கள், அச்சுவினிதேவர்கள் இவர்களும் மற்றத்தேவர்களும் எனதாஜ்ஞைக்குட்பட்டவர்கள். உரகர்கள், யக்ஷர்கள், சித்தர்கள், சாத்தியர்கள், சாரணர்கள், பூதங்கள், இராக்கதர்கள், பிசாசங்கள் யாவரும் எனக்குக் கட்டுப்பட்டவர்களே. கலைகள், காஷ்டைகள், நிமிஷங்கள், முகூர்த்தங்கள், தினங்கள், க்ஷணங்கள், ருதுக்கள், வருஷங்கள், மாதங்கள், பக்ஷங்கள், யாவும் பிரஜைகளுக்குப் பதியாகிய என்னுத்தரவுப்படி நடக்கின்றன. யுகங்கள், மன்வந்தரங்கள், பரங்கள், பரார்த்தங்கள், காலபேதங்கள் இவைகளும் என்னுத்தரவிற் குட்பட்டவைகளே. நான்குவித பூதங்கள், ஸ்தாவரங்கள், சரங்கள் இவைகளும் சுவயம்புவாகிய என்னுத்தரவுப்படியேயாம். பரமாத்மாவாகிய எனதாஜ்ஞைப்படியே பட்டணங்கள், உலகங்கள் பிரம்மாண்டங்கள் யாவும் நிலைத்திருக்கின்றன' அளவில்லாத பிரம்மாண்டங்கள் அநேக வஸ்துக்களுடன் நாலா பக்கங்களிலும் உண்டாகிப் பிறகு ஒன்று சேர்ந்து என்னுத்தரவால் அழிந்தும் போயிருக்கின்றன.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், மனம், புத்தி, பூதங்களுக்கு ஆதியாகிய ஆதிப்பிரகிருதி இவைகள் யாவும் என்னுத்தரவால் பிரவர்த்திக்கின்றன. உலகத்திலுள்ள மானிடர்களுக்கு மோகத்தை யுண்டுபண்ணும் மாயைகள் ஈசனாகிய எனதாஜ்ஞைப்படி நிலைத்திருக்கின்றன. மோகத்தை யொழித்து, நித்தியமான ஸ்தானத்தை யளிக்கும் வித்தையும் மகேசுவரராகிய எனதாஜ்ஞையால், எனக்குச் சுவாதீனமாயிருக்கின்றனள். பலபடியாகவும் கூறுவானேன்? இந்தப் பிரபஞ்சம் யாவும் என் சக்தி சொரூபமாகவிருக்கின்றது. இப்பிரபஞ்ச முழுதும் நானே நிறைந்திருக்கின்றேன். பிரபஞ்சம் என்னிடமே லயமாகிறது.

நான்தான்பகவான். ஈசன்.சுயஞ்சோதி.ஸநாதனன்.பரமாத்மா. பரபிர்மம். எல்லாரும் நானே. என்னையன்றி எதுவுமில்லை. இந்த உயர்ந்த ஞானோபதேசம் உனக்கு நான் செய்தேன். இதைத் தெரிந்து கொள்பவன் ஜனனமரணமாகிய சம்சார பந்தத்திலிருந்து விடுபடுகிறான்.மாயையால் நான் தசரதனுடைய கிரகத்தி லுற்பத்தியானேன். நான் இராமன். இவன் இலக்குமணன். இன்னும் பரத சத்ருக்னன் என்னும் இருவரிருக்கிறார்கள். இம்மாதிரிநான்கு ரூபத்துடன் உலகில் அவதரித்தேன். ஏ வாயுநந்தன! இதை நானுனக்குக் கூறினேன். நான் உன்னிடம் கொண்ட கருணையால் உபதேசஞ் செய்த இந்த சொரூபவரலாற்றை மறவாது மனத்தில் நிலை நிறுத்தல் வேண்டும். உனக்கும் எனக்கும் நடந்த இந்தச் சம்வாதத்தை ஓதுகிறவன் ஜீவன் முக்தனுவான். பாபங்களினின்றும் விடுபடுவான். பிராமணர்கள், சூத்திரர்கள், பிரமசரியத்தை யனுஷ்டிப்போர் இவர்கள் சிரவணம் செய்யும் படியாவது செய்யவேண்டும். இந்த சம்வாதத்தின் பொருளை விசாரிப்பவன் பரகதியைப் பெறுவான். இந்த சம்வாதத்தைச் பக்தியுடனும் வைராக்கியத்துடனும் சிரவணம் செய்பவன் பாபங்களெல்லா மொழிந்து பிரமலோகத்தில் விளங்குவான். ஆகையால் அறிவுடையவர்கள் மிகுந்த முயற்சியுடனிதைப் படிக்கவேண்டும். பிராமணர்கள், எப்போதும் விசேஷமாகப் படனம், சிரவணம் மனனம் இவைகளைச் செய்யவேண்டும்.

இராமபிரானுக்கும் வாயுநந்தனனுக்கும்
நடந்த சம்வாதத்தைக் கூறும்.

14-வது சருக்கம்.

முற்றிற்று.

15.வது சருக்கம்

மகாத்மாவாகிய வாயு நந்தனர் தமது இருதயத்தமர்ந்திருக்கும் ஈசனைச்சிந்தனை செய்து கொண்டு கைகுவித்துச் சிரங்குனிந்து வணங்கி, ஓங்காரத்தை உச்சரித்து தேகத்திற்குள்ளே இருதய குகையிலிருப்பவரும் மகாத்மாவும் அளவிறந்த சக்தியுடையவரும் அப்பிரமேயரும் தேவருமாகிய இராமச்சந்திரப் பிரபுவைப் பார்த்து, ஆனந்த பரிதராகி மனவமைதியுடன் வேத வசனங்களால் தோத்தரிக்கலாயினர்.

ஏகபுருஷரும் ஈசனும் பிராணேசரும். அநந்தமான யோகங்களையுடையவரும் பரதேசமானவரும் பிரம சொரூபரும் பரிசுத்தரும் இராமருமாகிய உம்மை வணங்குகின்றேன். வேத உற்பத்திக்குக் காரணமானவரும், விமலரும், பொன்வர்ணமுள்ளவரும், மனதில் வசிப்பவரும், சலனமில்லாத வரும் கவியும் மேலான பொருள்களுக்கெல்லாம் மேலானவருமாகிய உம்மையே தாந்தர்களும் சாந்தர்களுமான முனிபுங்கவர்கள் தியானஞ் செய்து தங்கள் தேகத்திற் கண்டு தரிசிக்கிறார்கள். உலகம் தங்களிடத்திலிருந்தே உற்பத்தியாயிருக்கிறது. ஆத்மாவினுடைய சிருஷ்டிக்குப் பரமாணுவாக, விளங்குபவரும் அணுவுக்கும் அணுவாக விருப்பவரும் நீரே நீர் மகத்துக்கும் மகத்தானவர் என்று இவ்விதம் சாதுக்கள் கூறுகிறார்கள். நீர் ஹிரண்ணியகர்ப்பர். உலகங்களுக்கு அந்தராத்மா. உம்மிடம் புராண புருஷர் உண்டானார். அந்தப் புருஷன் உமதுத்தரவு பெற்று ஏற்கனவே அமைந்திருந்தபடி எல்லாவற்றையும் படைத்தருளினர். வேதங்கள் உம்மிடமிருந் துண்டாயின. கடைசியில் லயமடைவதும் உம்மிடத்திலேயே. நீர் உலகத்திற்குக் காரணமானவரென்றும் நர்த்தனம் செய்பவரென்றும் இருதயத்திலிருப்பவரென்றும் நான் அறிந்துகொண்டேன். இந்த பிர்ம்ம சக்ரம் சுற்றுவதற்குக் காரண புருஷன் நீரே. நீர் மாயாவி. லோகநாயகன். உம்மை நமஸ்கரிக்கின்றேன். யோகவடிவாக விளங்குகிறவரும் சித்பதியுமாகிய உம்மைச் சரணமடைந்தேன். பரமாகாயத்தின் நடுவே,

கர்த்தனம் செய்பவரும் சர்வ சொரூபரும் நீரென்பதை நானறிந்தேன். நான் பிர்ம்மாநந்தத்தை அனுபவித்து உமது மகிமையை ஸ்மரித்துக் கொண்டிருக்கின்றேன். ஓங்காரம் உம்மையே கூறுகின்றது. சாதுக்கள் உம்மை முத்திக்குக் காரண புருஷனென்றும் அக்ஷரனென்றும் பிரகிருதியில் மறைந்த நிஜவுருவமுடையவரென்றும் சுயம் பிரகாசரென்றும் கூறுவதுண்மையே. தேவர்களெல்லாரும் உம்மை எப்போதும் ஸ்தோத்திரம் செய்கிறார்கள். குற்றமற்ற முனிபுங்கவர்கள் உம்மை வணங்குகிறார்கள். சாந்த சொரூபிகளான பிரம நிஷ்டர்கள், யதிகள், சத்திய சந்தரும் சிறந்தவருமாகிய உம்மையே அடைகிறார்கள்.

அநேக சாகைகளுடன் கூடியதும் முடிவற்றதுமாகிய தெய்வமறை உம்மையே ஏகபுருஷனென்று உபதேசிக்கின்றது. உம்மைச் சரணமடைபவர்களுக்குச் சாந்தி சாசுவதமாக ஏற்படும். மற்றவர்களுக்குண்டாகாது. நீர் ஈசன். அணிமா முதலிய குணங்களுடன் கூடியவர். தேஜஸுக்கிருப்பிடமானவர். பிரமதேவர், விசுவரூபர், பரமேஷ்டி, சுவயம் ஜோதி சொரூபர், அர்த்த சொரூபர், நித்திய முத்தர், ஆத்மாநந்தத்தை அனுபவித்துக் கொண்டு சயனம் செய்துகொண்டிருப்பவர். தேவராகிய நீரொருவரே பிரபஞ்சத்தையுண்டுபண்ணுகிறீர். விசுவரூபராகிய நீர் எல்லாவற்றையும் இரக்ஷிக்கிறீர். இந்த பிரபஞ்சம் யாவும் உம்மிடத்தில் லயமாகின்றது. உம்மை நான் நமஸ்கரிக்கின்றேன். சரணமடைந்தேன். பெரியோர்கள் உம்மைப் பரமரென்றும் இராமரென்றும் பிராணனை வகிப்பவரென்றும், அரிமித்திரரென்றும் ஈசனென்றும் சந்திரனென்றும் மிருத்தியுவென்றும் அக்னி யென்றும் சேகிதானரென்றும் தாதாவென்றும் ஆதித்தரென்றும் கூறுகிறார்கள்.

நீர் அக்ஷரம், பரமம், தெரிந்துகொள்ளக் கூடிய வஸ்து. நீர் இப்பிரபஞ்சத்திற்கு முக்கிய காரணர். நீர் அழிவற்றவர், சாசுவதர், தருமங்களை இரக்ஷிக்கிறவர், ஸனாதனர், புருஷோத்தமர். நீர் தான் விஷ்ணு; நீர் பிரமதேவர். நீர் பகவானும் ஈசனுமாகிய ருத்திரர். நீர் பிரபஞ்சத்தை உட்கொண்டவர், பிரகிருதி பிரதிஷ்டையுள்ளவர். சர்வேசுவரர், பரமேசுவரர். பெரியோர்கள் உம்மை ஏகனென்றும் புருஷரென்றும் புராணன், ஆதித்தியவர்ணர், தமக்கு வெளியிலிருப்பவர், சின்மாத்திரர், அசிந்தியரூபர், அவ்யக்

தர், சூன்னியர், பிரமசொரூபி, நிர்க்குணர், என்றும் கூறுகிறார்கள். எந்த சொரூபத்தின் மத்தியில் இப்பிரபஞ்சம் யாவும் தோன்றுகிறதோ எது அழிவற்றதோ எது சிந்தனை கடந்த தென்றும் நிர்மலமான தென்றும் ஏகரூபனென்றும் சொல்லப்படுகிறதோ எதன் மத்தியில் தத்துவ சொரூபந் தோன்றுகிறதோ எது வர்ணிக்கமுடியாததோ அந்த சொரூபம் உம்முடையது தான்.

யோகேசுவரரும், அளவிறந்த சக்தியை யுடையவரும், யாவருக்கும் அடைக்கலஸ்தானமாயிருப்பவரும்மறையுருவமாய்விளங்குகிறவரும்பரிசுத்தருமாகிய உம்மைச்சரணமென அடைந்தேன்.நாங்களெல்லோரும் வந்தனம் செய்கின்றோம். அனுக்கிரகம் செய்யவேண்டும். ஏ பூதபதியே ! அனுக்கிரகம் செய்யவேண்டும். உமது பாதாரவிந்த ஸ்மரணம் செய்வதால் சம்ஸாரத்திற்குக் காரணமாக நிற்கும் தோஷங்கள்யாவும் நாசமடைகின்றன.நான் என் மனத்தையடக்கிச் சரீரத்தை ஸ்திரப்படுத்தி ஏகரஸராகிய உம்மைச் சரணமடைந்தேன். அனுக்கிரகிக்கவேண்டும்.பவோத்பவராகிய உம்மைவணங்குகிறேன். காலசொரூபரும் யாவற்றையும் தமக்குள் லயமடையச் செய்பவருமாகிய உம்மை நமஸ்கரிக் கின்றேன். சடைபுனைந்த இராமச்சந்திரமூர்த்தியே! உம்மை வணங்குகிறேன். அக்னிக்கொப்பாக விளங்கும் பகவானே ! வந்தனம். தம்முடைய சிறந்த திருவுருவத்தைத் தரிசிக்க அனுக்கிரகம் செய்யவேண்டும் என இவ்விதம் துதிபுரிந்துவந்தனம் செய்தனர் வாயுநந்தனர்.

இராமச்சந்திரபிரபுவாயுநந்தனரிடம்சந்தோஷங்கொண்டு,தாம் கொண்டிருந்த திருவுருவங்கரந்து தமது சுயரூபமடைந்தனர். அங்ஙனமே இராமானுஜனும் தமது சுயரூபம் பெற்று விளங்கினர்.

பிறகு இராமச்சந்திரபகவான் அறிவிற்சிறந்த வாயுநந்தனரைப் பார்த்து, ஆஞ்சநேயா ! நீ செய்த இந்தத் தோத்திரத்தைப் பாராயணம்செய்பவர்கள் உத்தமகதியையடைவார்கள். ஆகையால் நீஸ்திரமாகவிருந்து செய்யவேண்டிய காரியத்தைத் தக்க உபாயத்தோடு செய்துமுடி, எனக்கூறியருளினர்.

அனுமான் துதிபுரிந்ததைக் கூறும்.

15-வது சருக்கம்

முற்றிற்று

16-வது சருக்கம்

மகாதேஜஸ்வியாகிய இராமபிரான், மீண்டும் ஆஞ்சநேயரைப் பார்த்து, வாயுநந்தன! என்மனைவியைத் துஷ்டனாகிய இராவணன் அபகரித்துச் சென்றிருக்கின்றனன். இப்பொழுது நீ சுக்ரீவனுடன் சிநேகம் உண்டாக்கிவைக்கவேண்டும்" என்றார்.

இவ்வார்த்தையைச் செவியுற்றதும் வீரனாகிய அனுமான் புன்னகைபுரிந்து, "மகாபாக்கியசாலியாகிய இராமச்சந்திரா! உமது மனைவியை இராவணன் அபகரித்தானென்பதைக் கேட்க எனக்கு மிகவும் ஆச்சரியமுண்டாகிறது. இதோ தங்களாஜ்ஞையை முடிக்கிறேன்" என்று இராமலட்சுமணர்களாகிய அவ்விருவீரரையும் தமது தோளின்மீதேற்றிக்கொண்டு சுக்ரீவனிடம் சென்றார். சுக்ரீவன் அவ்விருவீரரை நோக்கியதும் "நாம் வாலியைவென்று அரசுரிமையை யடைந்தோமெனச் சிந்தித்து.உடனே அவர்களுடன் சிநேகஞ்செய்துகொண்டு அவர்களை வணங்கி மகிழ்ந்தான்.

பிறகு இராமலட்சுமணர்கள் வாலியை வதஞ்செய்து சுக்ரீவனுக்கு இராஜ்யம் கொடுத்து அனேக வானரவீரர்களுடனும் சுக்ரீவனுடனும் அனுமான் அங்கதன் இவர்களுடைய தோளின்மீதேறிக்கொண்டு கடற்கரைக்குவந்து சேர்ந்தார்கள். இரகுபுங்கவர்கடற்கரையுற்றதும் இலக்குமணனை நோக்கி, வானரவீரர்கள் இலங்கை செல்லும்படியான ஏற்பாட்டைச்செய் என ஆஜ்ஞாபித்தார்.

இவ்வார்த்தை இராமபிரானது வாயினின்று விடுபட்டதும் இலக்குமணர் சமுத்திரத்தைப்பார்த்து, "சமுத்திர ராஜனே! வானரங்கள் உன்னைக்கடந்துசெல்லச் சாதகமாய் நீ அசையாமலிருக்க வேண்டும்" என்றார். சமுத்திரராஜன் இவ்வுத்தரவைக்கவனியாமலிருந்தான். ஆகையால் இலக்குமணர் கோபங்கொண்டு சமுத்திர ஜலத்தின் மத்தியில் விழுந்தார். அப்பொழுது இலட்சுமணருடைய தேகத்திலிருந்துகிளம்பிய அக்னிஜ்வாலையால்நீர்வற்றிப்போயிற்று.

ஜலஜந்துக்கள்யாவும்கரைவந்துசேர்ந்தன. தேவர்கள்பயந்தோடினூர்கள். இதைக்கண்ட வானரவீரர்கள் ஆச்சரியமடைந்தார்கள். ஜனங்கள்யாவரும் ஆ! ஆ!! என்று ஆரவாரித்தார்கள். ஸ்தாவர ஜங்கமங்களும் நிலைகுலைந்தன. ரிஷிகளும் பூதகணங்களும் மங்களம்! மங்களம்!! என்று கூறினூர்கள். இரகுநந்தனன் இலட்சுமணனைப் பார்த்து, நீசெய்தது சரியல்ல; சீதையின் பிரிவினையாலுண்டாகும் கண்ணீரால் மறுபடியும் இந்த சமுத்திரத்தை நிரப்புகிறேன் என்றுகூறி முன்போல் சமுத்திரத்தை நிரப்பினூர். அப்பொழுது ஆகாயத்திலிருந்து இராமரின்மீது மலர்மாரிபொழிந்தனர் தேவர்கள். சமுத்திரராஜன் இராமரை மெய்யன்போடு துதிபுரிந்து வணங்கினான். இராமர் பிறகு ஆணைகோலித்தமது வானரசைன்னியங்களோடு அக்கரை சென்று இலங்கையில் இராவண சங்காரஞ்செய்தார். உடனே அங்கிருந்தசீதாபிராட்டியைத்தமதுபுஷ்பகவிமானத்தின்மீதுஏற்றிவைத்துக்கொண்டு விபிஷணன், சுக்ரீவன், அனுமான் இவர்களுடன் அயோத்திக்குவந்தார். அயோத்தியில் உடன்பிறந்தவர்களையும் உறன்முறையார்களையும் சந்தோஷப் படுத்தினூர். பிறகு உலகுக்கெல்லாம் தாமேபரசராக விருந்து ஆனந்தப் படுத்தினூர். மிருக பக்ஷி முதலியபவைகளும் இராமபிரானை அரசனுகக்கொண்டு மகிழ்ந்தன. ஆகாயத்தில் தேவதுந்துபி வாத்தியம் முழங்கிற்று. இராமபிரான் அரசனானபிறகு காலாகாலத்தில் மழைபொழிந்து வந்தது. புஷ்ப மாரியும் பொழிந்தது.

இராமர் இராஜ்பமடைந்ததைக் கூறும்

16-வது சருக்கம்

முற்றிற்று.

17-வது சருக்கம்.

இராமச்சந்திர பிரபு இராக்கதர்களைக் கொன்று இராஜ்ய மடைந்த பிறகு இராமரைக் கண்டு புகழ முனிவர்கள் அயோத்திக்கு வந்தார்கள். கிழக்கு திக்கில் வாசஞ்செய்யும் விசுவாமித்திரர், யவக்ரீவர், ரைப்பியர், சியவனர், கண்வர் இந்த முனிபுங்கவர்களும் தென்றிசையிலிருக்கும் ஸ்வஸ்தியாத்திரேயர், நமுசர் அகத்தியர் இம்முனிவர்களும் மேற்றிசையிலிருக்கும் உபகு, காமடர், தூம்ரர், ரௌத்திராச்வர் இந்த முனிவர்களும வடதிசையிலிருக்கும் மாணுக்கர்கள், உபமாணுக்கர்கள் இவர்களுடன் கூடின வசிஷ்டர் முதலிய முனிவர்களும் வந்தார்கள். அக்கினிக்கொப்பான சரீரமுடைய மகாத்மாக்களாகிய அந்த முனிவர்கள் யாவரும் கந்தமூலபலங்களோடு இராகவரைக் கண்டு ஆசனத்தமர்ந்தார்கள்.

ஏ பாத்வாஜ! மகத்தான தேஜஸுடைய இராமச்சந்திரபிரபு, அவர் மனைவி சீதை, சகோதரர்கள் மந்திரிகள், நகரத்தார் யாவரும் முனிவர்களை வணங்கி உபசரித்தார்கள். பேசுவதில் மகா சாமர்த்தியசாலியாகிய அகத்தியர் முதலிய அந்தணர்கள், பாக்கியம்! பாக்கியம்!! எனக் கூறினார்கள். சீதாபதியைக் கொண்டாடினார்கள். நீர் உலகங்களுக்கு நாதர். உலகத்திற்குபகாரஞ் செய்கிறவர். சந்ததியோடும் அமைச்சர்களோடும் இராவணனைச் சங்கரித்ததால் இந்த உலகம் பிழைத்தது. உலகத்திற்குப் பயத்தைக் கொடுக்கும் துஷ்டர்களில் இராவணனைவிட வேறு யாரேனுமிருக்கின்றனரா? அவன் தன்பத்துவாயாலும்பத்துத் திசையிலுமுள்ளவர்களுக்குக் கட்டளையிடுவான். அப்படிப்பட்டவன் தங்களால் நாசமடைந்தான். இராம! எந்த பாக்கியத்தாலோ உலகம் ஈடேறிற்று. தாமரை மலரையொத்த கண்களும் முழங்கால் வரையில் நீண்ட கைகளும் சியாமள வர்ணமுமுடைய பகவானல்லவா நீர். முந்திபிரமதேவர்பிரார்த்தித்த தற்கிணங்க அயோத்தியில் அவதாரஞ் செய்தவர். இக்ஷுவாகு

வம்சத்தவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தவர். பிரபுவே! தங்களுடைய தரிசனம் செய்து மகிழ்ந்தோம். இனி நாங்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று வெவ்வேறிடங்களிலிருந்து தவம்புரிவோம். பிரபுவே! மகாதேவியாகிய சீதை துக்கமடைந்ததை நினைக்க எங்கள் மனம் வருந்துகின்றது எனவுங் கூறினார்கள்.

இதைக்கேட்ட பதிவிரதையாகிய ஜனகமகாராஜனுடைய புத்திரிசீதை மந்தகாசஞ்செய்து,முனிபுங்கவர்களே! இராவணனைவதஞ் செய்ததைப்பற்றி இப்போது நீங்கள் புகழ்ந்து பேசியது பரிகாசஞ் செய்வதுபோலிருக்கிறது. இராவணன் கெட்ட நடத்தையுள்ளவன். இது உண்மை; இதில் ஐயமில்லை. அவன் தன் பத்து வாயாலும் ஆக்ஞைசெய்து உலகத்திற்குபத்திரவத்தை யுண்டுபண்ணும் வீரன் தான். ஆயினும் பிராமணர்களே! இராவண வதங் கொண்டாடத் தக்கதன்று என்று கூறினள். இதைச் செவியுற்ற முனிவர்களனைவரும் பரமாச்சரியமடைந்து, ஆ! இதென்னவென்று பிரமித்தார்கள். சீதை அயோநிஜை. காகுத்ஸ்த குலத்திற்கு வந்தவள். இவள் நம்மைப் பரிகாசஞ் செய்கின்றாள். இதன் காரணம் விளங்கவில்லை என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். இப்படிப் பேசி ஆச்சரியப்படுவதைக் கண்ட சீதை அச்சமுற்று, அஞ்சலிசெய்து வணங்கி, முனிவர்களே! பிராகிருத ஸ்திரீ(மாயைக்குள் அகப்பட்ட ஸ்திரீ)யைப்போல் பொய் பேசுகிறவளல்ல. உத்தரவுண்டாயின் அதை விவரிக்கின்றேன்" என்றாள். உடனே அகத்தியர் முதலிய முனிபுங்கவர்கள் அன்புடன் கூறலாமென்று தெரிவித்தார்கள். பிறகு மகாபாக்கியசாலியாகிய சீதை தன் கணவனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, முனிவர்கள், இலட்சுமணர், அமைச்சர்கள், பிரமுகர்கள் இவர்களுடைய அனுமதியையும் பெற்றுக் கூறுகிறாள்.

முனிவர்களே! சபையோர்களே! எனக்கு விவாகமாவதற்கு முன் நான் என் தந்தையின் கிருகத்தி லிருக்கும்போது ஓர் அந்தணன் அதிதிவேடத்துடன் வந்தான். அவ்வந்தணசிரேஷ்டன் என் தந்தையைநோக்கி, "ஐயா! உமது கிருகத்தில் ஒருவருஷமும் நான்கு மாதகாலமும் வசிக்க விரும்புகிறேன். என்னை வணங்குபவன் தேவனுக்குச் சமானனாவன்" எனத்தெரிவித்தான். தேவர்க

ளிடத்தும் அந்தணர்களிடத்தும் அன்புள்ள என் தந்தை ஜனக மகாராஜன் அவ்வந்தணனது இச்சைப்படியே வசிக்க அனுமதி தந்தது மன்றிப் பலவித உபகாரங்களும் செய்து வரும்படி உத்தரவிட்டார். தருமத்திற்கு லோபம் வந்துவிடப்போகிறதே என்கிற பயத்தால் என்னை அவ்வந்தணனுக்குச் சிஷ்ருஷைசெய்து வா ஆக்ஞாபித்தார். தத்துவமறிந்த அவ் வந்தணனுடைய கட்டளையைச் சோம்பலின்றி இரவும் பகலும் செய்துவந்தேன். அந்த மகாத்மா அநேக புண்ய தீர்த்தங்கள் போய்வந்தவர். ஆகையால் அங்கங்குள்ள அதிசயங்களை எனக்குக் கதையாகக் கூறினர். நான் அவருக்கு அனுகூலமாகவிருந்து சேவித்துவந்தமைக்கும் என் தைரியத்திற்கும் அவர் மனமுவந்து எனக்குக் கூறியதைத் தெரிவிக்கிறேன் கேளுங்கள்.

ஒருநாள் அதிகாலையில் ஆன்னிகம் முடிந்தபின் "ஏ சீதே! எனவழைத்து,நான் ஒரு ஆச்சரியங்கண்டேன். அதைக்கேள். தையிர்க்கடலுக்கும் பாற்கடலுக்கும் அப்பாலுள்ள சமுத்திரம் சுத்தஜலமுள்ளது. அந்தக்கடல் புஷ்கரத்தீவைச் சுற்றிக்கொண்டு கங்கணம் போலிருக்கின்றது. அந்த புஷ்கரத்தீவில் அக்னிச் சுவாலைக்குச் சமமானதும் பத்துகோடி இதழ்களுடன் கூடியதுமான ஓர் தாமரைப்பூ இருக்கின்றது. அந்த மலர் பிரமதேவருக்கு ஆசனமாகவிருக்கின்றது. அந்தத்தீவுக்கும் வருஷத்திற்கும் எல்லையாக ஓர்பருவதமிருக்கிறது. அது மானஸோத்தரமெனப்படும். அது நீளத்திலும் அகலத்திலும் பதினாயிரம் யோஜனை யுள்ளது. அந்த மலைக்கு நான்குதிசைகளிலும் இந்திராதிதேவர்களுக்கு நகரங்களுண்டு. அவைகள் விசுவகர்மாவால் சிருஷ்டிக்கப்பட்டவைகள். அங்கு சுமாலி என்றொரு இராக்கதசிரேஷ்டனிருந்தான். அவனுக்கு கைகஸி என்றொரு பெண்ணிருந்தாள். அவள் விச்ரவஸ் என்ற பிரமரிஷிக்குப் பத்தினியானாள். அவள் இரண்டு இராவணனையின்றாள். மூத்தவனுக்கு ஆயிரமுகங்களும் இரண்டாவனுக்கு பத்துமுகங்களுமிருந்தன. இவ்விருவரும் ஜனனமான வேளையில் உலகத்தை கதறும்படி செய்ததால், இவர்களுக்குத் தேவர்கள் இராவணனென்று பேரிட்டார்கள். இளையவனாகிய தசகண்டன் சிதிகண்டன் (பரமசிவன்) அனுக்கிரகத்தினால் குபேரன் குடியிருந்த இலங்கையில் வாசஞ்செய்தான். பிரம்மதேவரது வரமகிமையால் மூவுலகங்களையும்

அவமதித்துவந்தான். ஆயிரமுகமுடையவன் உலகங்களைக் கதற வடிக்கிறவன். இவன் இயற்கையாயுள்ள தன் வல்லமையால் புஷ்கரத் தீவையடைந்தான். இவன் சூரியசந்திரர்களைக் கைக்கொண்டு பந்து போல்விளையாடுவான். மானஸோத்தரமலையில் நான்கு திசைகளிலும் உள்ள நான்கு கோட்டைகளையும் வலுவிற் கைப்பற்றிக் கொண்டு சுமாலியைச் சேர்ந்தவர்களுடன் அங்கு வாசஞ் செய்தான். அன்றியும் இராக்கத சிரேஷ்டனாகிய அந்த இராவணன் இந்திர புரியிலிருந்து கொண்டு மற்ற திக்பாலகர்களுடைய நகரங்களைத் தன் அமைச்சர்களுக்கு அளித்தான். இவ்வரக்கன் வாசம் செய்யும் இந்திர புரியானது மிகுந்த அலங்கார முடையது; கிடைத்தற் கரிது. சண்பகம், அசோகம், புன்னாகம், மந்தாரம் வாழை, பிரியகம், பாடலம், நாவல், மலைபத்தி சந்தனம், பலா, தேக்கு பனை, தேவதாரு, வகுளம், பாரிஜாதம், கற்பவிருக்ஷம், ஆறுருதுக்களிலும் புஷ்பங்களைக் கொடுக்கக்கூடிய மரங்கள், ஆறுருதுக்களிலும் கனிகளைக் கொடுக்கும் விருக்ஷங்கள் இவைகள் நிறைந்து விளங்கக் கூடியது. அங்கு சில மரங்கள் சுவர்ணமயமாகவும் சில கனிகள் அக்கினி ஜுவாலைக்குச் சமமாகவும் சில மரங்கள் கருமையான மைபோலவு மிருக்கும். அங்கு அநேக வாவிகளுண்டு. அவைகளில் என்றும் நீர் வற்றுவதில்லை. ஒவ்வொரு வாவிக்கும் சிறந்தமணிமயமான படிக்கட்டுத் துறைகளுண்டு. படிகக்கற்களை நடுவில் அமைத்த கைப்பிடிச் சுவர்களுடன் கூடியவைகள். தாமரை கருநெய்தல் முதலிய செடிகளுடன் கூடியவைகள். அங்கெங்கும் சக்ரவாக பட்சிகள் உலாவிக் கொண்டிருக்கும். தாத்தியூகமென்கிற ஓர் விதப் பறவைகள் அங்கு சதாகாலமும் சத்தமிட்டுக் கொண்டிருக்கும், ஹம்ஸம், ஸாரஸம் முதலிய பக்ஷிகளின் சத்தம் செவிக்கின்பமாகக் கேட்கும். அங்குள்ள மாடமாளிகைகள் வைடூரிய மணிக்குச் சமமாக விளங்கும். ஆறுருதுக்களிலும் இந்த சுகமுண்டு இந்த சுகமில்லை என்பதின்றி யெல்லாச் சுகமும் எல்லாக் காலங்களிலும் கிடைக்கும். அங்குள்ள சுகம் தேவர்களுக்கும் அனுபவித்தலரிது சுவர்க்கத்தை யடையும் புண்ணியவான்களுக்கும் கிட்டாது. சிறந்த சாதுக்களும் அந்நகரில் வசிக்கத் தவம் புரிகின்றனர். இத்தகைய பெருமை வாய்ந்த நகரத்தில் ஸகஸ்ரமுகராவணன் உலக முழுவதையும் விளையாட்டாகச் சுவாதீனப் படுத்திக் கொண்டு

வரித்துவந்தான். அவன், இந்திரன், தேவர்கள், கின்னரர்கள், கந்தர்வர்கள், பயத்தை யுண்டுபண்ணும் அசுரர்கள் சர்ப்பங்கள் வித்தியாதரர்கள் இவர்களெல்லாரையுங் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கவிட்டுப் பல விளையாட்டுகளை விளையாடுவான். இவன் மகா மேருபருவதத்தைக் கடுகாக என்னுவான் உலகங்களைத் திருணத் திற்கொப்பாகவே கருதுவான். தீவுகளை ஓட்டாஞ் சில்லாகவே கருதுவான். வீரனுகையால் எதையும் அவன் மதிப்பது கிடையாது.

இவ்விதம் உலகமுழுவதையும் தொந்தரவுசெய்யுங் காலத்தில் பிரமதேவர், புலஸ்தியர், விச்ரவஸ் முதலியவர்கள் பலபடியாக நல்லது கூறி அவனைத் தடுத்தார்கள். ஜனகராஜனுடைய குமாரியாகிய வைதேகியே! ஆயிரம் முகங்களுடைய இந்த இராவணன் புஷ்கரத்திலிருக்கின்றான். ஓ ஜானகி! இலங்கையிலிருக்கிறவன் ஆயிர முகராவணனுக்கு இளையவன். அவனுக்கு முகம் பத்து என்று கூறினர். அந்தணர்களே! இவ்விதம் இந்த விசித்திரமான செய்தியைக் கூறி மற்றும் சில கதைகளையும் சொல்லிக் கொண்டு நான்கு மாதகாலம் வாசஞ் செய்தார். பின்பு எனக்கும் என் தந்தைக்கும் ஆசீர்வாதஞ் செய்து தீர்த்தயாத்திரை சென்றனர்.

சீதாதேவியின் சம்பாஷணையைக் கூறும்.

17-வது சருக்கம்

முற்றிற்று.

18-வது சருக்கம்.

பிராமணோத்தமர்களே! அந்த அந்தண சிரேஷ்டர் ஆயிர முக இராவணனைப்பற்றிக் கூறினர். அதைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். இப்போதும் என் மனதில் அந்த விஷயம் தோன்றிக்கொண்டே யிருக்கிறது. இராவணன், இராவணனை யனுசரிப்பவர்கள், அவன் மைந்தர்கள், சகோதரர்கள், உறவினர்கள். இவர்களை என் பிராணநாதர் வதஞ் செய்தார். என் பொருட்டு இலங்கையும் சாம்பலாயிற்று. சமுத்திரத்திலும் அணை கட்டப்பட்டது. சுக்ரீவன் அனுமான் இவர்களைக் கொண்டு லோகத்திற்கு நன்மையைத் தரத்தக்க சிரேஷ்டமான இந்த நற்காரியத்தைச் செய்தார். ஆயினும் இந்த தசகண்ட இராவணனை வதஞ் செய்தது எனக்கு வியப்பாகத் தோன்றவில்லை. ஆயிரமுகமுள்ள துராத்மாவாகிய அந்த இராவணனை வதஞ்செய்வதன்றோ கீர்த்தியைத் தருவதாகும். உலகத்திற்கும் சுகமுண்டாகும். அக்கினிக்கு நிகரானவர்களே! இதை மனதிலெண்ணி நான் நகைத்ததைபற்றி மன்னிக்க வேண்டுகிறேன் என்றாள். முனிவர்கள், "சரி, அப்படித்தான் செய்யவேண்டும்" எனக் கூறி உலகத்திற்கு இதத்தைக் கோருகிற ஜானகியைப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

தமது பராக்ரமத்தை விருத்தி செய்த சீதாதேவியின் வசனத்தைக் கேட்டதும் இராமபிரான் சிங்கநாதஞ் செய்து, முனிபுங்கவர்களே! ஆயிர முக இராவணனை வெல்வதன் பொருட்டு இப்போதே செல்லவேண்டும். ஏ இலட்சுமணா! பரதா! சத்ருக்னா! நண்பர்களாகிய சுக்ரீவ ஜாம்பவான்களே! நாமெல்லோரும் சேர்ந்து நமது அமைச்சகர்கள் சேனைகள் இவர்களுடன் இப்பொழுதே புறப்பட வேண்டுமென்றனர். அவரது ஆக்ஞைப்படி செய்ய எல்லாரும் சம்மதித்தனர். உடனே புஷ்பகத்தை மனதில் சிந்தித்தார். விமானங்களுள் சிறந்த புஷ்பகமானது உடனே அங்கு வந்து சேர்ந்தது. இராமச்சந்திரரும் மற்றுமுள்ள வீரர்களும் விமானமேறினர்கள். நிகரற்ற தேஜஸுடையபரதன், இலட்சுமணன், சத்ருக்னன், வெற்றிப்

பிரதாபமுடைய சுக்ரீவன், முதலான மற்ற சூரர்களும் புறப்பட்டார்கள். இராக்கதக் கூட்டங்களுடன் கூடிய மகாபலசாலியாகிய விபீஷணன் தன்தாய் தந்தையரும் தெரியாத இந்த ஆயிரமுக இராவணனைப்பற்றித் தெரிவித்த சீதையிடம் மகிழ்வுற்றுத் தன் பரிவாரங்களுடன்புறப்பட்டான். சுமந்திரன் முதலிய அமைச்சர்களும் வந்திருந்த இருஷிகளும் புறப்பட்டார்கள். அதிபலபராக்ரமசாலியாகிய வீரர்களில் அநேகர் ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஆரவாரித்தார்கள். இராமச்சந்திரப் பிரபுவினுடைய வில்லோசையினாலும் வீரர்களுடைய சிங்கநாதத்தாலும் பூமிநடுங்கிற்று. மலைகளாடின. விண்ணிலின்றும் கிரகங்கள் விழுந்தன. நதிகள் வறண்டன. கடல்கள் கரைபுரண்டு ததும்பின. சுக்ரீவன், அனுமான், நீலன், ஜாம்பவான் நளன் இவர்கள் ஆகாயத்தை விழுங்குகிறவர்கள் போல் இராமனுக்ஞையை யேற்றுப் புறப்பட்டார்கள். மகாபலசாலியாகிய இராமபிரான் வில்லைக் கையிலேந்திக்கொண்டு சீதாபிராட்டியாருடன் தமது விருப்பப்படி செல்லும் புஷ்பக விமானத்தேறினர். பிறகு மகா பலசாலிகளாகிய எல்லோரும் புஷ்பக விமான மீதேறிக்கொண்டு சீதாபிராட்டியுடனும் சகோதரர்களுடனுமிருக்கும் இரகுகுலதிலகனைப் புகழ்ந்தார்கள். அந்த விமானம் இராமபிரானதாக்ஞைப்படி ஆகாயத்தை யடைந்தது. பிறகு மனம், வாயு இவைகளினும் வேகமாகச் சென்று ஓர் கணநேரத்தில் புஷ்கரத்தீவிலுள்ள மானஸோத்தரமலை யடைந்தது. அங்கு சென்றதும் மகாபலசாலிகளாகிய வீரர்கள் அந்தத் தீவைக் கண்டு இதென்ன விசித்திரமெனக் கூறி வியந்து மகிழ்ந்தார்கள். இராகவர், சகோதரர்கள், முதலிய யெல்லோரும் சிங்கநாதஞ் செய்தார்கள். இச்சமயம் இரகுவீரன் வில்லையும் இழுத்தார். அப்பொழுதுண்டான தொனி பூமி, ஆகாயம், பாதாளம் எங்கும் பரவிற்று. ஆயிரமுக இராவணனும் இதென்னவெனப் பிரமித்து விரைவாக எழுந்திருந்தான், பிறகு அங்குள்ள அரக்கர்கள் யாவரும் கோபங்கொண்டு புறப்பட்டார்கள். இராக்ஷசேந்திரனும் "பாருங்கள் ஆச்சரியம்! இது யாருடைய செய்கை. எல்லாரும் நன்றாக ஆலோசித்துப் பாருங்கள் என்று இராக்கதர்களை நோக்கிக் கூறி உதட்டை மடித்து நகரத்தினின்று விரைவாகப் புறப்பட்டான். இவன் பனிரண்டு சூரியர்களுக்குச் சமமானவன். ஆயிர முகங்களும் இரண்டா

யிரம் கைகளுமுடையவன். இரண்டாயிரம் கண்களுடையவன். மகா மேகம்போல் சப்திக்கக் கூடியவன். கோபத்தில் வடவாக்கினிக்குச் சமானன். நூறு யோசனை யகலமுடைய ஒளிபொருந்திய இரதத்திலிருப்பன். இவன், பரிகம், பிராஸம், தோமரம், புசுண்டி, பரசு, கண்டைகன், லோகத்தாலமைந்த முத்கரம், சக்ரம் பாசம், மூங்கில் மயமான பாணங்கள், கத்திபோன்ற முனையையுடைய பாணங்கள், அர்த்த சந்திரனை நிகர்த்த பாணங்களையும் ஆயிரக்கணக்கான அநேக ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு கோதண்டபாணியாகிய இராமபிரானிடம் வந்தான். வந்ததும் கண்களில் பொரிபறக்கக் கோபங் கொண்டு "இவன் யார்? என்னகரத்தில் சிங்கநாதம் செய்ததால் இவன் எனக்கும் பகைவனாக விருக்க வேண்டும். எனக்குப் பகைவனும் ஒருவனிருக்கின்றான் என்ற அபகீர்த்தி வந்து விட்டது. இந்திரன் முதலிய திக்பாலகர்கள் தங்கள் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு என்னிடம் வேலைக்காரர்களாக அமர்ந்தார்கள். பாதாளத்தில் சொர்க்கத்தையும் சொர்க்கத்தில் பாதாளத்தையும் உண்டாக்கவல்லவன். மேரு முதலிய மலைகளையும் அணுவாக நினைப்பவன். மானிடர்களுக்குத் தேவலோகத்தையும் தேவர்களுக்குப் பூலோகத்தையும் கொடுக்கிறேன். பூமியைத் தூக்கி நகங்களால் அநந்தனைச் சேதிக்கின்றேன். பிரமதேவன் என்னை கேட்டுக்கொண்டாரவிடில், பூமியில் இராக்கதர்களைத் தவிர மற்றவர்களைப் பரிபாலிக்கமாட்டேன். சூரியனும் சோமனுமாயிருந்து நாட்களை நடத்துவேன். மேகனும் இந்திரனுமாயிருந்து மழை பொழியச் செய்வேன். யமன், அக்னி, வருணன், குபேரன் இவர்களாயிருந்து அந்தந்த அதிகாரத்தைச் செய்வேன்" என்று கூறி கர்ச்சித்தான். சேனாபதிகளான இராக்கதர்கள் தங்கள் அரசனுடன் இரதங்களிலேறிக்கொண்டும் பதாதிகளாகவும் வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் ஒருலகம் ஒன்றுசேர்ந் தெதிர்ப்பினும் எதிர்க்கமுடியாதென்று கருதுகிறேன். அவர்களிற் சிலர் பெயரைச் சொல்லுகிறேன் கேள். கோடிசன், மனஸன் பூர்ணன், சலன், பாலன், ஹலீமுகன், கௌணபன், சக்ரன், காலவேகன், பிரகாலகன், ஹிரண்யபாகு, சரணன் கஷகன், காலதந்தகன், புச்சாண்டகன், மண்டலகன் மகா மண்டலகன் பிண்டஸேக்தா, ரபேணநன், உச்சிகன், கபன், பத்ரன், விசுவஜேதா

விரோகணன் சிலசலகரன் மூகன் சுகுமாரன் பிரசேஷணன் முத்கரன் சசிரோமா சுரோமா மஹாஹனு, பாராவதன், பாரியாத்திரன், பாண்டுரன், ஹரிணன், கிருசன், விஹங்கன், சரபன், தக்ஷன், பிரமோதன் ஸஹதாயனன் கிருகரன், குண்டாரன், வேணி, வேணிஸ்கந்தன், குமாரகன், பாகுகன், சங்கவேகன், தூர்த்தகன், பாதன், பாதகன் சங்குகர்ணன், பிடாதன், குடிரன் முகமேசகன், பூர்ணாங்கதன், பூர்ணமுகன், பிரபாஷன், சகுலி, ஹரி, அமாஹிடன், காமடிகன், சுஷேணன், மானஸன், அவ்கியயன், பைரவன், முண்டதேவாங்கன், பிசங்கன். உடபாலகன், ரிஷபன், வேகவான், பிண்டாரகன், மஹாஹனு, இரக்தாங்கன், சர்வசாரங்கன், சமிருத்தன், பாடகன், வாசகன், வாராஹகன், இராவணகன், பராசரன், தருணிகன், மணிஸ்கந்தன், ஆருணி இவர்களாம். இவர்கள் தங்கள் சேனாபதியின் கீர்த்தியை விருத்தி செய்பவர்கள். முக்கியமானவர்களைக்கூறினேன். இன்னும் அநேகர் உளர். அவர்களைக் கூறவில்லை.

யுத்தத்திற்குவந்தவர்களை எண்ணிக்கணக்கிடுதல் அசாத்தியம். சிலர் நீலவர்ணமுள்ளவர்கள். சிலர் சிவப்புவர்ணமுள்ளவர்கள். சிலர் பயங்கர உருவமுடையவர்கள். சிலர் பெருத்த சரீரமுடையவர்கள். சிலர் மிகுதியான பலமுடையவர்கள். சிலர் ஏழுதலை, இரண்டுதலை, ஐந்துதலை உடையவர்கள். சிலர் பிரளயகாலாக்னிபோன்ற கோரரூபிகள். சிலர் அக்னிக்குச் சமமான சரீரமுள்ளவர்கள். சிலர் மஹாவேகமுள்ளவர்கள். சிலர் பருவதசிகரம்போல் உயர்ந்தவர்கள். சிலர் ஓர் யோசனைச் சுற்றளவும் இரண்டு யோஜனை உயரமுமுடையவர். சிலர் காமரூபமுள்ளவர்கள். சிலர் தன்னிஷ்டப்படி பலத்தை உபயோகிப்பவர்கள். சிலர் ஜ்வலிக்கும் அக்னிக்குச் சமமான காந்தியுடையவர்கள். ஆக இவ்விதம்வந்து குழுமினர். மற்றுமுள்ள இராவணசேனைகளின் நாமதேயங்களைக் கூறுகிறேன்.

சங்குகர்ணன், நிகுப்பன், பத்மன், குமுதன், அனந்தன் த்வாதசபுஜன், கிருஷ்ணன், உபகிருஷ்ணன், கிராணசிரவச்னகபிஸ்கந்தன், காஞ்சனாக்ஷன், ஜலந்தமன், அக்ஷஸந்தர்த்தனன், குணதிதகன், தமஸ், அப்ரகிருத், ஏகாக்ஷன், த்வாதசாக்ஷன், ஏகஜான், ஸஹஸ்ரபாகு, விகடன், விபாக்ரன், க்ஷிதிகம்பனன், புண்ணியநமா, அனுநாமா. சலக்திரன், பிரியதரிசனன், பரிசிரிதன், கோகணதன், பிரியாமல்

விபானுலேபனன், அமேஜாதான், கஜசிரச், ஸ்கந்தாக்ஷன், சதலோசனன், ஜ்வாலாஜிஹ்வன், கராளன், ஸிதகேசன், ஜடி, ஹரி, சதுர்தம்ஷ்ட்ரன். ஒஷ்டஜிஹ்வன். மேகநாதன், பிருதுசிரவச், விகிருதாக்ஷன், தனுர்வக்திரன், ஜாடரன், மாருதாசனன், உதாராக்ஷன், இரதாக்ஷன், வஜ்ரநாபன், வசுப்பிரபன், சமுத்திரவேகன், சைலகம்பீ, விருஷமேஷப்பிரவாஹன், நந்தன், உபநந்தகன், தூம்ரசுவேதன், கலிங்கன், சித்தார்த்தன், வரதன், பிரியகன், ஏகாநந்தன், பகுவீரியன். பிரதாபவான், ஆனந்தன், பிரமோதன், ஸ்வஸ்திகன, துருவகன், க்ஷேமபாகு. சுபாகு, ஸித்தபாத்திரன், ஆவடவிரதன், கோவிரஜன், கனகாபீடன், மஹாபாரிஷதேசுவரன், காயனன், தமனன், பாணன், கட்கன், வீரியவான், வைதாளி, கதிதாளி, கதன், கவாதிகன், ஹம்ஸஜன், பங்கதிக்தாங்கன், கவாதிகன், சமித்திரேங்மாதனன். ரணோத்கடன், பிரஹாஸன், வேதசித்தன், நந்தகன் இவர்கள் இராவணன் சைன்னியத்தைப் பரிபாலிப்பவர்கள். யுத்தம்செய்வதற்காக பல ஆயுதங்களைக் கைக்கொண்டவர்கள். இவர்கள் சிங்கநாதம்செய்துகொண்டு ஹம்ஸங்களிலும் ஆடுகளிலும் விருஷபங்களிலுமேறிக்கொண்டு இராமப்பிரபுவிடம் யுத்தம்செய்ய வந்தார்கள்.

இராவணன் சேனை யுத்தத்திற்குப்
பிரயாணமானதைக் கூறும்
18-வது சருக்கம்
முற்றிற்று.

19-வது சருக்கம்.

ஆயிர முகமுடைய இந்த இராவணனுக்கு மக்கள்கள் பலர். அவர்களனைவரும் பலவிதமான ஆயுதங்களை யெடுத்துக் கொண்டு அநேக இராக்கத வீரர்களுடன் இராகவரிடம் அமர்புரிய வேகமாகச் சென்றார்கள். ஏ பரத்வாஜ! அவர்களின் பெயரைக் கேள்.

காலகண்டன், பிரபாஷன், குப்பாண்டகன், காலகக்ஷன், சிதன், பூதலோன்மதனன், யஞ்ஞபாகு, பிரபாகு, தேவயாஜி ஸோமபன், மஜ்ஜாலன், மஹாதேஜஸ், க்வதன், க்வாதன், வசுவிருதன், துஹரன், துஹாரன், சித்ரகேவன், வீரியவான், மதுரன், சுப்பிரஸாதன், கிரடன், மஹாபலன், வசனன், மதுவர்ணன், கலசோதரன், கர்மதன், மன்மதகரன், சூசீவக்திரன், சுவேதவக்த்ரன், சுவக்திரன், சாருவக்திரன், பாண்டுரன், தண்டபாகு, சுபாகு, இரஜஸ், கோகிலகன், அசலன், கோகிலாக்ஷன், பாலேசன், பாலபக்ஷகன், சஞ்சானகன், கோகனதன் கிருத்திரபத்திரன் ஜம்புகன் லோஹாஜவக்திரன், ஜவனன் கும்பவக்திரன், கும்பகன், முண்டக்ரீவன், கிருஷ்ணவிஜஸ், ஹம்ஸவக்கிரன், குஞ்சரன், முதலாய மகாபலம் பொருந்திய இராவண புத்திரர்கள் தோள்தட்டிச் சிங்க நாதம் செய்து பத்துத் திசைகளும் செவிடுபடும்படி புறப்பட்டார்கள். இவர்களுடைய கணக்கற்றசேனைகளும் ஆயிரக்கணக்காகவும் அற்புதக் கணக்காகவும் புறப்பட்டன, இவர்கள் அனேகவித ஆயுதங்களைக் கைக்கொண்டுள்ளார். ஆமை, கோழி, அரவம், நரி, முயல், கோட்டான், கழுதை, ஒட்டகம், பன்றி, மானிடன், ஆடு, பூனை, ஓணான். காக்கை, எலி, மயில், மீன், எருமை, கரடி, புலி, சிறுத்தை, சிங்கம், யானை, முதலை, கோவேறுகழுதை, இவைகளின் முகமுடையார் பலர். நீண்டதும்

பயங்கரமுமான முகமுடையார் சிலர். பெரும்வயிறு பெருங்கால்களையுடையார் சிலர். பெருஞ்சரீரமுடையார் சிலர். பூங்கொத்தையொத்தகண்களையுடையார் சிலர். துர்முகர்கள் சிலர். மற்றுஞ்சிலர். காளைமுகமுடையவர். குயிலையொத்தமுககமலமுடையார் அனேகர். அழுக்கற்ற ஆடை புனைந்தவர் சிலர்• துஷ்டமிருகங்களின் முகங்களையுடையார் பலர். பயங்கரமான முகமுடையார் சிலர். கோரப்பல்லில். விஷத்தையுடையார் சிலர். மரவுரிபுனைந்தார் பலர். வயிறுபெருத்தார் பலர். உடல்பெருத்தவர், உடல்சிறுத்தவர், நீண்டமுகமுடையவர், செவி அகன்றவர்கள், இப்படியாகச்சிலர். பலவித துட்டப்பிராணிகளை ஆபரணமாக அணிந்தாரனேகர். மாந்தோல், புனைந்தோர் பலர்• யானைத்தோலை ஆடையாகக்கொண்டோர்பலர். தோளில் முகமுடையோர் சிலர். வயிற்றில் முகமுள்ளார் பலர். பின்பக்க முகமுடையவரும், கன்னம், கணைக்கால் இவைகளில் முகமுடையவரும் சிலர். தேகத்தில் பலமுகங்கள் பலவிடங்களிலுமுள்ளார் பலர். புழுக்கள் பறவைகள் இவைகள்போன்ற முகமுடையார்சிலர். துட்டப்பிராணிகளின் முகமுடையவர் சிலர். அநேககைகளையும் அநேககழுத்துகளையும் உடையவர் பலர். வெவ்வேறு விதமான மார்பையும் கைகளையும் உடையவர் பலர். பலவகையான வேடம்பூண்டாரும் பலர். சர்மத்தை ஆடையாகக் கொண்டார் அநேகர்• முண்டாசுதரித்தார் சிலர். வலம்புரிச்சங்கங்களை யொத்த கழுத்தை யுடையார் சிலர். பெருமனுன தலைமயிருடையார் சிலர். மயில் தோகையை அணிந்தவர் பலர். ஜடைதரித்தவரனேகர். விசித்திரமான மாலை புனைந்தார் சிலர். முகத்தில் உரோமமுடையார் சிலர். அபர்புரிவதில் ஆர்வமுடையாரனேகர்• வயிறு சிறுத்தவரும் தொங்கின வயிறுடையவரும் சிறிய கைகளையுடைய வருமாகச் சிலர். யானையின் கழுத்தையொத்த கழுத்துடையார் சிலர். யானையின் துதிக்கை போன்ற மூக்குடையா ரனேகர். நல்ல அலங்கார முடையவர்கள் சிலர். கோரோசனையை யொத்த நிறமுடைய கண்களுடையாரனேகர்• முளைபோல் அசையாத கழுத்துடையார் அநேகர். பெருத்த கோரப்பற்களும் பெருத்த உதடும், கோரோசனையை யொத்த தலைமயிருடையவரும் சிலர். பல வேறுவிதமான கழுத்து, கை, கால், முகமுடையார் சிலர். ஆகிய இவ்வளவனந்தம் சேனை வெள்ளங்கள் புறப்பட்டன.

இன்னும் பெரிய பெரிய பரிகாயுகத்தோடு நீண்ட நகமும் நீண்ட பாதங்களுமுடையார் அநேகர் புறப்பட்டார்கள். ஆகவே புறப்பட்டவர்களுக்கு அளவு சங்கையில்லை. அவர்களனைவரும் மணிகளைக் கழுத்தில் கட்டிக் கொண்டு யுத்தபூமியில் நர்த்தனம் செய்தார்கள்' விகாரமாகவும் கொடூரமாகவும் பேசும் இராக்கதர்கள் அடி! பிடி! என்று ஆரவாரித்தார்கள். இப்படியாக அநேக கோடிக்கணக்கான இராக்கதர்கள் இராகவரிடம் வந்து சேர்ந்தனர்.

ஆயிரமுக ராவணனும் அவன் புத்திரர்களும்
யுத்தத்திற்குப் பிரயாணமானதைக் கூறும்.

19-வது சருக்கம்
முற்றிற்று.

20-வது சருக்கம்.

வைச்ரவணு(குபேரன்)னுஜனுகிய இராவணன் கைகளிலுள்ள விற்களை உதறி, "யாரிவன்? எதன் பொருட்டு இங்கு வந்தான்" என்று கூறி யாலோசித்தான். அச்சமயம் ஆகாயத்திலிருந்து, "மகா பராக்ரமசாலியாகிய இராவணு! வந்திருக்கும் இவர் இராமச்சந்திரபிரபு. இரகுகுல சிரேஷ்டர். அயோத்தியாதிபதி. தரும சொரூபி. தமது மனைவியை யபகரித்த உன் தம்பி இராவணனையும் இலங்கையையும் அழித்த வீரன். விபிஷணனுக்கு அரசுரிமை தந்தவர். உன்னையும் வதஞ்செய்வதன் பொருட்டுத் தமது சகோதரர்கள், வானர வீரர்கள், கரடிகள், மானுடர்கள் இவர்களுடன் இங்கு வந்திருக்கிறார்." என்ற அசரீரி வாக்குண்டாயிற்று. முனிசிரேஷ்டனே! இங்ஙனங் கூறியதைக் கேட்ட இராவணன் ஏற்கனவே தான் கொண்டிருந்த கோபத்தையும் விட இருமடங் கதிகமான கோபங் கொண்டு எனக்குப் பகைவனென வந்த மானுடனுகிய இவனைத் துன்புறுத்துங்கள், கொல்லுங்கள், உலகத்தை வென்ற என் முன் இந்தப் பகைவன் யுத்தஞ் செய்ய வந்திருக்கிறான் என உரைத்துப் பாணங்களையும், சக்ரங்களையும் தோமரங்களையும் பர்வதங்களையும் தன்னுடைய புஷ்பகத்திலிருந்த வண்ணத்தில் பிரயோகித்தான். கருவங்கொண்ட இராக்ஷஸ சேனையிலுள்ள வீரர்கள், வானரங்கள், கரடிகள், மானிடர்கள் இவர்களையெல்லாம் ஆகாரமாகக் கொண்டார்கள். சிலரைக் காலிட்டு மிதித்தார்கள். இராமபிரானைச் சார்ந்த வானர வீரர்களோ வெனில், இராவணனைச் சார்ந்த வீரர்களைப் பாணங்களாலும் பலகைகளாலும் அடித்தார்கள். சேனைகளுக்குள் சிறந்த வீரர்கள் ஒருவரையொருவர் வதஞ் செய்து விடவேண்டுமென்கிற எண்ணங் கொண்டு வீராவேசத்துடன் யுத்தஞ் செய்தார்கள். வானரர்களும் நரர்களும் விழுந்து வாடினார்கள். மோகமடைந்தார்கள். பிறகு மகா பாகுவாகிய இராமர், பரதன், இலக்குமணர், சத்ருக்னர், ஆஞ்சநேய வீரன், சுக்ரீவன், ஜாம்பவான், மற்றுமுள்ள வீரர்கள், நளன், நீலன், விபிஷணன். இவர்களும் மகா பயங்கரமான போர்க்களத்துற்று அயர்

புரிந்தார்கள். அப்போது இராக்கதர்கள் தோள் தட்டும் ஓசையானது பூமியை நடுங்கும்படி செய்து விட்டது. இவர்கள் செய்த சிங்காதம் ஆகாயத்தை யளாவியது. அதிபல பராக்ரமசாலியாகிய இராக்கத சிரேஷ்டர்கள், கற்களையும் ஆயுதங்களையும் எடுத்தெறிந்து வானரவீரர்களுடன் யுத்தம் புரிந்தார்கள். இராக்கத சேனைகள்யாவும் யானை குதிரை தேர் இவைகளிற் கட்டியுள்ள மணிகள் ஒலியிட நரர்கள் அரக்கர்கள் (விபீஷணன் முதலியவர்கள்) வானரர்கள் இவர்களுடன் யுத்தம் செய்தார்கள். இராக்கதசேனையை நோக்கியவானர வீரர்கள் மிகக்கோபங்கொண்டு மரங்களாலும்கற்களாலும் ஆயுதங்களாலும் அடித்தார்கள். ஆயுதமாரி பொழிந்தார்கள். பயங்கரமான பராக்ரமமுள்ள வானரர்கள் வச்சிரத்திற் கொப்பான மரங்களாலும் பர்வத சிகரங்களாலும் பர்வத சிகரம் போன்ற இராச்கதர்களைப் புடைத்தார்கள். சில வானரர்கள் யானை குதிரை இரதம் இவைகளிலிருக்கும் அரக்கர்களைவிரைவாகச்சென்றுதாக்கினார்கள். அப்பொழுது மலைச்சிகரம் போன்ற அரக்கர்கள் விழிபிதுங்கிக்கீழேவிழுந்தார்கள். கூச்சலிட்டார்கள். வானர வீரர்கள் பிரயோகித்த சூலங்களாலும் வச்சிராயுதங்களாலும் பூமி இரத்தப் பிரவாகமாயிற்று. அடிபட்ட அரக்கர்கள் விகர்ணங்களாலும் பருவத சிகரங்களாலும் வானர வீரர்களை யடித்தார்கள். சிலர் தேரைக்கொண்டுதேரையும் இராக்கதனைக் கொண்டு இராக்கதனையும் 'குதிரையைக்கொண்டு குதிரையையும் அடித்துப் பூமியில் தள்ளித் துகைத்தார்கள். இருதிறத்தாரும் மாறிமாறிச் சிங்காதஞ் செய்தார்கள். வானரர்கள் அரக்கர்களின் கவசத்தையும் கேடயங்களையும் சேதித்தார்கள். மலையிலிருந்து அருவி பெருகுவது போல் அரக்கர்களின் சரீரத்திலிருந்து இரத்தம்ஓடிற்று. இவ்விதம் இராக்ஷசேந்திரனாகிய ஆயிரமுகஇராவணனுடைய இராஜதானியிற் கோலாகலமாகச் சண்டைநடந்தது. இந்த யுத்தத்தில் வானரவீரர்கள் சந்தோஷமடைந்தார்கள். இராக்கதர்கள் துன்பமடைந்தார்கள். மகாபலவான்களும் பங்கமடைந்தார்கள். மகரிஷிகள் மகிழ்ந்தார்கள். பூதகணங்கள் ஆரவாரித்தன.

யுத்தவரலாற்றைக் கூறும்
20-வது சருக்கம்
முற்றிற்று.

21-வது சருக்கம்.

பின்னர் அந்த இராவணன் வாயுவேகத்திற்குச் சமமான வேகமுள்ள தேரின் மீதேறிக்கொண்டு தீக்ஷ்ணமான சக்தியாயுதத்துடன் மகிழ்ந்திருமாந்திருக்கும் இராமசேனையில் சமுத்திரப் பிரவாகத்தில் மீன் பிரவேசிப்பதுபோல் பிரவேசித்தான். மகாபல பராக்ரமசாலியாகிய இராவணராஜன், பலங் குறைந்தவர்களான வானரங்களைக்கண்டு, அவர்களை ஒரேகணத்தில் நாசஞ் செய்துவிட வேண்டுமெனக் கருதினன். பிறகு அந்த இராவணன் இவர்களோ அற்பர்கள், பிராணனை யிழக்கத் தங்கள் பொருள்களை விட்டு வந்திருக்கிறார்கள். பெரிய இந்த தீவாந்தரத்திலிருக்கும் யுத்தவீரனாகிய நான் இந்த மானிடர்கள் அரக்கர்கள் வானரங்கள் இவர்களைக் கொன்று என்ன பலனை யடையப் போகிறேன். இவர்கள் எங்கிருந்து வந்திருக்கிறார்களோ அந்த தேசத்திற்கே அனுப்பி விடுகிறேன். பண்டிதர்கள் அற்பர்களிடம் பாணப்பிரயோகஞ் செய்வதைப் புகழ்ந்து பேசார்கள்" என்று ஆலோசித்து வாயுவாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தான். அந்த அஸ்திரம் விடுபட்டதும் மானிடர்கள் கரடிகள், வானரவீரர்கள் யாவரையும் இராஜபடர்கள், திருடர்களைக் கழுத்திற் கைகொடுத்துத் தள்ளுவதுபோல் தள்ளிக் கொண்டுபோய் அவரவர் தேயத்திற் சேர்த்து விட்டது. மானிடர் முதலிய யாவரும் தத்தம் கிருகமடைந்ததும் வாயுவாஸ்திரத்தின் மகிமையை வியந்து, நாமெங்கிருந்தோம்! எங்குவந்தோம். சொப்பனம் போலிருக்கின்றதே. பிரளயகாலவாயுவைப் போன்ற வேகமுடைய வாயு வாஸ்திரத்தால் மோசம் போனோம் என்றார்கள்.

பரதன், இலக்குமணன், சத்ருக்னன், அனுமான், சுக்ரீவன், நளன், நீலன், வாயுவேகமுள்ள வானரர்களிலநேகர், அதிபராக்ரமசாலியான விபீஷணன் முதலிய இராக்கதர்கள், வானரர்கள், நரர்கள், கரடிகள், எல்லோரும் தத்தமிருப்பிடத்தை யடைந்து,' வியப்புற்றதுமன்றி இராமரைக் கருதித் துக்கித்தார்கள். இராமபிரான் எங்கிருக்கிறாரெனில் புஷ்கரத்தீவின்கண் புஷ்பக விமானத்திலிருக்

கிறார். அந்த வாயுவாஸ்திரத்திற்கு இராமரை எதுவும் செய்ய முடியவில்லை. மகரிஷிகளும் இதுவென்னவென்று ஆச்சரியமடைந்தார்கள். மகாபாக்கியசாலியாகிய சீதாபிராட்டியும் மந்தஹாஸத்துடன் அங்கு தங்கியிருந்தாள். வ பரத்வாஜ! அங்குள்ள மகரிஷிகள், இராமபிரானுடைய சைன்னியம் கந்தர்வநகரம் (மேகத்தில் நகரம் போலும் வனம் போலும் அமைந்திருத்தல்) போல் ஆய்விட்டதை நோக்கி மங்களமுண்டாக வேண்டுமென்று நினைத்துத் தீங்கைப் போக்கும் சாந்திஜபஞ் செய்தனர்.

அந்தரிக்ஷத்திலிருக்கும் அக்கினி முதலிய தேவர்கள் யாவரும் "இராவணன் என் செய்தானெனவியந்து ஆ! ஆ!! வெனக் கூறினார்கள். ஒருசமயம் விஷ்ணுவானவர் கருடாரூடராகி இராவணனைக் கொல்ல வந்தார். இவன் தன்னுடைய புயத்தால் ஸனாதனராகிய மகாவிஷ்ணுவைப் பெரிய அட்டகாசஞ் செய்துகொண்டு கடலிற்றள்ளினான். அதுமுதல் தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள், நரர்கள் யாவரும் நரிகள் புலியிடத்துப் பயப்படுவது போல் பயமடைந்து அவன் வாசனையண்டாத இடத்திலேயே யிருந்து வந்தார்கள். ஸநாதனராகிய அந்த விஷ்ணுதான் இவர். நமக்குநல்ல காலமிருந்தால்,இந்த இராமர் இராவணனை ஜெயிக்கவேண்டும்." என இவ்விதம் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு தேவர்கள் மறைந்திருந்தார்கள்.

ஆயிரமுக இராவணன், இராமரை அற்பமாக வெண்ணிக் கர்ச்சித்தான். அவன் கர்ச்சித்ததைக் கண்ட இராமர் ஆச்சரியமடைந்தார். அவனைக் கொல்லவேண்டுமெனச் சினங்கொண்டார். அதைக் கண்ட குரூரர்களான அரக்கர்கள் கிலி! கிலி!! என்று கூக்குரலிட்டார்கள். தாமரை யிதழ்போன்ற நேத்திரமுடைய சீதாகாந்தன் அவர்களைச் சங்கரித்தற்கு ஆலோசனை செய்தார். அரக்கர்கள் அவரை யொன்றுஞ் செய்யமுடியாமல் விழித்தார்கள். இராமபிரான் கோபாவேசத்தால், பூமி, சமுத்திரம் கிரகம்பாவும் நடுங்கின.

இராவணன் இராமபிரானது சேனையை
எற்றித் தள்ளியதைக் கூறும்
21-வது சருக்கம்
முற்றிற்று.

22-வது சருக்கம்.

அடிக்கடி கர்ச்சிக்கும் இராக்கதர்களைக் கண்ட இராகவர் மிகக் கோபங்கொண்டு பிரளயகாலாக்னி போன்ற சிறந்த வில்லை இழுத்தார். அக்கணமே இராக்கதர்களின் மர்ம ஸ்தானங்களில் விரைவாகப் பாணங்களைப் பிரயோகித்தார். பாணங்களானது இராக்கதசிரேஷ்டர்களைக் கண்டங் கண்டமாகக் கண்டித்தன. இராமபிரான் வில்லில் பாணத்தைத் தொடுப்பதற்கும் அதனைப் பிரயோகிப்பதற்கும் இடையே ஏற்படும் நேரம் எவராலும் கண்டுகொள்ள முடியாததாயிருந்தது. சத்ருக்கள் மிகுந்த துன்பமடைந்தார்கள். உருத்திரர் உலகத்தைச் சங்கரிப்பதுபோல் இராமபிரான் அரக்கர்களை அதமாக்கினர்.

வேறெவராலுஞ் செய்தற்கரிய இராமபிரானது செய்கையை இராவணன் கண்டு வியப்புற்றுச் சேனையின் முன்னின்று இராமபிரானுடன் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தான், "ஏ சேனாபதிகளே! நீங்கள் பார்த்துக் கொண்டிருங்கள். திடீரென வந்து நம்மையெதிர்த்த இந்தப் பகைவனை நானொருவனே கொல்லுகின்றேன். இதே தருணத்தில் பூதலத்தில் மானிடர்களில்லாமலும் சொர்க்கத்தில் தேவர்களில்லாமலும் செய்து விடுகின்றேன். சமுத்திரங்களை வற்ற வடித்து விடுகின்றேன். பர்வதங்களைப் பொடிப் பொடியாகச் செய்கின்றேன். கிரகங்களை உதிரும்படி செய்கின்றேன்" எனப் பெருங் கூச்சலிட்டு இராமனைப் போர் செய்ய அழைத்தான். ஏ இராம! உன்னைக் கத்தியால் இப்பொழுதே சேதித்து என் படர்களுக்குத் திருப்தியுண்டாக்குகிறேன். ஏ இராம! இது இலங்கையல்ல; நான் தசக்ரீவனுமல்ல; இதே கதையால் உன் சிரசைப் பிளக்கிறேன். ஏ காகுஸ்த்த! மதங்கொண்டயானை விளாங்கனியைஉடைப்பதுபோல், உன்னை யதமாக்குகிறேன்" எனக் கூறி இராமபிரானுடன் இராவணன் அமர் புரிந்தான். மகாபலிக்கும் தேவேந்திரனுக்கும் யுத்தம் நடந்ததுபோல் இவ்விரு இரத வீரர்களுக்கும் யுத்தம் நடந்தது. இரகுகுலதிலகருக்கு இப்பொழுது பரமானந்தமுண்டாயிற்று. பார்த்தவர் மயிர்க்குச்செறியும்படி யுத்தம் பலமாய்நடந்தது. சிறந்த

அஸ்திரவித்தையை யறிந்த இராமச்சந்திரமூர்த்தி, இராக்ஷஸராஜன் பிரயோகஞ்செய்த காந்தர்வாஸ்திரத்தை காந்தர்வாஸ்திரத்தாலும் தெய்வாஸ்திரத்தைத் தெய்வாஸ்திரத்தாலும் தடுத்தனர். இவ்விதம் அஸ்திர யுத்தம் நடக்கும்போது சிரேஷ்டனும் இராக்ஷஸாதிபதியுமான இராவணன் மிகவும் சினங்கொண்டு இராமபிரான் மீது பன்னகாஸ்திரத்தைப் பிரயோகித்தான். இராவணனது வில்லினின்றும் விடுபட்ட சொர்ணவர்ணாலங்கிருதமான அந்த பாணங்கள் அநேக சர்ப்பங்களாகி இரகுகுல வீரனை நோக்கி வந்தன. சர்ப்பமுகமுள்ள அந்த பாணங்கள் பயங்கரமாக வாயைத் திறந்து தீயைக்கக்கிக் கொண்டுவந்தன. வாசுகிக்குச் சமமானவைகளும் மகாவிஷத்துடன் கூடியவைகளும் பிரகாசிக்கும் படங்களுடன் கூடியவைகளுமாகிய அந்த பாணங்கள் திக்குகளெங்கும் பரவின. இவ்விதம் ஆயிரக்கணக்காக வரும் அந்த பாணங்களைப் பார்த்ததும் கருடாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தார். அந்த அஸ்திரமானது அநேக கருடனாகக் கிளம்பி, மிகுதியான விஷத்தோடு கூடிய சர்ப்பபாணங்களைத் தாக்கி அவைகளின் வலுவைக் குறைத்தன. தன்னுடைய அஸ்திரம் தடைபட்டு நிற்பதை நோக்கிய இராக்ஷஸாதிபன், பயங்கரமான கல்மாரியாலும் ஆயிரக்கணக்கான அஸ்திரங்களாலும் எக்காரியத்தையும் எளிதில்முடிக்க வல்ல இராமச்சந்திரமூர்த்தி பிரயோகித்த பாணங்களை வீணாக்கினான். அப்பொழுது இரகுநந்தனன் துக்கமடைந்தனன். அதைக் கண்ட தேவர்களும் துக்கித்தார்கள். கந்தர்வர்கள் கலங்கினார்கள். சாரணர்கள் சலனமடைந்தார்கள். பிதிர்த் தேவர்களும் திகைத்தார்கள். சித்தர்கள் சந்தாபமடைந்தார்கள். பரமரிஷிகள் பரிதாப மடைந்தார்கள். இராவணனாகிய இராகுவால் இராமனாகிய சந்திரன் ஆக்ரமிக்கப் பட்டிருப்பதை புதன் பார்த்து, சந்திரனுக்கு மனைவியாகிய ரோகணியை ஆக்கிரமித்து பிரஜைகளுக்குத்தீங்குண்டாகும் நிலைமையை யடைந்தான். சுழலும் அலைகளுடன் கூடியவனும் புகையுடன் கூடியவனுமாகிய சமுத்ரராஜன் கோபாவேசங்கொண்டவன் போலும் சூரியனைத் தொடுகிறவன் போலவும் கிளம்பினான். சூரியன் தன் கிரணமும் உருவமும் குறைந்து குரூரனாகவும் கபந்தத்தை அடையாளமாகக் கொண்டவனாகவும் தூமகேதுவுடன் சேர்ந்தவனாகவும் காணப்பட்டான்.

குதிரை, கரடி கழுதை இவைகளைப் போல் சப்திக்கும் புருஷாதமர்கள் உத்பாதத்திற் குரிய கூச்சலிட்டுக்கொண்டு வானத்தில் பல பாகங்களிலும் திரிந்தார்கள். இராமர் சற்றுந் துக்கித்தாரெனினும் உடனே மிகக் கோபங் கொண்டு புருவத்தை நெறித்துச் சிவந்த கண்களுடன் இராக்கதனைப் பொசுக்குபவர் போல் நோக்கினர். புத்திசாலியாகிய இராமர் கோபங் கொண்டவுடன் அவருடைய திருமுகத்தை நோக்கிய பூதங்கள் யாவும் நடுங்கின. பூமி அசைந்தது. சிங்கம், புலி மரங்கள் இவைகளுடன் கூடிய மலைகள் பருவகாலத்துக் கடல் போல் மிகவும் கலக்கமடைந்தது. இராவணனை வதஞ் செய்யும் பொருட்டு இலங்கையில், பிரயோகஞ் செய்யப்பட்டதும் பெருமூச்சிடும் சர்ப்பம் போல் பிரகாசிப்பதுமாகிய பாணத்தை எடுத்தார். முன்னம் மூவுலகங்களையும் ஜயிக்கக் கருதிய தேவேந்திரனுக்கு மிகுந்த தேஜஸுடைய பிரமதேவர் இந்த பாணத்தைகொடுத்தார். இந்திரன் அதை அகத்தியமகா முனிவருக்குக் கொடுத்தான். பகவானாகிய அகத்தியர் இராவண வதம் ஏற்படுவதன் பொருட்டு அந்த அஸ்திரத்தை இரகு புங்கவருக்குக் கொடுத்தார். அந்த பாணத்தின் சிறகுகளில் வாயுவும் நுனியில் தீயும் சூரியனுமிருக்கிறார்கள். சரீரம் ஆகாய மயமானது. மேருமந்தரம் இவைகள் போன்ற பருமனுடையது. கணுக்களில் மகாபலமுள்ள குபேரன் பாச ஹஸ்தனாகிய வருணன் யமன் முதலிய லோகபாலகர்களிருக்கிறார்கள். சொர்ணாலங்காரம் அமையப் பெற்றது. சூரியனைப் போன்ற தேஜஸுடையது. புகையுடன் கூடிய பிரளய கலாக்கினி போன்றது. இரதம், யானை, குதிரை இவைகளை நாசஞ் செய்யக் கூடியது. எதையும் விரைவில் முடிக்கக் கூடிய சாமார்த்தியம் வாய்ந்தது. அநேகாயிரம் பரிகங்களையும் நிர்மூலப்படுத்தக் கூடியது. அநேகருடைய இரத்த வெள்ளத்தில் மூழ்கி விளையாடிய மகிமை வாய்ந்தது. மிகக் குரூரமானது. காலன் போன்றது. பேரிரைச்சலிடக் கூடியது. அநேக சத்தியாயுதங்களை நாசஞ் செய்யக்கூடியது. பகைவர்களுக்கு நடுக்கத்தை யுண்டுபண்ணக் கூடியது. இறகுள்ள சர்ப்பம் போன்றது. காக்கை, கழுகு, செந்நாய், கொக்கு, இராக்கதன் இவைகளுக்கு எப்போதும் உணவுதரக் கூடியது. இராக்கதர்களுக்கு அச்சந்தரத்தக்கது. பகைவர்களுடைய கீர்த்தியைப் போக்கவல்லது. மனத்திற்கு

மகிழ்ச்சியை யளிக்கக்கூடியது. இவ்வளவனந்தம் மகிமைவாய்ந்த பாணத்தை,மகா பலசாலியாகிய இரகுவீரன் வில்லைக்குண்டலாகாரமாக வளைத்து வேத மந்திரங்களை உச்சரித்து இராவணனிடம் பிரயோகித்தார். இராமச்சந்திர பிரபுவால் விடப்பட்ட அந்தபாணம் புகையுடன் ஆகாயமார்க்கத்திற் கிளம்பி ஜ்வலித்தது. இந்திரன்பிரயோகிக்கும் வச்சிராயுதத்திற் கொப்பானதும் யமன் போன்றதும் எவராலும் தடுக்கமுடியாததுமான அந்த பாணத்தைஸஹஸ்ரமுகராவணன் நோக்கி, ஹுங்கார சப்தஞ் செய்து இடது கையால் அதை எட்டிப் பிடித்து முழந்தாளில் வைத்திழுத்து முறித்தான். அந்த பாணம் முறிந்ததும் இராமரது மனமுமுறிந்தது. உடனே ஸஹஸ்ரமுகராவணன் சினமடைந்து கோரவாயம்பு என்னும் ஓர் சிறந்த பாணத்தை யெடுத்து தன் வலுமுழுமையும் அதிற் செலுத்தி இராகவன் மார்பிலடித்தான். அந்த பாணம் இராகவன் மார்பைப்பிளந்துகொண்டுபூமிக்குள்பிரவேசித்து பாதாளஉலம் சென்றது.இராகவர்பின்பு புஷ்பக விமானத்தின் மீது சாய்ந்து விட்டார். பிரக்ஞைபிழந்து அசைவற்றுக் கிடந்தார். பூதங்கள் ஆ! ஆ! வெனக் கதறின. மலை, வனம், சமுத்திரம் இவைகளுடன் கூடிய பூமிநடுங்கிற்று. முனிவர் யாவரும் ஆ! ஆ!! இராமவென்று கூறி அச்சமுற்று இருந்த விடந் தெரியாமலோடினார்கள். மகா வீரனாகிய ஸஹஸ்ரமுக ராவணன் யுத்த பூமியில் தன் பரிவாரங்களுடன் கூத்தாடினான். ஆகாயத்திலிருந்து ஜ்வாலைகளுடன் கொள்ளிக்கட்டைகள் விழுந்தன.ஜனங்கள் பிரளயமென நினைத்துப் பயந்தார்கள்.

இராமர் பிரஞ்ஞாபங்க மடைந்ததைக் கூறும்

22-வது சருக்கம்.

முற்றிற்று.

23-வது சருக்கம்.

இங்ஙனம் இராமபிரான் பிரக்ஞையற்றுக் கிடப்பதைக் கண்ட முனிவர்கள், மிகவும் பயந்து தளர்ச்சியடைந்து, ஆ! ஆ!! என்றார்கள். சிலரிஷிகள் சாந்திஜபம் செய்தார்கள். அப்பொழுது முகமலர்ச்சியுடன் சீதையை முனிவர்கள் பார்த்தார்கள். பிறகு வசிட்டர் முதலிய முனிவர்கள் சீதையை நோக்கி, "சீதே! இந்த இராவணனைப் பற்றி நீ இராமரிடம் தெரிவித்த தென்ன? ஜனக ராஜன் புத்திரியே! பயங்கரமான சங்கட முண்டாயிருக்கிறதே. இவருடைய சகோதரர்கள் எங்குற்றனர். வானர வீரர்கள் எங்கே? மங்கள சொரூபியே! அமைச்சர்கள் எங்கு சென்றார்கள் என்று கேட்டார்கள். ஆத்ம சொரூப மறிந்த முனிவர்கள் இவ்வாறு புகன்றதும், சீதாபிராட்டி, கஷ்ட தசையை யடைந்தவரும், புஷ்பக விமானத்தின் மீது தமது பத்தினியை அணைந்து கொள்வது போல் வில்லையும் பாணத்தையும் அணைந்து கொண்டு நித்திரை செய்பவருமாகிய இராமரைப் பார்த்து, உடனே சினமடைந்து, அட்டகாசம் செய்தாள். அக்கணமே தன்னுருவத்தைக் மறைத்துப் பொந்துபோன்ற கண்கள், தீர்க்கமான கணைக்கால்கள், பெரிய இறைச்சலுடன் கூடிய முண்டங்களின் வரிசைகள் இவைகளுடன் கூடிய குரூரரூப முடையவளானாள். எலும்புகளை மணிகளாக் கொண்டிருந்தாள், நான்கு கைகளிருந்தன. அசையும் நாவையுடைய வளாயிருந்தாள். சடைகளிருந்தன. தேகமுழுதும் உரோமங்களிருந்தன. பிரளயகாலமேகம்போல் கறுத்திருந்தனள். கத்திமண்டையோடு இவைகளைத் தரித்துக் கொண்டிருந்தாள். இக்கோலங் கொண்ட சீதாபிராட்டி, ஒரு விநாடியில் தேரைவிட்டிறங்கி, தன் கைக்கத்தியால் இராவணனுடைய ஆயிரஞ் சிரங்களையும் விளையாட்டாக வெட்டினள். துராத்மாக்களாகிய மற்ற யுத்தவீரர்களுடைய சிரங்களையும் தன் நகநுனியால் கிள்ளி யெறிந்தனள். சிலருடைய உள்வயிற்றை நகநுனியால் பிளந்தாள். சிலரைக் கத்தியால் வெட்டினாள். மற்றுஞ் சிலரைக்கண்டங் கண்டமாகப் பிளந்தாள். சிலரைப்

பொடிப் பொடியாகச் செய்தாள். காலாலுதைத்துக் குடலைப் பிடுங்கினாள். பக்கத்தாலிடித்துச் சிலரைக்கொன்றாள். பின் பக்கத்தால் சிலரைத் தொந்தரை செய்தாள். சிலரைத் தன் சரீரக் காற்றாலும் சிலரைக் கண்ணால் பார்த்தும் நாசம் செய்தாள். இவ்விதம் இராக்ஷஸர்களுக்கு பயத்தை உண்டுபண்ணி அநேகரை நாசம் செய்தாள். சிலரைப் பின் பக்கத்தில் இரண்டு துண்டமாகச் செய்தாள். சிலரை மயிரைப் பிடித்திழுத்து பூமியில் தள்ளித் துகைத்தாள். தேர், யானை, குதிரை, கதை, தோமரம், இவைகளுடன் கூடின யோதர்களை யிழுத்துச் சமுத்திரத்தில் முழுகச் செய்தாள். சிலரைக் கழுத்தில் சுருக்கிட்டுப் பிராணனை மாய்த்தாள். சிலருடைய தோளின் மேலேறிக்கொண்டு சிரங்களைப் பிளந்தான். சிலருடைய பிராணனை ஹுங்காரத்தால் ஒழித்தாள். சிலருடைய முகத்தைப் பொடியாகச் செய்து பசுவைக் கொல்லுவது போல் கொன்றாள். இவ்வாறு ஜானகியவர்களைக் கொன்று அவர்களுடைய சிரங்களையும் நரம்புகளையும் மாலையாகத் தரித்துக் கொண்டாள். யுத்த முனையில் இராவணன் சிரங்களை எடுத்துக் கொண்டு பந்தாடுவதற்கு மனங் கொண்டாள்.

இச்சமயத்தில் சீதையின் மயிர்க் கால்களினின்று விகாரமான ரூபமுடைய மாதர்கள் அட்டஹாஸத்துடன் வெளிப்பட்டார்கள். ஆயிரக்கணக்குள்ள அந்த மாதர்கள் சீதையுடன் பந்தாடுவதற்கு வந்தார்கள். அவர்களில் சிலருடைய பெயரைக் கூறுகிறேன் கேள். ஓ பரத்வாஜ! கலியாணிகளாகிய அந்த ஸ்திரீகள் சராசரங்களாலாகிய உலகெங்கும் வியாபித்து நின்றனர்.

பிரபாவதி, விசாலாக்ஷி, பாலிதை, கோனலி, ஸ்ரீமதி, பகுளை, பகுபுத்திரிகை, அப்சுஜாதை, கோபாலி, பிருஹதம் பாலிகை, ஜயாவதி, மாலதிகை, துருவரத்தினை, பயங்கரி, வசுதாமை, சுதாமை, விசோகை, நந்திநி, ஏகசூடை, மகாசூடை, சக்ரநேமி, சடிதமை, உத்தேஜஸி, ஜயசேனை, கமலாக்ஷி, சோபனை, சத்ருஞ்ஜயை, குரோதனை, சலபி, கரி, மாதவி, சுப்பிரவஸ்திரை, தீர்த்தஸேனி, ஜடை, டஜ்வலை, கீதப்பிரியை, கலியாணி, சத்ருரோமா, அமிதாசனை, மேகஸ்வனை, போகவதி, சுப்ரூ, கனகாவதி, அலாதாக்ஷி, வேகவதி, வித்யுஜ்ஜிஹ்வை, பாரதி, பத்மாவதி, சிநேத்

திரை, கந்தரை, பகுயோஜனை, சன்னலிகை, மஹாகாளி, கமலை மஹாபலை, சுப்பிரபை, யசஸ்வினி, நிருத்தியப் பிரியை, பராநந்தை, சதோலூகலமேகலை, சதகண்டை, சதாநந்தை, ஆனந்தை, பவதாரிணி, வபுஷ்மதி, சந்திரசீதை, பத்ரகாளி, ஸடா மலை, ஜங்காரிகை, நிஷ்குடிகை, இராமை, சத்வரவாஸினி, சுமலை சுஸ்தனவதி, விருத்திகாமை, ஜயப்பிரியை, தனதை, சுப்பிரஸாதை வதை, ஜனேசுவரி, ஐடி, பேடி, சமேடி, வேதானஜனனி, கந் நாதி, கந்துகை, வேதமித்திரை, சுதேவிகை, இலம்பாஸ்யை, கேதசி ந்திரஸேனை, சலை, அசலை, குக்குடிகை, சிருங்கலிகை, சங்குலிகை ஹடை, கந்தாரிகை, காகலிகை, கும்பிகை, சதோதரி, உத்க்ராதினி ஜவேலை, மஹாவேகை, கங்கினி. மனோஜவை, கடகினி, பிரகஸை பூதனை, கேசபை, குரோசனை, தடித்ப்பிரபை, மந்தோதரி, முண்டி, கோடரை, மேகவாஹினி, சுபகை, லங்கினி லம்பை, பகுசூடை, விகத்தினி. ஊர்த்வவேணிதரை, பிங்காக்ஷி லோஹமேகலை, பிருதுவக்திரை, மதுலிஹை, மதுகும்பை, யக்ஷா ணிகை, மத்ஸரிகை, ஜாயு, ஜர்ஜரானனை, கியாதை, தஹதஹை தமதமை, கண்டகண்டை, பிருதுசுரோணி, பூஷணை, மணிகுட்டிகை அம்லோசை, நிம்லோசை, லம்பபயோதரை, வேணுவீணதரை, பிங் காக்ஷி, லோஹமேகலை, சசோலூகமுகி, சுவேதை, லோஹிதாக்ஷி, விபீஷணை, ஜடாலிகை, காமசரி, தீர்க்கஜிஹ்வை, பலோத்கடை காலை, அஹிகாயை, மாலிகை, முகுடை, முகுடேசுவரி, லோஹி தாக்ஷி, மஹாகாயை, ஹவிஷ்பிண்டை, பிண்டிகை, ஏகத்வசை சுகூர்மா குல்லா, கர்ணி, கர்ணிகை, சுரகர்ணி, சதுஷ்கர்ணி, கர்ணப் பிராவரணை, சதுஷ்பதநிகேதனை, கோகர்ணி, மஹிஷானனை, கர கர்ணி, மஹாகர்ணி, பேரிசுவனமஹாசுவனை, சங்ககும்பசிரவை, பகதை, மஹாபலை, கணை, சுகணை, காமதானி, கன்னிகை, சதுஷ்ப தாதை, பூதிதீர்த்தை, அன்னியகோசரை, பசுதை, விபுதை, சுகதை பயோதை, கோமஹிஷதை, சுவிசாலை, சதுர்புஜை, பிரதிஷ்டை சுப்ரதிஷ்டை, ரோசமானை, சுலோசனை, நௌகர்ணி, முககர்ணி விசிரை, மந்தினி, ஏகவக்திரை, மேகரவை, மேகவாமை, த்ஸிரோ சனை. இந்தமாதர்க்களும் மற்றுமுள்ளவர்களும் கோடிகோடியாக சீதையுடன் விளையாடுவதற்குப் புறப்பட்டார்கள். அவர்களில் சிலர் நீண்ட மார்புடையவர்கள். சிலர் நீண்ட பற்களையுடையவர்கள்.

நீண்ட முகமுடையவர்கள் சிலர். இரஸமறிந்தவர்கள் சிலர். மஹா சுபாவமுள்ளவர்கள் சிலர். யௌவன பருவத்தி லிருப்பவர்கள் சிலர். நன்றாக அலங்காரஞ் செய்துகொண்டவர்கள் சிலர். மகிமை பொருந்தியவர்கள் சிலர். தன்னிச்சைப்படி உருவமெடுக்கும் வல்லமையுள்ளவர்கள் சிலர். மாம்ஸமற்ற சரீரமுடையவர்கள் சிலர். வெண்மை நிறமுடையவர்கள் சிலர். சுவர்ணம் போன்றவர்கள் சிலர். ஓ பிராமண சிரேஷ்டனே! மற்றுமுள்ள வர்களில் கார்மேகம் போன்றவர்கள் சிலர். தூம வர்ணமுடையவர்கள் சிலர். சிவப்பு வர்ணமுடையவர்கள் சிலர். நீண்ட கேசமும் வெண்மை வர்ணமுள்ளவஸ்திரமுமுடுத்தவர்கள்சிலர். உயரமானவேணியையுடையார் சிலர். கோரோசனை யொத்த நிறமுடைய கண்களுடையவர்கள் சிலர். தொங்கும் அரைஞாணுடையவர்கள் சிலர். வயிறு தொங்குகிறவர்கள் சிலர். காது தொங்கியவர்கள் சிலர். ஸ்தனம் தொங்கியவர்கள் சிலர். சிவப்பு வர்ணமுள்ள கண்களுடையவர்கள் சிலர். தாம்பரம் போன்ற வர்ணமுடையவர்கள் சிலர். பச்சைவர்ணமுடைய நேத்திரமுள்ளவர்கள் சிலர். யுத்தத்தில் எப்பொழுதும் பகைவர்களுக்கு அச்ச முண்டாக்குகிறவர்கள் சிலர். வேகத்தில் வாயுவுக்கொப்பானவர்கள் சிலர். இவர்கள் பெருங்கல்லுக்கொப்பான இராக்ஷஸர்களின் சிரங்களை எடுத்துக்கொண்டு சீதையுடன் அந்த யுத்தபூமியில் விளையாடினார்கள். முண்டமாலையைத் தரித்தவளும் முண்டங்களை ஆபரணமாக அணிந்தவளும் மகாபலம்பொருந்தியவளும் கோரசுவரூபமுள்ளவளும் காளியுமாகிய ஜானகிதேவி, கழுகு பருந்து நரி இவைகளுடன் கூடியதும் மாம்ஸம் இரத்தம் இவைகளால் சேறாகி அதிகோரமாயிருக்கும் நரகம் போன்றதுமாகிய யுத்தபூமியில் ஆங்காங்கு நர்த்தனம் செய்தாள். அப்பொழுது பூமி வாயுவால் சலனமடைந்த மரக்கலம் போலாடிற்று. பருவதங்கள் யாவும் அசைந்தன. கடல்களும் கலங்கின. ஏ அந்தணரே! சொர்க்கலோக வாசிகளின் விமானங்கள், ஆகாய மார்க்கத்தினின்று அச்சங்கொண்டு விழுந்தன. சூரிய பகவானுடைய குதிரைகள் பயந்து கடிவாளங்களை யறுத்துக்கொண்டு வெருண்டோடிற்று. சீதாபிராட்டியாரின் பாத நுனியால் தொக்தரையுற்ற பூமிதேவி அத்தொந்தரவைச் சகிக்கொணாது பாதாளஞ்செல்ல விரும்பினள். பிராட்டியாரின் அட்டகாசத்தையும்

மாதர்களின் ஹுங்கார சப்தத்தையும் பார்த்து பிரளயம் வந்து விட்டதோவெனப் பயந்தார்கள். பூதேவி பாதாளம் செல்வதை நோக்கிய தேவர்கள் மகாதேவராகிய சிவபெருமானைப் பிரார்த்தித்தார்கள். ஈசன் அவர்கள் பிரார்த்தனைக்கிரங்கி யுத்தபூமிக்கு வந்து பூமி நிலைபுறுவதன் பொருட்டு சவரூபங்கொண்டு சீதாதேவியின் பாதஸ்பரிசமுள்ள விடங்களிலெல்கும் படுத்திருந்தார். அப்பொழுது பூமி நிலையுற்றது. சீதையின் பாதப் பிரதேசத்திலிருந்து பாதத்தைத் தாங்கிக் கொண்டிருந்தார் பரமசிவன். ஆயினும் மேலுலகங்கள் ஓர் கணமேனும் நிலைத்திருக்க முடியாதிருந்தன. பிராட்டியாரின் பாதசப்தத்தாலும் சிரசாலும் ஹுங்கார சப்தத்தாலும் மூச்சுக் காற்றுகளாலும் பூலோகம் புவர்லோகம் முதலியவைகள் நிலைகுலைந்து தடுமாறின. இந்த பூ புத்திரியாகிய சீதை செய்த நர்த்தனத்தைக் கண்ட அந்தணர்களும் இந்திரன் முதலிய தேவர்களும் சீதாதேவி ஜயமடைவாள்! சீதாதேவி ஜயமடைவாள்!! எனக் கூறி வியந்தார்கள். உடனே உலகம் பங்கமுறுமென்றுந் துக்கித்தார்கள்.

ஸஹஸ்ரமுக இராவணன் வதத்தைக் கூறும்.

23-வது சருக்கம்.

முற்றிற்று.

24-வது சருக்கம்

பிரமன், லோகபாலர்கள், முதலிய தேவர்கள், ரிஷிகள் பிதிர்க்கள் யாவரும் பிராட்டியாரின் வேகத்தைப் பார்த்து அத்தேவியின் அனுக்கிரகம் பெறுவதன் பொருட்டு இராக்கதர்களை நாசஞ் செய்த சீதா தேவியைக் கைகுவித்து வணங்கித் தோத்தரிக்கலாயினர். ஞானவடிவமானதும் மிக ஆவலுள்ளதும் நிஷ்கள பிரமத்தைவிட வேறில்லாததுமாகிய மகேசுவரசக்தியே! நீ ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு நாயகி. சூரியனிடமுள்ள நிர்மலமான தேஜஸ் உனது இயற்கைச் சக்தியாகவிருக்கிறது. வைஷ்ணவி சக்தியாகிய நீயே உபாதி பேதங்களால் உயர்ந்ததும் தாழ்ந்ததுமாகிய உருவங்களைப் பெற்று இராமனது சந்நிதியில் விளையாடுகின்றாய். உலகமுழுவதும் சிருஷ்டி செய்கிறவள் நீ. ஈசுவரன் காரியனுமல்ல காரணனுமல்லவென்பது நிச்சயம். ஜனகராஜனுக்குப் புத்திரியும் இராமனுக்கு மனைவியுமாகிய இந்தப் பரதேவதைக்கு அதிஷ்டான வசத்தால் சொரூபமாக வமைந்திருக்கும் சக்திகள் நான்கு. அவை சாந்தி, வித்தை, பிரதிஷ்டை, நிவிருத்தி எனப்படும். பரமேசுவரனை சதுர்வியூகனெனக் கூறுவதுண்டு பெரியோர்கள். தேவன் இந்த பராசத்தியில் தான் ஆத்மாநந்த மடைகிறான். ஏ தேவி! பரமாத்மாவாகிய இராமச்சந்திரன் மங்களகரமானதும் அநாதியானதும் நிச்சயிக்கப்பட்டதும் நிகரற்றதும் மகத்துமாகிய ஐசுவரியத்தை உனது சம்பந்தத்தால் தானடைகிறான். பூதங்களைப் பிரவிர்த்திக்கச் செய்யும் தேவி நீ தான். ஏ தேவி! புருஷோத்தமரும் மாயாவியுமாகிய ஈசன் உன்னால் தான் தமது தொழிலை இயற்றுகிறார். நீ மாயாரூபி. எங்கும் நிறைந்தவள். ஸனாதனி. சக்தி நீயே. மகேசுவரனுடைய விசுவரூபத்தன்மையை எப்பொழுதும் விளங்கச் செய்துகொண்டிருக்கிறாய். ஏ தேவி! உன்னால் படைக்கப்பட்ட அநேக சக்திகளுக்குள் ஞானசக்தி, கிரியாசக்தி பிராணசக்தி, இம்மூன்று சக்திகளும் விசேஷமான மகிமையுடையன. சக்தியும் ஒன்று

சிவனும் ஒருவன். சிவன் சக்தியை யுடையவ னெனப்படுகிறான் இந்தச் சக்திக்கும் சிவனுக்கும் தத்துவமறிந்த யோகிகள் அபேதங் கூறுகிறார்கள். ஏ ஜானகி! மகா மகிமை பொருந்திய சக்திகளின் சொரூபமே நீ. விசுவேசுவரியும் இரகுகுலத்திற் புகுந்த பதிவிருதையுமாகிய இந்தத் தேவி பூஜிக்கத் தகுந்தவள். இரகுவம்ச விவர்த்தனனாகிய பகவான் பூஜிக்கிறவன், மனனம் செய்கிறவர் இராமச்சந்திரன். மனனம் செய்யத்தக்கமதி சிதை. தனியானதும் எங்குமிருப்பதும் சூக்ஷ்மமும் கூடஸ்தமும் சலனமற்றதும் அழிவற்றதுமாகிய ஸ்தானத்தை யோகிகள் பார்க்கிறார்கள். அதுதான் தேவியின் பரமஸ்தானம். அநந்தமும் மூப்பில்லாததும் கேவலமானதும் நிஷ்களபரமுமாகிய பிர்ம்மத்தைப் பார்க்கிறார்கள் யோகிகள். அது உன் ஸ்தானம். அன்னை போல் தயையுடைய நீ ஈசுவரனை ஆசிரயித்து ஆனந்தத்திற்கிருப்பிடமாகிய ஸ்தானத்தைப் பெற விரும்பியவர்களின் ஸம்ஸார தாபத்தை யொழிக்கிறாய். ஏ மகேசுவரி! நீ இப்போது பூதங்களைச் சங்கரிக்கக் கூடாது. இராவணனை அவன் வம்சத்தாருடன் சங்கரித்து உலகத்திற்குச் சுகமளித்தாய். மறுபடியும் நர்த்தனம் செய்து உலகத்தை ஏன் சங்கரிக்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்கள்.

இங்ஙனம் பிரமதேவர் பிரார்த்திக்க விசாலாக்ஷியாகிய சீதாபிராட்டி அன்பு கூர்ந்து தேவர்களுடன் கூடிய பிரமனையும் மற்றவர்களையும் நோக்கி, ஏ தேவர்களே! புண்டரீகாக்ஷனாகிய என் கணவன் கோரவாயம்பால் மார்பிலடிக்கப்பட்டு விமானத்தின் மீது மரணமடைந்தவர் போலிருக்கும் இச்சமயம் நான் எவ்விதம் உலகத்திற்கு இதத்தைச் செய்யக் கருதுவேன். இந்தச் சராசரப் பிரபஞ்சமுழுதையும் ஒரே கிராஸமாகச் செய்யப் போகிறேன் எனத் தெரிவித்தாள்.

இங்ஙனம் பிராட்டியார் கூறியதும் தேவர்கள் ஹா! ஹா!! என்றலறினார்கள். பூமியும் அசைந்தது. இப்பொழுது பிரமதேவர் தேவர்கள் சூழ புஷ்பக விமானத்திலிருக்கும் இராமரிடஞ் சென்று தமது கையால் இருதபத்மத்தைத் தொட்டு அவரை எடுத்தார். கமலக் கண்ணனாகிய இராமபிரான் உடனே எழுந்து அபே

இராவண! நீ வெகு துட்டன். இப்பொழுது என் பாணத்தால் நீ அடிக்கப்பட்டு யமனுடைய பயங்கரமான முகத்தைப் பார்க்கப் போகிறாய் எனச் சொல்லிக்கொண்டே மற்றொரு வில்லைக் கையிலெடுத்தார். உடனே முன்னிற்கும் தேவர்களையும் பார்த்தார். தமது ஆருயிரினும் சிறந்த ஜானகியை அங்கு கண்டாரில்லை. அதற்குப் பதிலாக யுத்த பூமியில் நர்த்தனம் செய்யும் ஓர் காளியைக் கண்டார். அந்தக் காளி நான்கு கைகளுடனும் நீண்டு தொங்கவிட்டு அசையும் நாவினையும் உடையவளாயிருந்தாள். கத்தியையும் மண்டை யோடுகளையும் தரித்திருந்தாள். சவம் போன்றுரு வெடுத்த மகாதேவரின் இருதயத்தி லிருப்பவளும் திகம்பரையும் இரத்தத்தை யருந்துபவளுமாகிய காளி, பொந்து போன்ற கண்களுடனிருக்கக் கண்டார் இராமர். முண்டமாலையை ஆபரணமாகப் பூண்டிருக்கவும் கண்டனர் இராகவர். பயங்கரமான ஆகிருதியையுடையவளாய் மற்றும் அநேக காளிகளுடன் இராக்ஷஸராஜனுடைய முண்டங்களை யெடுத்துப் பந்து விளையாடுவதையுங் கண்டார் இராமர். இரதம், குதிரை, யானை, இவைகள் துண்டுதுண்டாக்கப் பட்டிருப்பதையுங் கண்டார். இங்கு இராக்கதனொருவனேனும் கை, கால், தலை, இவைகளையுடையவனாயில்லை. அங்கு நர்த்தனம் செய்யும் கபந்தங்களுக்குப் பாதங்களிலிருக்கவும் கண்டார். அவ்விடத்தில் இராவணனுடைய முண்டம் கூத்தாடுவதையும் கண்டனர். யுத்த பூமி இவ்வித மிருக்கக் கண்ட இராமபிரானுக்கு அப்பொழுதுண்டான பயத்தால் அவர் கையில் கொண்டிருந்த பாணமும் அவரை யறியாமல் நழுவி விழுந்தன. உடனே கமல மலர் போன்ற கண்களை மூடிக்கொண்டார். இவ்வாச்சரியத்தைக் கண்ட பிரம்மதேவர் இரகுநந்தனை நோக்கி, இரகுகுலதிலக! நீர் மனத்தளர் வுற்றதையும் இராவணன் கோபங் கொண்டதையும் பதிவிருதா சிரோமணியாகிய சீதாபிராட்டி பார்த்து, உடனே பயங்கரமான காளி உருக்கொண்டு தேரிலிருந்து குதித்து, யுத்த பூமியை யடைந்தனள். அடைந்ததும் தேவியின் மயிர்க்கால்களிலிருந்து அநேக மாதர்கள் குதித்தார்கள். தேவி அவர்களுடன் முதலில் இராவணனைச் சங்கரித்துப் பின்னர் இராக்கதர்களையும் நாசம் செய்து இப்பொழுது நர்த்தனம் புரிந்து கொண்டிருக்கிறாள். இராம! இந்தத் தேவியுடனிருந்து நீர் படைத்

தலாதி முத்தொழிலும் புரிகின்றீர். இந்தப் பிராட்டியைப் பிரிந்து இருக்குங்கால் எந்தக்காரியமும் உம்மால்செய்தற்கியலாது. இதனைத் தங்களுக்கு தெரிவிப்பதன் நிமித்தமாகவே இந்ததேவி இக்காரியம் செய்தனள். ஏ ஜானகிராம! தேவியைப் பார். ஏ வீர! பயத்தை யொழி. இந்தசீதை குறையற்றவளும் குணமுள்ளவளுமாகின்றாள். சத் அசத்தென்னும் விபக்தியற்றவள் என்று கூறினர். இவ்வாறு பிரமன் கூறிய இதமானவார்த்தைகளைக்கேட்டுத் துக்கத்தை விட்டு ஸ்ரீராமபிரான் ஜனகநந்தினியை நோக்கினர்.

இராமர் சமாதானத்தைக் கூறும்.

24-வது சருக்கம்

முற்றிற்று.

25-வது சருக்கம்.

கமல மலரை யொத்த கண்களையுடைய இராமபிரான், காளியைக் கண்டதும் பயந்து கை குவித்து வணங்கி நின்று "ஏ விசாலாக்ஷி! தேவி! நீ யார்?" உன் அவயவங்கள் சந்திரன் போலிருக்கின்றன. உன்னை இன்னாரென்று நான் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. ஏ மகாதேவி! எனது வினைக்களுக்குத் தயை செய்து விடையளிக்கவேண்டும் எனக் கேட்டனர். யோகிகளுக்கு அபயமளிக்கும் அந்தப் பரமேசுவரி, இரகுநாதனை நோக்கி, "நான் பராசக்தி. மகேசுவரனை ஆசிரிதவள். முமுக்ஷுக்கள் என்னை ஈசுவரனையன்றிவேறல்லவென்றும் அழிவற்றவளென்றும் ஏகமானவளென்றும் கூறுகின்றார்கள். நான் பிராணிகள் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக விருப்பவள். மங்களசொரூபி. நித்தியமானவள். விஞ்ஞான சொரூபிணி. மூர்த்திக ளெல்லாவற்றையும் பிரவிர்த்திக்கச் செய்கிறவள். முடிவற்றவள். கணக்கற்ற மகிமை யுள்ளவள். சம்சார சாகரத்தினின்றும் கரையேற்றுகிறவள். நான் உமக்குத் திவ்ய நேத்திரமளிக்கின்றேன். எனது ஈசுவர சொரூபத்தைப் பாரும் என்றாள்.

உடனே இராமச்சந்திரன் திவ்ய திருஷ்டியை யடைந்து, அந்த ரூபத்தை நோக்கினர். அந்த ரூபமானது கோடி சூரியனுக்கொப்பாய், எங்கும் வியாபித்ததாய் கலக்கமற்ற நிலையினையுடையதாய், ஆயிரம் ஜ்வாலா மண்டலங்களுக் கொப்பானதாய் விளங்கிற்று. பிரளயகாலத்தில் பொலிவுற்று விளங்கும் தீக்கூட்டங்களுக்குச் சமானமாயும், கோரப்பற்களை யுடையதாயும், ஒருவராலும் ஆக்கிரமித்தற்கரியதாயும், அடர்ந்த சடையினை யுடையதாயு மிருந்தது. திரிசூல பாணியாய் விளங்கிற்று. கோரரூபமும் பிரஸன்ன முகமுடையதாய் அநந்தமான ஐசுவரியத்துடனும் பிரகாசியாநின்றது. அவயவங்கள் சந்திரனை யொத்துப் பொலிவுற நின்றன. கையில் கதையும் சிரசில் கிரீடமும் காலில் சிலம்பும், இடையில் திவ்ய

வஸ்திரமும்சிரசில் புஷ்பமும்மார்பில் கந்தமுந்தரித்திருந்தது. சங்கம் சக்ரம் இவைகளையுடையதாய், மூன்று நேத்திரங்களுடன் காணப்பட்டது. கரியுரியை ஆடையாகக் கொண்டிருந்தது. மனத்திலிருப்பதாகவும், அண்டங்களுக்குள்ளும் புறம்பு மிருப்பதாகவும் காணப்பட்டது. சர்வசக்தி சொரூபமாக விளங்கிற்று. பிரமன், இந்திரன், உபேந்திரன், யோகீந்திரர்கள் இவர்களனைவரும் துதிக்கப்பெற்ற பாதார விந்தமுடையதாய், எல்லாவிடங்களிலும் கை கால், சிரசு, முகம் இவைகளை யுடையதாய் எல்லாவற்றையும் சுற்றிக் கொண்டிருப்பதாய் விளங்கிற்று. இந்தத்திவ்யரூபங்கண்ட இராமச்சந்திர மூர்த்தி தாம் அந்த பரமேசுவரியின் சக்திக்குள்ளாய் மனதைப் பறிகொடுத்தாராயினும் தம்மிடம் மனதை நிலைநிறுத்தி ஓங்காரத்தை ஸ்மரித்து ஆயிரத்தெட்டு முறை நமஸ்காரம் செய்து பரமேசுவரியைத் தோத்தரிக்கலானார்.

ஸ்ரீ ஸீதா ஸஹஸ்ர நாமம்.

1 ஓம் ஸீதாயை-நம:
உமாயை
பரமாயைசக்தயை
அனந்தாயை
நிஷ்கலாயை
அமலாயை
சாந்தாயை
மாகேச்வர்யை
நித்தியாயை
10 சாசுவத்யை
பரமாக்ஷராயை
அசிந்த்யாயை
கேவலாயை
அனந்தாயை
சிவாத்மனே
பரமாத்மிகாயைநம:
அனுதயே
அவ்யயாயை
சுத்தாயை
20 தேவாத்மனே
ஸர்வகோசராயை
ஏகஸ்யை
அனேகவிபாகஸ்தாயை
மாயாதீதாயை
ஸுநிர்மலாயை
மகாமாகேச்வர்யை
சக்தாயை
மகாதேவ்யை
நிரஞ்சனாயை
30 காஷ்டாயை

ஸர்வாந்தரஸ்தாயை நம:
சிச்சக்த்யை
அதிலாலஸாயை
ஜானக்யை
மிதிலானந்தாயை
ராக்ஷஸாந்த விதாயின்யை
ராவணாந்தகர்யை
ரம்யாயை
ராம வக்ஷஸ்தலாலயாயை
40 உமாயை ஸர்வாத்மிகாயை
வித்யாயை
ஜ்யோதிரூபாயை
அயுதாக்ஷர்யை
சாந்த்யை
பிரதிஷ்டாயை
ஸர்வேஷாம் நிவிருத்யை
அமிருதப்பிரதாயை
வ்யோமமூர்த்யை
வியோமமய்யை
50 வியோமாதாராயை
அச்சுதாயை
லதாயை
அனாதிநிதனாயை
யோஷாயை
காரணாத்மனே
கலாகுலாயை
நந்தப்பிரதமஜாயை
நாபயே [யாயை
அமிருதஸ்யாந்த [ஸம்ச்ர
60 பிராணேச்வரப்பிரியாயை

மாத்ரே நம:
மஹ்யை
மகிஷவாகனாயை
பிராணேச்வர்யை
பிராணரூபாயை
பிரதானபுருஷேச்வர்யை
ஸர்வசக்தயே
கலாயை
காஷ்டாயை [ஸ்னாயை
70 இந்தோர்ஜ்யோத்
மகிமாஸ்பதாயை
ஸர்வகார்ய நியந்திர்யை
ஸர்வபூதேச்வரேச்வர்யை
அனாதயே
அவ்யக்தகுணாயை
மகாநந்தாயை
ஸனாதன்யை
ஆகாசயோனயே
யோகஸ்தாயை [வர்யை
80. ஸர்வயோகேச்வரேச்
சவாஸனாயை
சிதாந்தஸ்தாயை
மகேச்யை
விருஷவாகனாயை
பாலிகாயை
தருண்யை
விருத்தாயை
வ்ருத்தமாத்ரே
ஜராதுராயை
90. மகாமாயாயை

ஸூதுஷ்பூராயை நம:
மூலப் பிரகிருதயே
ஈச்வர்யை
ஸம்ஸாரயோனயே
ஸகலாயை
ஸர்வசக்திஸமுத்பவாயை
ஸம்ஸாரஸாராயை
துர்வாராயை
துர்நிரீக்ஷ்யாயை
100 துராஸதாயை.
ப்ராணசக்த்யை
ப்ராணவித்யாயை
யோகின்யை
பரமாயைகலாயை
மகாவிபூத்யை
துர்த்தர்ஷாயை [வாயை
மூலப்பிரகிருதி ஸம்ப
அனுத்யனந்தவிபவாயை
பராத்மனே
110. பலினேபுருஷாய
ஸர்வஸ்தித்யந்தகரண்யை
ஸூதுர்வாச்யாயை
துரத்யயாயை
சப்தயோனயே
சப்தமய்யை
நாதாக்யாயை
நாதவிக்ரகாயை
ப்ரதான புருஷாதீதாயை
ப்ரதானபுருஷாத்
120 புராண்யை [மிகாயை
சின்மய்யை
பும்ஸாமாதயே நம:
புருஷரூபிண்யை
பூதாந்தராத்மனே
கூடஸ்தாயை [தாயை
மகாபுருஷ ஸம்ஞ்ஞி [யை
ஜன்மமிருத்யுஜராதீதா
ஸர்வசக்திஸமன்விதாயை
வ்யாபின்யை
130 அனவச்சின்னாயை
ப்ரதானாயை
ஸூப்ரவேசின்யை
க்ஷேத்ரஞ்ஞாயை
சக்த்யை
அவ்யக்தலக்ஷணாயை
மலவர்ஜிதாயை [யை
அனாதிமாயாஸம்பின்னா
த்ரிதத்வாயை
ப்ரகிருத்யை
140 குணாயை
மகாமாயாஸமுத்பன்
தாமஸ்யை [னாயை
பௌருஷாய
த்ருவாயை
வ்யக்தாவ்யக்தாத்
க்ருஷ்ணாயை [மிகாயை
ரக்தாயை
சுக்லாயை
ப்ரஸூதிகாயை
150 ஸ்வகார்யாயை
கார்யஜனன்யை
ப்ரும்மாஸ்யாயை

ப்ரும்மஸம்ச்ரயாயை நம:
வ்யக்தாயை
ப்ரதமஜாயை
ப்ராம்ஹ்யை
மகத்யை
ஞானரூபிண்யை
வைராக்யைச்வர்
யதர்மாத்மனே
160 ப்ரம்ம மூர்த்யை
ஹ்ருதிஸ்திதாயை
ஜயதாயை
ஜித்வர்யை
ஜைத்ர்யை
ஜயச்ரியை
ஜயசாலின்யை
ஸுகதாயை
சுபதாயை
ஸத்யாயை
170 சுபாயை
ஸம்க்ஷோபகாரிண்யை
அபாம்யோனயே
ஸ்வயம்பூதயே
மானஸ்யை
தத்வஸம்பவாயை
ஈச்வராண்யை
சர்வாண்யை
சங்கரார்த்த சரீரிண்யை
பவான்யை
180 ருத்ராண்யை
மகாலக்ஷ்ம்யை
அம்பிகாயை

மாஹேச்வரீஸமுத்பன்
புக்தி முக்திபலப் [னாயை
ஸர்வேச்வர்யை [ப்ரதாயை
ஸர்வஜ்ஞாயை
நித்யாயை
முதிதமானஸாயை
ப்ரும்மேந்த்ரோபேந்த்ர
நமிதாயை [தின்யை
190 சங்கரேச்சானுவர்த்
ஈச்வரார்த்தாஸன
கதாயை
ரகூத்தமபதிவ்ரதாயை
ஸக்ருத்விபாவிதாயை
ஸர்வஸ்யை
ஸமுத்ரபரிசோஷிண்யை
பார்வத்யை
ஹிமவத்புத்ர்யை
பரமாநந்த தாயின்யை
குணாட்யாயை
200 யோகதாயை
யோக்யாயை
ஞானமூர்த்யை
விகாஸின்யை
ஸாவித்ர்யை
கமலாயை லக்ஷ்ம்யை
ஸ்ரீயை
அனந்தோரஸ்திதாயை
ஸரோஜநிலயாயை
சுப்ராயை
210 போகநித்ராயை
ஸுதர்சனாயை

ஸரஸ்வத்யை நம:
ஸர்வவித்யாயை
ஜகஜ்ஜ்யேஷ்டாயை
ஸுமங்கலாயை
வாஸவ்யை
வரதாயை
வாச்யாயை
கீர்த்யை
220 ஸர்வார்த்த ஸாதிகாயை
வாகீச்வர்யை
ஸர்வவித்யாயை
மஹாவித்யாயை
ஸுசோபனாயை
குஹ்யவித்யாயை
ஆத்மவித்யாயை
ஸர்வவித்யாயை
ஆத்மபாவிதாயை
ஸ்வாஹாயை
230 விச்வம்பர்யை
ஸித்த்யை
ஸ்வதாயை
மேதாயை
த்ருத்யை
ச்ருத்யை
நாபயே
ஸுநாபயே
ஸுக்ருத்யை
மாதவ்யை
240 நரவாஹின்யை
பூஜாயை
விபாவர்யை
ஸௌம்யாயை

பாகின்யை நம:
போகதாயின்யை
சோபாயை
வசங்கர்யை
லீலாயை
மானின்யை
250 பரமேஷ்டின்யை
த்ரைலோக்ய ஸுந்தர்யை
ரம்யாயை
ஸுந்தர்யை
காமசாரிண்யை
மஹாநுபாவமத்யஸ்தாயை
மஹாமஹிஷமர்த்தின்யை
பத்மமாலாயை
பாபஹராயை
விசித்ரமகுடானனாயை
260 காந்தாயை
சித்ராம்பரதராயை
திவ்யாபரண பூஷிதாயை
ஹம்ஸாக்யாயை
வ்யோமநிலயாயை
ஜகத்ஸ்ருஷ்டிவிவர்த்தின்யை
நிர்யந்த்ராயை
மந்த்ரவாகஸ்தாயை
நந்தினயை
பத்ரகாளிகாயை
270 ஆதித்யவர்ணாயை
கௌமார்யை
மயூரவரவாகின்யை
வ்ருஷாஸனகதாயை
கௌர்யை
மஹாகாள்யை

ஸுராஸுரார்ச்சிதாயை நம:
அமித்யை
நியதாயை
ரௌத்ர்யை
280 பத்மகர்ப்பாயை
விவாகனாயை
விரூபாக்ஷ்யை
லேலிஹானாயை
மஹாஸுரவிநாசின்யை
மஹாபலாயை
அனவத்யாங்க்யை
காமபூராயை
விபாவர்யை
விசித்ரரத்னமகுடாயை
290 ப்ரணதார்த்தி விவர்த் [தின்யை
கௌசிக்யை
கர்ஷிண்யை
ராத்ர்யை
த்ரிதசார்த்திவிநாசின்யை
விரூபாயை
ஸுரூபாயை
பீமாயை
மோக்ஷப்ரதாயின்யை
பக்தார்த்திநாசின்யை
300 பவ்யாயை
பவபாவவிநாசின்யை
நிர்க்குணாயை
நித்யவிபவாயை
நிஸ்ஸாராயை
நிரபத்ரபாயை
யசஸ்வின்யை
ஸாமகீதயே
பவாங்கநிலயாயை
அலயாயை நம:
310 தீக்ஷாயை
வித்யாதர்யை
தீப்தாயை
மஹேந்த்ரவிநிபாதின்யை
ஸர்வாதிசாயின்யை
வித்யாயை
ஸர்வசக்திப்ரதாயின்யை
ஸர்வேச்வரப்ரியாயை
தார்க்ஷ்யை
ஸமுத்ராந்தரவாஸின்யை
அகலங்காயை
320 நிராதாராயை
நித்யஸித்தாயை
நிராமயாயை
காமதேனவே
வேதகர்ப்பாயை
தீமத்யை
மோஹநாசின்யை
நிஸ்ஸங்கல்பாயை
நிராதங்காயை
வினயாயை
330 வினயப்ரதாயை
ஜ்வாலாமாலா ஸஹஸ்ராட் [யாயை
தேவதேவ்யை
மனோன்மன்யை
உர்வ்யை
குர்வ்யை
குரவே
ச்ரேஷ்டாயை
ஸகுணாயை
ஷட்குணாத்மிகாயை
340 மஹாபகவத்யை

பவ்யாயை நம:
வஸுதேவஸமுத்பவாயை
மஹேந்த்ரோபேந்த்ர
பக்திகம்யாயை [கின்யை
பராயணாயை
ஞானஞ்ஞேயாயை
ஜராதீதாயை
வேதாந்த விஷயாயை
கத்யை
350 தக்ஷிணாயை
தஹனாயை
பாஹ்யாயை
ஸர்வபூதநமஸ்கிருதாயை
யோகமாயாயை
விபாவஞ்ஞாயை
மஹாமோஹாயை
மஹீயஸ்யை
ஸத்யாயை
ஸர்வஸமுத்பூதயே
360 ப்ரும்மவிருக்ஷாச்ர
மத்யை [யாயை
பீஜாங்குர ஸமுத்பூத்யை
மஹாசக்தயே
மஹாமத்யை
க்யாத்யை
ப்ரதிஞ்ஞாயை
சிதே
ஸம்விதே
மஹாயோகேந்த்ர
370 விக்ருத்யை [சாயிந்யை
சாங்கர்யை
சாஸ்த்ர்யை
கந்தர்வயக்ஷஸேவிதாயை

வைச்வானர்யை நம:
மஹாசாலாயை
தேவஸேனாயை
குஹப்ரியாயை
மஹாராத்ர்யை
சிவாநந்தாயை
380 சச்யை
துஸ்வப்னநாசின்யை
பூஜ்யாயை
அபூஜ்யாயை
ஜகத்தாத்ர்யை
துர்விஞ்ஞேயஸ்வரூபிண்
குஹாம்பிகாயை [யை
குஹோத்பத்யை
மஹாபீடாயை
மருத்ஸுதாயை
390 ஹவ்யவாஹாந்தாயை
கார்க்யை
ஹவ்யவாஹஸமுத்பவா
ஜகத்யோனயே [யை
ஜகன்மாத்ரே
ஜகன்மிருத்யவே
ஜராதிகாயை
புத்யை
மாத்ரே
புத்திமத்யை
400 புருஷாந்தரவாஸின்யை
தபஸ்விந்யை
ஸமாதிஸ்தாயை
த்ரிநேத்ராயை
திவிஸம்ஸ்திதாயை [த்ரே
ஸர்வேந்திரியமனோமா
ஸர்வபூதஹ்ருதிஸ்திதாயை

ஸம்ஸாரகாரிண்யை நம:
வித்யாயை
ப்ரம்மவாதிமனோலயா
ப்ருமஹாண்யை [யை
410 ப்ருஹத்யை
ப்ராம்ஹ்யை
ப்ரும்மபூதாயை
பயாவனயை
ஹிரண்மையை
மஹாராத்ர்யை
ஸம்ஸாரபரிவர்த்திகாயை
ஸுமாலின்யை
ஸுருபாயை
தாரிண்யை
420 பாவின்யை
ப்ரபாயை
உன்மீலன்யை
ஸர்வஸகாயை
ஸர்வப்ரத்யயஸாக்ஷி
தமின்யை [ண்யை
தாமின்யை
விச்வஸ்யை
போகதாயை
தாரிண்யை
430 தாராயை
ஸௌஸௌம்பாயை
சக்த்ரவதனாயை [ஸாயை
தாண்டவாஸக்த மான
ஸத்வசக்திகர்யை
சுத்யை
மலத்ரயவினாசின்யை
ஜகத்ப்ரியாயை
ஜகன்மூர்த்யை நம:
த்ரிமூர்த்யை
440 அமிருதாச்ரயாயை
நிராச்ரயாயை
நிராஹாராயை
நிரங்குசரோத்பவாயை
சக்ரஹஸ்தாயை
விசித்ராங்க்யை
ஸ்ரக்விண்யை
பத்மதாரிண்யை
பராபரவிதானஞ்ஞாயை
மஹாபுருஷபூர்வஜாயை
450 வித்யேச்வரப்ரியாயை
வித்யாயை
வித்யுஜ்ஜிஹ்வாயை
ஜிதச்ரமாயை
வித்யாமய்யை
ஸஹஸ்ராக்ஷ்யை
ஸஹஸ்ரச்ரவணாத்மஜாயை
ஸஹஸ்ரரச்மயே
பத்மஸ்தாயை
மஹேச்வரபதாச்ரயாயை
460 ஜ்வாலின்யை
ஸத்மனாவ்யாப்தாயை
தைஜஸ்யை
பத்மரோதிகாயை
மஹாதேவாச்ரயாயை
மான்யாயை
மஹாதேவமனோரமாயை
வ்யோமலக்ஷ்ம்யை
ஸிம்ஹரதாயை
சேகிதான்யை

470 அமிதப்ரபாயை நம:
விச்வேச்வர்யை
விமாநஸ்தாயை
விசோகாயை
சோகநாசின்யை
அனாஹதாயை
குண்டலின்யை
நளின்யை
பத்மவாஸின்யை
சதானந்தாயை
480 ஸதாம்கிர்த்யை
ஸர்வபூதாஶ்ரயஸ்திதாயை
வாக்தேவதாயை
ப்ரும்ஹகலாயை
கலாதீதாயை
கலாவத்யை
ப்ரும்ஹர்ஷயே
ப்ரும்ஹஹ்ருதயாயை
ப்ரும்ம விஷ்ணு சிவ ப்ரி [யாயை
வ்யோமசக்த்யை
490 க்ரியாசக்த்யை
ஜனசக்த்யை
பரஸ்யைசக்த்யை
க்ஷோபிகாயை
ரௌத்ரிகாயை
அபேத்யாயை
பேதாபேதவிவர்ஜிதாயை
அபின்னாயை
பின்னஸம்ஸ்தானாயை
வம்சின்யை
500 வம்சஹாரிண்யை
குஹ்யசக்த்யை
குணநிதாயை நம:
ஸர்வதாயை
ஸர்வதோமுக்யை
பகின்யை
பகவத்பத்ந்யை
ஸகலாயை
காலகாரிண்யை
ஸர்வவிதே
510 ஸர்வதோபத்ராயை
குஹ்யாதிதாயை
குஹாவள்யை
ப்ரக்ரியாயை
யோகமாத்ரே
கந்தாயை
விச்வேச்வரேச்வர்யை
கபிலாயை
கபிலாகாந்தாயை
கனகாபாயை
520 கலாந்தராயை
புண்யாயை
புஷ்கரிண்யை
போக்த்ர்யை
புரந்தரபுரஸ்ஸராயை
போஷண்யை
பரமைச்வர்ய பூதிதாயை
பூதிபூஷணாயை [யை
பஞ்சப்ரும்மஸமுத்பத்
பரமாத்மாத்மவிக்ரஹாயை
530 நர்மோதயாயை
பானுமத்யை
யோகிஜ்ஞேயாயை
மனோஜவாயை

பீஜரூபாயை நம:
ரஜோரூபாயை
வசின்யை
யோகரூபிண்யை
ஸுமந்த்ராயை
மந்த்ரிண்யை
540 பூர்ணாயை
ஹ்லாதின்யை
க்லேசநாசின்யை
மனோஹர்யை
மனோரம்யை
தாபஸ்யை
வேதரூபிண்யை
வேதசக்த்யை
வேதமாத்ரே
வேதவித்யாப்ரகாசின்யை
550 யோகேச்வரேச்வர்யை
மாலாயை
மஹாசக்த்யை
மனோமய்யை
விச்வாவஸ்தாயை
வீரமூர்த்யை
வித்யுன்மாலாயை
விஹாயஸ்யை
பீவர்யை
ஸுரபயே
560 வந்த்யாயை
நந்தின்யை
நந்தவல்லபாயை
பாரத்யை
பரமானந்தாயை
பராபரவிபேதிகாயை
ஸர்வப்ரஹரணோபேதாயை
காம்யாயை
காமேச்வரேச்வர்யை
அசிந்த்யாயை
570 அசிந்த்யமஹிம்னே
துர்லேகாயை
கனகப்ரபாயை
கூச்மாண்ட்யை
தனரத்னாட்யாயை
ஸுகந்தாயை
கந்ததாயின்யை
த்ரிவிக்ரமபதோத்பூதாயை
தனுஷ்பாணயே
சிரோஹபாயை
580 ஸுதுர்லபாயை
தனுந்யக்ஷாயை
தன்யாயை
பிங்கள லோசனாயை
ப்ராந்த்யை
பிரமாவத்யை
தீப்த்யை
பங்கஜாயதலோசனாயை
ஆத்யாயை
ஹ்ருத்கமலோத்பூதாயை
590 பரஸ்யைமாத்ரே
ரணப்ரியாயை
ஸத்க்ரியாயை
கிரிஜாயை
நித்யஸுக்தாயை
புஷ்பநிரந்தராயை
துர்க்காயை

காத்யாயன்யை நம:
சண்ட்யை
சற்ரிகாயை
600 சாந்தவிக்ரஹாயை
ஹிரண்யவர்ணாயை
ரஜன்யை [காயை
ஜகன்மர்த்ரப்ரவர்த்தி
மந்த்ராத்ரி நிவாஸாயை
சாரதாயை
ஸ்ர்ணமாயின்யை
ரத்னமாலாயை
ரத்னகர்ப்பாயை
ப்ரிதிவ்யை
610 விச்வப்ரமாதின்யை
பத்மாஸனாயை
பத்மநிபாயை
நித்யதுஷ்டாயை
அமிருதோத்பவாயை
துன்வத்யை
துஷ்ப்ரகம்பாயை
ஸூர்யமாத்ரே
த்ருஷத்வத்யை
மஹேந்த்ரபகின்யை
620 மாயாயை
வரேண்யாயை
வரதர்ப்பிதாயை
கல்யாண்யை
கமலாயை
ராமாயை
பஞ்சபூதவரப்ரதாயை
வாச்யாயை
வரேச்வர்யை

நந்த்யாயை நம:
630 துர்ஜயாயை
துரதிக்ரமாயை
காளராத்ர்யை
மஹாவேகாயை
வீரபத்ரஹிதப்ரியாயை
பத்ரகாள்யை
ஜகன்மாத்ரே
பக்தானும்பத்ரதாயின்
கராளாயை [யை
பிங்களாகாராயை
640 நாமவேதாயை
மஹாநதாயை
தபஸ்வின்யை
யசோதாயை
யதாத்வபரிவர்த்தின்யை
சங்கின்யை
பத்மின்யை
ஸாங்க்யாயை
ஸாங்க்யயோகப்ரவர்த்தி
சைத்ர்யை காயை
650 ஸம்வத்ஸராயை
ருத்ராயை
ஜகத்ஸம்பூரண்யை
இந்த்ரஜாயை
சும்பாரயே
கேசர்யை
கஸ்தாயை
கம்புக்ரீவாயை
கலிப்ரியாயை
காத்வஜாயை
660 காரூடாயை

பாரார்த்யாயை நம:
பாமாலின்யை
ஐச்வர்யரத்னநிலயாயை
விரக்தாயை
கருடாஸனாயை
ஜயந்த்யை
ஹ்ருத்குஹாரம்யாயை
ஸத்வவேகாயை
கஹோச்ரண்யை
670 ஸங்கல்பஸித்தாயை
ஸாம்யஸ்தாயை [யை
ஸர்வவிஞ்ஞானதாயின்
கலிகல்மஷஹந்த்ர்யை
குஹ்யோபனிஷதே
உத்தமாயை
நித்யதிருஷ்ட்யை
ஸ்ம்ருத்யை
வியாப்த்யை
புஷ்ட்யை
680 துஷ்ட்யை
க்ரியாவத்யை
விச்வாமரேச்வரேசானா
புக்த்யை [யை
முக்த்யை
சிவாயை
அமிருதாயை
லோஹிதாயை
ஸர்வமாத்ரே
பீஷணாயை
690 வனமாலின்யை
அனந்தசயனாயை
அனத்பாயை
நரநாராயணோத்பவாயை
ந்ருஸிம்ஹ்யை
தைத்யமதின்யை
சங்கசக்ரகதாதராயை
ஸங்கர்ஷணஸமுத்பத்யை
ஆம்பிகோபாங்கஸம்ச்ர
மஹாஜ்வாலாயை [யாயை
700 மஹாமூர்த்யை
ஸுமூர்த்யை
ஸர்வகாமதுகே
ஸுப்ரபாயை
ஸுதராம்கௌர்யை
தர்மகாமாயை
அர்த்தமோக்ஷதாயை
ப்ரூமத்யநிலயாயை
அபூர்வாயை
ப்ரதானபுருஷாவள்யை
710 மஹாவிபூதிதாயை
மத்யாயை
ஸரோஜ நயனாயை
ஆஸனாயை
அஷ்டாதசபுஜாயை
நாட்யாயை
நீலோத்பலதளப்ரபாயை
ஸர்வசக்த்யாஸமா
ரூடாயை
தர்மாதர்மானுவர்ஜி
தாயை
வைராக்யஞ்ஞான
நிரதாயை
720 நிராலோகாயை
நிரிந்த்ரியாயை

விசித்ரகஹனாயை நம:
தீராயை.
சாச்வதஸ்தானவாஸின்
ஸ்தானேச்வர்யை [யை
நிராநந்தாயை
த்ரிசூலவரதாரிண்யை
அசேஷதேவதாமூர்த்யை
தேவதாயை
730 பரதேவதாயை
கணாத்மிகாயை
கிரே:புத்ர்யை
நிசும்பவிநிபாதின்யை
அவர்ணாயை
வர்ணரஹிதாயை
நிர்வர்ணாயை
பீஜஸம்பவாயை
அனந்தவர்ணாயை
அனன்யஸ்தாயை
740 சங்கர்யை
சாந்தமானஸாயை
அகோத்ராயை
கோமத்யை
கோமதர்யை
குஹ்யரூபாயை
குணாந்தர்யை
கோச்ரீகவ்யப்ரியாயை
கௌர்யை
கணேச்வரநமஸ்கிருதாயை
750 ஸத்யமாத்ராயை
ஸத்யஸந்தாயை
த்ரிஸந்த்யாயை
ஸந்திவர்ஜிதாயை
ஸர்வவாதாச்ரயாயை
ஸாங்க்யாயை நம:
ஸாங்க்யயோகஸமுத்பவா
அஸங்க்யேயாயை [யை
அப்ரமேயாக்யாயை
சூன்யாயை
760 சுத்தகுலோத்பவாயை
பிந்துநாதஸமுத்பத்யை
சம்புவாமாயை
சசிப்ரபாயை
விஸங்காயை
பேதரஹிதாயை
மனோஜ்ஞாயை
மதுஸூதன்யை
மஹாத்யை
ஸ்ரீயை
770 ஸ்ரீஸமுத்பத்யை [யை
தம:பாரேப்ரதிஷ்டிதா
த்ரிதத்வமாத்ரே
த்ரிவிதாயை
ஸுஸூக்ஷ்மபதஸம்ச்ர
சாந்த்யதீதாயை [யாயை
மலாதீதாயை
நிர்விகாராயை
நிராச்ரயாயை
சிவாக்யாயை
780 சித்ரநிலயாயை [யை
சிவஞ்ஞானஸ்வரூபிண்
தைத்யதானவநிர்மாத்ர்
காச்யப்யை [யை
காலகர்ணிகாயை
சாஸ்த்ரயோனயே
க்ரியாமூர்த்யை [யை
சதுர்வர்க்கப்ரதர்சிதா

நாராயண்யை நம:
நமோவாத்பூதாயை
790 கௌமுத்யை
லிங்கதாரிண்யை
காமுச்யை
லலிதாயை
தாராயை
பராபராவிபூதிதாயை
பராந்தஜாதமஹிம்நே
படபாயை
வாமலோசனாயை
ஸுபத்ராயை
800 தேவக்யை
ஸீதாயை
வேதவேதாந்தபாரகா
மனஸ்வின்யை [யை
மன்யுமாத்ரே
மஹாமன்யுஸமுத்பவா
அம்ருத்யவே [யை
அம்ருதாஸ்வாதாயை
புருஹூதாயை
புருப்லுதாயை
810 அசோச்யாயை
பின்னவிஷயாயை
ஹிரண்யரஜதப்ரியாயை
ஹிரண்யாயை
ராஜத்யை
ஹைம்யை
ஹேமாபரணபூஷிதாயை
விப்ராஜமானாயை
துர்ஜ்ஞேயாயை [தாயை
ஜ்யோதிஷ்டோமபலப்ர
820 மஹாநித்ராயை நம:
ஸமுத்பூத்யை
பலீந்த்ராயை
ஸத்யதேவதாயை
தீர்க்காயை
ககுத்மின்யை வித்யாயை
சாந்திதாயை
சாந்திவர்த்தின்யை [யை
லக்ஷ்ம்யாதிசக்தி ஜனன்
சக்திசக்ரப்ரவர்த்திகா
830 த்ரிசக்திஜனன்யை [யை
ஜன்யாயை
ஷடூர்மிபரிவர்ஜிதாயை
ஸ்வாஹாயை
கர்மகரண்யை
யுகாந்ததளநாத்மிகாயை
ஸங்கர்ஷணாயை
ஜகத்தாத்ர்யை
காமயோனயே
கிரீடின்யை
840 ஐந்த்ர்யை
த்ரைலோக்யநமிதாயை
வைஷ்ணவ்யை
பரமேச்வர்யை
ப்ரத்யும்னதயிதாயை
தாந்தாயை
யுக்மத்ருஷ்ட்யை
த்ரிலோசனாயை
மஹோத்கடாயை
ஹம்ஸகத்யை
850 ப்ரசண்டாயை
சண்டவிக்ரமாயை

வ்ருஷாவேசாயை நம:
வியக்மாத்ராயை
விந்த்யபர்வதவாஸி
[ன்யை
ஹிமவன்மேருநிலயாயை
கைலாஸகிரிவாஸின்யை
சாணூரஹந்த்ர்யை
தனயாயை
நீதிஞ்ஞாயை
860 காமரூபிண்யை
வேதவித்யாவ்ரததாயை
தர்மசீலாயை
அனிலாஸனாயை
அயோத்யாநிலயாயை
வீராயை
மஹாகாலஸமுத்பவாயை
வித்யாதரப்ரியாயை
ஸித்தாயை
வித்யாதரநிராகிருத்யை
870 ஆப்யாயந்த்யை
வஹந்த்யை
பாவன்யை
போஷண்யை
கிலாயை
மாத்ருகாயை
மன்மதோத்பூதாயை
வாரிஜாயை
வாஹனப்ரியாயை
கரீஷிண்யை
880 ஸ்வதாயை வாண்யை
வீணாவாதனதத்பராயை
ஸேவிதாயை
ஸேவிகாயை நம:
ஸேவாயை
ஸினீவால்யை
சருத்மத்யை
அருந்தத்யை
ஹிரண்யாக்ஷ்யை
மணிதாயை
890 ஸ்ரீவஸுப்ரதாயை
வஸுமத்யை
வஸோர்த்தாராயை
வஸுந்தராஸமுத்ப
வாயை
வராரோஹாயை
வரார்ஹாயை
வபுஸ்ஸங்கஸமுத்ப
ஸ்ரீபல்யை [வாயை
ஸ்ரீமத்யை
ஸ்ரீசாயை
900 ஸ்ரீநிவாஸாயை
ஹரிப்ரியாயை
ஸ்ரீதர்யை
ஸ்ரீகர்யை
கப்ராயை
ஸ்ரீதராயை ஈசவீரிண்யை
அனந்தத்ருஷ்டயே
அக்ஷுத்ராயை
தாத்ர்யை
ஈசாயை
910 தனதப்ரியாயை
தைத்யஸிம்ஹாநாம்நிஹ
ஸிம்ஹிகாயை [ந்த்ர்யை
ஸிம்ஹவாஹின்யை

ஸுஸேனாயை நம:
சந்த்ரநிலயாயை
ஸுஹிர்த்யை
சின்னஸம்சயாயை
பலஞ்ஞாயை
பலதாயை
920 வாமாயை
லேலிஹானாயை
அம்ருதாச்ரயாயை
நித்யோதிதாயை
ஸ்வயஞ்ஜ்யோதிஷே
உத்ஸுகாயை
அம்ருதஜீவின்யை
வஜ்ரதம்ஷ்ட்ராயை
வஜ்ரஜிஹ்வாயை
வைதேஹ்யை
930 வஜ்ரவிக்ரஹாயை
மங்கள்யாயை
மங்களாயை
மாலாயை
மலினாயை
மலஹாரிண்யை
காந்தர்வ்யை
காருட்யை
சாந்த்ர்யை
கம்பளாச்வதரப்ரியாயை
940 ஸௌதாமின்யை
ஜனானந்தாயை
ப்ருகுடீகுடிலானனாயை
கர்ணிகாரகராயை
கக்ஷாயை [ண்யை
கம்ஸப்ராணாபஹாரி
யுகந்தராயை நம:.
யுகாவர்த்தாயை
த்ரிஸந்த்யாயை
ஹர்ஷவர்த்தின்யை
950 ப்ரத்யக்ஷதேவதாயை
திவ்யாயை
திவ்யகந்தாயை
திவாபராயை
சக்ராஸனகதாயை
சக்ர்யை
ஸாத்வ்யை
நார்யை
சவாஸனாயை
இஷ்டாயை
960 விசிஷ்டாயை
சிஷ்டேஷ்டாயை
சிஷ்டாயை
சிஷ்டப்ரபூஜிதாயை
சதரூபாயை
சதாவர்த்தாயை
வினீதாயை
ஸுரபயே
ஸுராயை
ஸுரேந்த்ரமாத்ரே
970 ஸுத்யும்னாயை
ஸுஷும்னாயை
ஸூர்யஸம்ஸ்திதாயை
ஸமீக்ஷாயை
ஸத்ப்ரதிஷ்டாயை
நிவ்ருத்யை
ஞானபாரகாயை [லாயை
தர்மசாஸ்த்ரார்த்தகுச

தர்மஞ்ஞாயை நம:
தர்மவாஹனாயை
980 தர்மாதர்மவினிர்மாத்ர்யை
தார்மிகாணாம் சிவப்ர
தர்மசக்த்யை [தாயை
தர்மமய்யை
விதர்மாயை
விச்வதர்மிண்யை
தர்மாந்தராயை
தர்மமத்யாயை
தர்மபூர்வாயை
தனப்ரியாயை
990 தர்மோபதேசாயை
தர்மாத்மனே
தர்மலப்யாயை
தாராதராயை
கபால்யை நம:
சாகலாயைமூர்த்யை
கலாகலிதவிக்ரஹாயை
ஸர்வசக்திவினிர்முக்
[தாயை
ஸர்வசக்த்யாச்ரயாச்ர
ஸர்வஸ்யை [யாயை
1000 ஸர்வேச்வர்யை
ஸூக்ஷ்மாயை [ரூபிண்யை
ஸூஸூக்ஷ்மஞ்ஞான
ப்ரதானபுருஷேசாயை
மஹாபுருஷஸாக்ஷிண்யை
ஸதாசிவாயை
வியந்மூர்த்யை
தேவமூர்த்யை
அமூர்த்திகாயை

ஸீதா ஸஹஸ்ர நாமம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீரகுநந்தனன் மிகுந்த சந்தோஷமடைந்து புளகாங்கித முற்று அஞ்சலிபந்தத்துட னிருந்து சீதாதேவியை ஸஹஸ்ரநாமங்களால் இவ்விதம் தோத்திரஞ் செய்தார்.

ஏ பரத்வாஜ! இந்த அற்புதமான ஸ்தோத்திரத்தை எவன் படிக்கிறானோ எவன் படிக்கும்படிசெய்கிறானோ அவன் மேலான ஸ்தானத்தை யடைவான். பிராமணன், க்ஷத்திரியன் வைசியன் இவர்கள் அழிவற்ற பிர்ம்மத்தை அடைவார்கள். சூத்திரனோவெனின் தனதான்யங்களை யடைந்து நற்கதியைப் பெறுவான். இதைத்தோத்திரஞ்செய்பவர்களுக்குச் சர்வமங்களங்களுமுண்டாகும். மரணபயம் ராஜபயம், சோரபயம், அக்கினிபயம், வியாதியம், கொடிய பகைவரின்பயம், சங்கடம், அநாவிருஷ்டி பயம் இவைகளுக் கெல்லாம் சாந்தி செய்வதற் கொப்பாகும். இதைப் பாராயணம் செய்தவர்கள் இஷ்டார்த்த சித்தியைப் பெறுவார்கள். எந்த இடத்தில் இந்த ஸீதா ஸஹஸ்ரநாமம் படிக்கப்படுகிறதோ அந்த இடத்தில் இராமர் ஸீதாதேவியுடன் சான்னித்தியமாக விளங்குவார். இதிற் சிறிதுமையமில்லை. மகா பாபங்களும் நாசமடையும்.

2-5வது சருக்கம்

முற்றிற்று.

26-வது சருக்கம்.

இங்ஙனம் இராமபிரான்சீதாதேவியை ஆயிர நாமங்களால் தோத்திரித்து மறுபடியும் வந்தனஞ் செய்து மனமகிழ்ச்சியுடன் கைகூப்பி நின்று கூறுகிறார்.

ஏ சுந்தரி ! கோரமான இந்த உருவத்தைக் கண்ட யான் மிகவும் பயமடைந்திருக்கிறேன். ஆகையால் வேறு உருவம் காட்டியருளவேண்டும் என்றார். இப்படிக்கூறியதும் சீதாபிராட்டி அவ்வுருவங்கரந்து சிறந்த தன்னுருவங்கொண்டு விளங்கினாள். அவ்வுருவம், சொர்ணத்தாமரை யொத்த நேத்திரங்களையும், தாமரை, கருநெய்தற்பூவை யொத்த வாசனையையும் இரண்டு கைகளையும் கறுத்த அளகபாரத்தையும், தாமரை மலரை யொத்த சிவந்த பாத தாமரையையும், துளிரை யொத்துச் சிவந்த கரதலத்தையும் நெற்றியில் திலகத்தையும் அழகான அவயவங்களையுமுடையதாயிருக்கக் கண்டார். புன்னகை பூத்த முகமும் கொவ்வைக் கனியை யொத்த உதடுகளுமிருக்கக் கண்டார். அநந்தமான மகிமைக்கிருப்பிடமாகவுமிருக்கக் கண்டார். இந்த திவ்ய உருவத்தை கண்ட இரகுகுலதிலகன் அச்சத்தை யொழித்து, மனமகிழ்ச்சி யடைந்து, பரமேசுவரியை நோக்கிக் கூறுகிறார்.

இப்பொழுது என் ஜன்மம் சபலமாயிற்று. நான் செய்த தவமும் பலித்தது. நீ அவ்பக்தையாயினும் என் முன் பிரஸன்னமாய்க் கண்ணுக்குப் புலப்பட்டாயன்றோ? பிரதானம் முதலிய உலகம் யாவும் உன்னால் சிருஷ்டிக்கப்பட்டது. அவ்வுலகம் உன்னிடத்திலிருக்கிறது. அது உன்னிடமே லயமாகிறது. நீ தான் எல்லோருக்கும் உயர்ந்த கதியாகிறாய். சிலர் உன்னையே விகிருதி; வேறாகிய பிரகிருதி யென்கிறார்கள். பரமசிவனை ஆச்ரயித்த ஏ அம்பிகே ! பரமாத்ம சொரூபமறிந்த மற்றவர்கள் உன்னை சிவை யென்கிறார்கள். பிரதானம், புருஷன்; மகான் ஈசுவரன் அவித்தை நியதி, மாயை, காலன் முதலியவைகள் யாவும் உன்னிடமே உண்டாகின்றன. நீ தான் பராசக்தி. முடிவில்லாதவள். பரமேஷ்டி! பேதமற்றவள். பேதங்களையுடையவள். புருஷன், பரமேசுவரியா

லிய உன்னை அதிஷ்டானமாகக்கொண்டு பிரதானம் முதலிய பிர பஞ்சம் யாவற்றையும் படைத்து விகாரப்படுத்துகிறான். தேவன் உன்னுடன் சேர்ந்தே ஆநந்த மடைகிறான். நீ தான் பரமானந்தம். ஆநந்த மளிப்பவளும் நீ தான். நீ தான் பரமாகாசம். தேவர்களுக் குள் இந்திரனும் வேதமறிந்தவர்களுக்குள் பிரமதேவனும் சாங்கி யர்களுக்குள் கபிலரும் உருத்திரர்களுக்குள் சங்கரரும் அதிதி யின் குமாரர்களுக்குள் உபேந்திரரும் வசுக்களுக்குள் அக்கினியும் வேதங்களுக்குள் சாமவேதமும் சந்தசுகளுக்குள் காயத்திரியும் வித்தைகளுக்குள் அத்யாத்ம வித்தையும் கதிகளுக்குள் உத்தம கதியும் சக்திகளுக்குள் மாயையும் கணக்கர்களுக்குள் சித்திர குப்தனும் இரகசியங்களுக்குள் ஓங்காரமும் வர்ணங்களுக்குள் பிரா மண வர்ணமும், ஆசிரமங்களுக்குள் கிரகஹஸ்தாச்ரமமும், ஈசுவரர் களுக்குள் மஹேசுவரரும் புருஷர்களுக்குள் பிராணிகளின் மன துக்குள்ளிருக்கும் புருஷனும், உபநிஷத்துகளுக்குள் இரகசியோ பநிஷத்தும், அரசர்களுக்குள் ஈசானரும், யுகங்களுக்குள் கிருத யுகமும், அர்ச்சிராதி மார்க்கங்களுக்குள்சூரியனும்,வாக்குகளுக்குள் ஸரஸ்வதி தேவியும், நல்ல ரூபமுள்ளவர்களுக்குள் இலக்ஷ்மியும், மாயாவிகளுக்குள் விஷ்ணுவும், பதிவிருதைகளுக்குள் அருந்ததி யும், பக்ஷிகளுக்குள் கருடனும், சூக்தங்களுக்குள் புருஷஸூக்த மும், ஸாமங்களுக்குள் ஜ்யேஷ்டஸாமமும், ஜபம் செய்பத்தக்க வைகளுக்குள் சாவித்ரியும், யஜுஸுகளுக்குள் சதருத்திரியசூக்த மும், பர்வதங்களுக்குள் மஹாமேருவும், சர்ப்பங்களுக்குள் அனந் தனுமாக இருக்கிறாய்.

நீ தான் பரபிரமசொரூபம். எல்லாம் உன்மயமானது. இந்த ரூபம் பின்னமற்றது. எவருக்கும் விஷயமாகாதது. நிர்மலமானது. ஏக ரூபமுள்ளது. ஆதி நடு முடிவில்லாதது. தபசுக்கு வேறானது. சத்தியமானதும் இந்த ரூபம். இதை நான் நமஸ்கரிக்கின்றேன்.

வேதாந்த ஞானத்தால் உண்மை யுணர்ந்த பெரியோர்கள் உலகத்திற்கு உற்பத்திஸ்தானமானதும் பரமெனச் சொல்லப்படு வதும் பிரசித்தியுள்ளதுமான சொரூபத்தைப் பார்க்கிறார்கள். அந்த சொரூபத்தை நான் நமஸ்கரிக்கின்றேன். சூத்திரங்களெல்லா வற்றுள்ளுமிருப்பதும் பிரதானத்தின் சம்யோகத்திற்கும் வியோ கத்திற்கும் காரணமாக விருப்பதும் தேஜோமயமும் ஜனனமரண

மற்றதுமாகிய பிராணன் என்னும் பெயருடைய உன்னுடைய சொருபத்தை நமஸ்கரிக்கின்றேன். ஆதியந்தமில்லாததும் உலகத்தின் ஆத்மசொருபமானதும் பிரகிருதிக்கு வேறாக விருப்பதும் கூடஸ்தமானதும் அவ்யக்தமுமாகிய புருஷன் என்னும் பெயருள்ள உனது ரூபத்தை நான் நமஸ்கரிக்கின்றேன்.

எல்லாவற்றையு மாசிரயித்ததும், உலக மெல்லாவற்றிற்கும் காரணமும், எங்குமிருப்பதும் ஜனன மரணமில்லாததும், அணு முதலிய பேதமுள்ளதும், ஆதியிலிருப்பதும், மகத்தாயிருப்பதில் புருஷனுக் கொத்ததுமாகிய உன்னுருவத்தை நான் நமஸ்காரம் செய்கிறேன். பிரகிருதி அவஸ்த்தையுள்ளதும், முக்குணவடிவத்திற்குக் காரணமும், ஐசுவரியம், விஞ்ஞானம், வைராக்கியம், தருமம் இவைகளுடன் கூடியதும், ஈரேழுலகமாயிருப்பதும், ஜலத்திலிருப்பதுமாகிய உன்னுருவத்தை நான் நமஸ்கரிக்கிறேன். விசித்திரமான பேதமுடையதும், கணக்கற்ற பூதங்கள் வசிப்பதும், உலகத்திற்கு அண்டமெனக் கூறப்படுவதும், சமஸ்த வேதசுவரூபமும் ஒன்றானதும், ஆதியிலுமிருப்பதுமாகிய உன்னுருவத்தை நான் நமஸ்கரிக்கின்றேன். தன் தேஜஸால் நிறைந்த உலகமாயும், அதன் பேதமாயும், சூரியமண்டலத்திலிருப்பதுமாகியரூபத்தை நமஸ்கரிக்கிறேன். ஆயிரம் சிரசுடையதும், கணக்கற்ற சக்தியுள்ளதும் ஆயிரம் கைகளுடன் கூடியதும், புராண புருஷ சுவரூபமுடையதும் ஜலத்திற்குள் சயனித்திருப்பதும், நாராயணன் என்னும் பெயருள்ளதுமாகிய உருவம் உன்னுடையது தான். அவ்வுருவத்தை நான் நமஸ்கரிக்கிறேன். கோரப்பற்களால் பயங்கரமாயும், தேவர்கள் வணங்கத்தக்கதும், பிரளயகாலாக்நிக்குச் சமமான ரூபமுள்ளதாயும், பூதங்கள் அண்டங்களிவைகளின் விநாசத்திற்குக் காரணமாயுமிருக்கிற காலன் என்னும் பெயருள்ள உன் ரூபத்தை நான் நமஸ்கரிக்கிறேன். ஆயிரம் படங்களால் பிரகாசிப்பதும், பாதளத்தில் இருப்பதும், அப்பிரமேயமும், பாரங்களெல்லா வற்றையும் வகிப்பதில் திறமையுள்ளதும், அனந்தன் என்னும் பெயருள்ளதுமாகிய உன்னுருவத்தை நான் நமஸ்கரிக்கிறேன். தடைபடாத பிரபுத்தன்மை யுள்ளதும், மூன்று கண்களுடையதும, பிரமம் ஆத்மா ஆனந்தம் இவைகளின் இரசமறிந்ததும், ஒன்றானதும் பிரளய காலத்தில் எஞ்சிநிற்பதும், ஆகாயமார்க்கத்தில் கூத்தாடு

வதும், ருத்திரன் என்று பெயருள்ளதுமாகிய உன்னுருவத்தை நான் நமஸ்கரிக்கிறேன். துக்கமில்லாததும் விமலமும் பரிசுத்தமும் சுரர்களாலும் அசுரர்களாலும் நமஸ்கரிக்கத் தகுந்த பாத பத்மங்களுடையதும் மிகவும் மனோஞ்ஞமும் விசாலமானதும் வெண்மை வர்ணமுள்ளதுமாகிய உன்னுருவத்தை நான் அடிக்கடி நமஸ்கரிக்கிறேன் என இரகுவம்சத்தில் பிறந்த இராமச்சந்திரன் சொல்லி வைதேஹியாகிய அம்பிகையைப்பிரார்த்தித்துக்கொண்டே அஞ்சலி செய்த வண்ணம் பக்கத்தில் வந்து நின்றார்.

இங்ஙனம் இராமச்சந்திரன் கூறியதைக் கேட்ட சீதாபிராட்டி புன்னகையுடன் அவரை நோக்கி, என் வார்த்தையொன்று கேட்க வேண்டும். இராஜசிரேஷ்டனே! இந்த இராவணனைச் சங்கரிப்பதன் பொருட்டு நான் கொண்ட உருவத்துடன் மானசோத்தரமலையின் கண் நான் வசிக்கிறேன் நீர் இயற்கையில் நீலநிறமுடையவர். இராவணனால் அடியுண்டதால் சிவப்புவர்ணமுடையவரானீர். அந்த இரு நிறத்துடன்கூடியஉம்மோடு இங்கு வசிக்கின்றேன். ஏ இராம! ஏதேனும்வரம்வேண்டுமாயின்என்னிடம் பெற்றுக்கொள்ளும் என்றாள்.

ஏ பரத்வாஜ! இவ்வசனததைக் கேட்ட வீரனாகிய இராகவன் ஓரம்சத்துடன் பருவதத்தின் கண்ணிருக்கப் பிரதிக்ஞைசெய்த பரமேசுவரியை நோக்கி, மகா பாக்கியம் செய்த ஏ சீதே! இப்போது தரிசிக்கத் திருவருள் புரிந்தஈசுவரரூபம் என் இருதயத்தினின்றும் என்றும் மாறாதிருக்க அருள் புரியவேண்டும். ஏ கல்யாணி! என் சகோதரர்களும் விபீஷணன், சேனாபதி முதலியவர்களும் இராவணனால் வெருட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களை என்னிடம் சேர்பிக்கவேண்டும் என்றார். ஏ பரத்வாஜ! இச்சமயம் ஆகாயத்தில் துந்துபி வாத்தியம் முழங்கிற்று. இராமர் சீதை இவ்விருவர்மீதும் புஷ்பமாரி பொழிந்தது. அப்பொழுது சீதாபிராட்டி இராமரைப் பார்த்து "அவ்விதமே ஆகும்" என்றனள். பிறகு இராமச்சந்திரப்பிரபு பிரமதேவர் முதலியவர்களை அவர்களிருப்பிட மனுப்பிவிட்டு சீதாதேவியுடன் அயோத்திக்குப் புறப்படலாயினர்.

ஸ்ரீராமச்சந்திரர் விஜயத்தைக் கூறும்

26-வது சருக்கம்.

முற்றிற்று.

27-வது சருக்கம்

இராகவன் சீதாதேவியுடன் புஷ்பகவிமானத்தின்மீதேறிக் கொண்டு அயோத்திக்கு வந்து சேர்ந்தார். அந்த ஓசை கேட்டதும் இராமனைக் காணவேண்டுமென்கிற அவாவுடன் பரதன் முதலியவர்களும் யோதசிரேஷ்டர்களும் எதிர்கொண்டுவந்து வரவேற்று மனமகிழ்வுற்று வணங்கினார்கள். கமலமலரையொத்த கண்களையுடைய இராமச்சந்திரபிரபு தமது கிருகம் வந்ததும் வானரர் முதலிய யாவருக்கும் நடந்த விசேஷங்களைத் தெரிவித்தார்.

இதைக் கேட்ட அவர்களனைவரும் சீதாதேவியையும் இராமனையும் தேவியென்றும் மதுசூதனனென்றும் தெரிந்துகொண்டு நன்று! நன்று!! என ஆச்சரியமடைந்து அவர்களை மெய்யன்போடு வணங்கிப் புகழ்ந்து தத்தம் இருப்பிடம் சென்றனர். மகரிஷிகளும் சீதாராமர்களைக் கொண்டாடி ஆசிர்வதித்தனர். பிறகு தத்தம் இருப்பிடம் ஏகினர். இராமச்சந்திரபிரபு தமது சகோதரர்களுடன் சேர்ந்து பூமண்டலத்திலுள்ள பகைவர்களைவென்று சுகமாக இராஜ்யபரிபாலனம் செய்துவந்தனர். வானரர்களுக்கு மிகுதியும் நன்மை செய்தார்கள். உத்தமமான சரயூநதிக்கரையில் பலவித யாகங்கள் செய்தார். பதினோராயிரமாண்டுக்குச் சிறிது அதிகமாகவே இராமபிரான் இராஜ்யபரிபாலனம் செய்துவந்தார். தேவர், கின்னரர், வித்தியாதரர், உரகர்கள் யாவரும், குணங்களுக்கு உத்தியானம் போன்றவரும் இலட்சுமிக்கு நாயகனுமாகிய இராமபிரானை எப்போதும் நமஸ்கரிக்கிறார்கள்.

ஏ பரத்வாஜ! இச்சரித்திரத்தை உனக்குக் கூறினேன். இதுவும் எனக்குத் தெரிந்த கொஞ்சத்தைத்தான் சொன்னேன். எங்கே "கூறியது கூறல்" என்னும் குற்றத்திற்குக் காரணனாய் விடுமோவென்கிறபயத்தால் இன்னுங்கூற என் மனம் துணியவில்லை. இந்த விஷயத்தை பிரமதேவரும் இரகசியமாகவே வைத்திருக்கின்றனர்.

ஆகையால் நானும் கூறவில்லை. அற்புதோத்தர காண்டத்தில் கூறிய வேதத்திற்குநிகரான இச்சரிதையைக்கேட்பவன் பாராயணம் செய்பவன், செய்விப்பவன் யாவரும் பரபிர்ம்ம சொரூபம் பெறுவார். காலையிலும் மாலையிலும் ஒரு சுலோகமேனும் பாராயணம் செய்பவன் நற்கதி பெறுவான். இருபத்தையாயிரம் கிரந்தங்க ளடங்கிய இராமயணத்தைப் பாராயனம்செய்வதாலுண்டாகும் பலனை இதில் ஒருசுலோகத்தைப் பாராயணம்செய்வதால் அடையலாம். இதைச் சிரவணம் செய்தவர் மறுபடி அன்னைவயிற்றில்உற்பத்தியாவதில்லை. முன்னொரு சமயம் பிரமதேவரது சபையில் ஒரு தட்டில் நான்கு வேதமும் ஒரு தட்டில் இந்த ராமாயணமும் வைக்கப்பட்டது. அப்பொழுது இச்சரித்திரமே மேன்மையுடையதாயிருந்தது. கங்கைக் கரையில் நான் தேவேந்திரனுக்கு இந்தச் சரித்திரத்தைக் கூறியிருக்கிறேன். இராமாயணம் என்கிற மகாரத்நம் பிரமதேவருடைய இருதயமாகிய பாற்கடலிலுண்டாயிற்று. பின் நாரத முனிவருடைய மனதிற்கும் பின் என்னுடைய மனதிற்கும் வந்திருக்கிறது. இராமாயண சரித்திர முழுதும் பிர்ம்மலோகத்திலிருக்கிறது. பூமி, பாதாளம், சொர்க்கம் இவ்விடங்களில் சிலசில பாகங்களிருக்கின்றன. இச்சரித்திரத்தின் கரைகண்டவர்கள் பிரமதேவர், நாரதர், நான் மூவருந்தான். நான்காவதவர் இல்லை. இதனை நீயறிந்துகொண்டு மனவமைதியுடனிரு. அற்புதகாண்டத்தில் கூறியதை மறுபடியும் சுருக்கமாகக் கூறுகிறேன்.

(1)ஸ்ரீராமரின் வரலாறு, (2) ஸ்ரீமதியின் சரித்திரம் (3) தண்டகாரண்ய வாசிகளாகிய முனிவர்களின் இரத்தத்தில், நாரதமுனிவரின் சாபத்தால் இலக்ஷ்மிதேவி மந்தோதரியின் வயிற்றிலுற்பத்தியாகி வைதேஹியானது (4) பரசுராமருக்கு இராமர் விசுரூபந்தந்த வரலாறு. (5) ரிசியமுகபருவதத்தில் பிரமசாரியாகிய அனுமான் நான்கு கைகளுடன் இராமரைத் தரிசித்தது. (6) இலக்குமணனது கோபாக்கினியால் சமுத்திரம் வற்றிப்போன விவரம். (7) சுக்ரீவனிடம் நட்புக்கொண்டது. (8) இராமபிரான் இராஜ்யமடைந்தபின் முனிவர்களின் சன்னிதியில், ஸஹஸ்ரமுகராவணன் ரிசியமூக பர்வதத்திலிருந்ததைச சீதாபிராட்டியால் அறிந்துகொண்டு, சகோதரர்கள் வானரர் இவர்களுடன் புஷ்கரத்திவு

சென்றது. (9) சீதையின் ஈசுவரரூப வர்ணனை. (10) ஸஹஸ்ரமுக இராவணனின் வரலாறு. (11) இராமர் அயோத்தியை அடைந்தது. இவ்வளவு தான் சரித்திரச் சுருக்கம்.

இச்சரித்திரச் சுருக்கத்தைப் பாராயணம் செய்பவனும் இராமருக்கு அன்பனாகிறான். இதைப் படிப்பவன் பாபங்களிலிருந்து விடுபட்டு பரிசுத்தனாகிப் புண்ணியத்தை யடைகின்றான். தீர்த்த ஸ்நானஞ் செய்த பலனையும் யாகபலனையும் பெறுகிறான். யுத்தத்தில் ஜயமும் பெறுவான். சிந்தனைக்கெட்டாத இராமச்சந்திரரையும் பூபுத்திரியாகிய சீதையையும் வணங்குகிறவனும் இந்தப் புண்ணிய சரிதையைச் சிரவணம் செய்பவனும் மறுபடி அன்னைவயிற்றில் வாசஞ் செய்வதில்லை.

ஸ்ரீவான்மீகி முனிவர் திருவாய் மலர்ந்தருளியதும்
ஆதிகாவ்யமுமாகிய ஸ்ரீமத்ராமாயணத்தின்
அற்புதோத்தர காண்டத்தில் சீதாராமரின்
சேர்க்கையைக் கூறும்

27-வது சருக்கம்

முற்றிற்று.

அற்புதராமாயணம்
முற்றிற்று.